விலை : 20.00
பக்கங்கள் : இருபத்து நான்கு

Registered as a Newspaper in Srilanka

# வலம்புரி
Valampurii

website : www.valampurii.lk
E-mail: valampurii@yahoo.com




ராம்கோ
THE RAMCO CEMENTS LIMITED
RAMCO
SLS 107 தரம் கொண்டதும், உலகதர 14001, 9001 சான்றிதழ் பெற்றுள்ள ஒரே சீமெந்து ராம்கோ



சங்கு 16 வள்ளுவர் ஆண்டு 2046 பங்குனி 04 புதன்கிழமை (18.03.2015) தொலைபேசி 222 3378, 222 7829 ஒலி 089


# கூட்டமைப்பை பிளவுபடுத்த முயற்சிக்கிறார் ரணில்!



## முதலமைச்சர் விக்னேஸ்வரன் பகிரங்கமாக தெரிவிப்பு

(கொழும்பு) வட மாகாணத்திலிருந்து படையினர் வெளியேற்றப்பட மாட்டார்கள் என பிரதமர் ரணில் விக்கிரமசிங்க என்னிடம் கூறிய விடயம் உண்மையானது. அதனை அவர் தற்போது மறுக்கலாம். என்னுடைய கருத்து பொய்யானது என்றால் படையினர் வெளியேற்றம் தொடர்பில் அவருடைய நிலைப்பாடு என்ன என்பதை வெளிப்படுத்த வேண்டும்.

நான் முதலமைச்சரை சந்திக்கப்போவதில்லை, நாடாளுமன்ற உறுப்பினர்களை மட்டும் சந்திப்பேன் என அவர் கூறும் கருத்துக்கள் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பினை பிளவுபடுத்தும் ஒரு முயற்சியாகவோ அல்லது ஒரு உபாயமாகவோதான் நான் பார்க்கிறேன் என வட மாகாண முதலமைச்சர் சி.வி.விக்னேஸ்வரன் தெரிவித்துள்ளார். (23ஆம் பக்கம் பார்க்க)

## மோடிக்கு பரிசுப் பொருள் வழங்கக் கூட எமக்கு அனுமதி அளிக்கப்படவில்லை


### முதலமைச்சர் விக்னேஸ்வரன் கவலை

(கொழும்பு)

இந்தியப் பிரதமர் நரேந்திர மோடிக்கு பரிசுப் பொருள் வழங்குவதற்கு கூட எமக்கு அனுமதி அளிக்கவில்லை என வடமாகாண முதலமைச்சர் சி.வி.விக்னேஸ்வரன் கவலை வெளியிட்டுள்ளார்.

கடந்த 14 ஆம் திகதி இந்தியப் பிரதமர் மோடி யாழ்ப்பாணத்திற்கு விஜயம் மேற்கொண்டிருந்தார். எனினும் பாதுகாப்பு காரணங்களைக் காட்டி வடக்கு மாகாண சபை உறுப்பினர்கள் உட்பட பலர் பாதுகாப்பு பிரிவினரால் அசௌகரியங்களுக்கு உள்ளாக்கப்பட்டிருந்தனர் என விக்னேஸ்வரன் தெரிவித்தார். அவர் மேலும் தெரிவிக்கையில்,

எங்களுடைய உண்மையான மனநிலையை கூட வெளிப்படுத்த முடியவில்லை. இந்திய பிரதமரின் வருகை குறித்து 24ஆம் பக்கம் பார்க்க....



## தேசிய கீதத்தை தமிழில் பாட எவ்விதமான தடையும் இல்லை

(கொழும்பு)


இலங்கை தேசிய கீதத்தை தமிழ் மொழியில் பாடுவதை தடை செய்ய சிவில் நிர்வாக, கல்வித்துறை மற்றும் இராணுவ அதிகாரிகளுக்கு அதிகாரம் கிடையாது. இது அரசியலமைப்பு உரிமையாகும். இதை தடை செய்வது சட்ட விரோதமாகும். இந்த சட்டபூர்வ உரிமை நாடு முழுக்க அமுலாகும் விதத்தில் நடவடிக்கை எடுக்கப்படும்.

இது தொடர்பில் ஒரு சுற்றறிக்கை ஜனாதிபதி செயலகத்தால் அனுப்பி வைக்கப்படும்.

அதற்கு மேலதிகமாக தேசிய பாதுகாப்பு சபையிலும் இதுபற்றி அறிவிப்பேன் என தேசிய நிறைவேற்று சபை உறுப்பினரும், ஜனநாயக மக்கள் முன்னணி தலைவருமான மனோ 23ஆம் பக்கம் பார்க்க....

## இந்தியாவின் செயற்பாடு முட்டாள்தனமாகவுள்ளது

### 13 குறித்து பெங்கமுவே தேரர் கருத்து



(கொழும்பு)

ஈழம் உருவாகினால் இந்தியாவுக்கு பாரிய அச்சுறுத்தலை ஏற்படுத்த கூடும் என்பதை புரிந்து கொள்ளாமல் இந்தியா முட்டாள்தனமாக செயற்படுகின்றது என தேசப்பற்றுடைய பிக்குகள் முன்னணியின் பொது செயலாளர் பெங்கமுவே நாலக்க தேரர் தெரிவித்துள்ளார். கொழும்பில் நேற்று இடம் 24ஆம் பக்கம் பார்க்க....

## சுகாதார அமைச்சின் நியதிச்சட்டம் ஏற்பு

(யாழ்ப்பாணம்)

வடக்கு மாகாண சுகாதார அமைச்சின் நியதிச்சட்டம் சபையில் ஏகமனதாக திருத்தங்களுடன் ஏற்றுக்கொள்ளப்பட்டுள்ளது.

சுகாதார அமைச்சின் 2 ஆம் 3 ஆம் வாசிப்பு மீதான விவாதம் நேற்று சபையில் எடுத்துக் கொள்ளப்பட்டது. குழு நிலைக்கு மாறிய சபையில் 16 சரத்துக்களை கொண்ட நியதிச்சட்டம் தொடர்பிலான விவாதங்கள் இடம்பெற்றன. 24ஆம் பக்கம் பார்க்க....

## 23-ம் திகதி வலி. வடக்கில் 400 ஏக்கர் காணி விடுவிப்பு

(யாழ்ப்பாணம்)

ஏற்கெனவே அறிவிக்கப்பட்டதன் அடிப்படையில் வலி.வடக்கு உயர் பாதுகாப்பு வலய பகுதியில் 1000 ஏக்கர் காணியை விடுவிப்பது என்ற அறிவிப்பின்படி முதற்கட்டமாக 400 ஏக்கரை விடுவித்து, அதில் மக்களை மீளக்குடியமர்த்த திட்டமிடப்பட்டுள்ளது. இந்த நிகழ்வு எதிர்வரும் 23ஆம் திகதி நடைபெறவுள்ளது.

இந்த நிகழ்வில் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன, பிரதமர் ரணில் விக்கிரமசிங்க ஆகிய இருவரும் கலந்துகொள்வர் என தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர் எம்.ஏ.சுமந்திரன் தெரிவித்துள்ளார்.

ஊடகவியலாளர்களின் கௌரவிப்பு நிகழ்வு நேற்று செவ்வாய்க்கிழமை கொழும்பு 23ஆம் பக்கம் பார்க்க....

## 857 பேருக்கு நிரந்தர நியமனம்

(யாழ்ப்பாணம்)

வடக்கு மாகாண சுகாதார அமைச்சின் கீழ் இயங்கும் திணைக்களங்களில் நீண்ட காலமாக அமைய, ஒப்பந்த அடிப்படையில் பணியாற்றிய 857 பேருக்கு நிரந்தர நியமனம் வழங்கப்படவுள்ளது.

இது தொடர்பாக வடக்கு மாகாண சுகாதார அமைச்சரின் ஊடகப் பிரிவு நேற்று வெளியிட்டுள்ள அறிக்கையில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது, கடந்த 24ஆம் பக்கம் பார்க்க....

## ஆயுள் முழுவதும் விடுதலைப் புலிகளால் எனக்கும் மகிந்தவுக்கும் உயிர் அச்சுறுத்தல்



### தொடரும் என்கிறார் கோத்தா

(கொழும்பு)

யுத்தம் இடம்பெற்ற காலப்பகுதியில் பாதுகாப்பு அமைச்சின் பதவியில் நானே அனைத்துத் தீர்மானங்களையும் எடுத்தேன் என முன்னாள் பாதுகாப்புச் செயலாளர் கோத்தபாய ராஜபக்ஷ தெரிவித்தார்.

மேலும் புனர்வாழ்வளிக்கப்பட்ட விடுதலைப் புலிகளின் போராளிகள் முழுமையாக அவர்களது சிந்தனையிலிருந்து விடுபட்டனரா என்பது தொடர்பில் இன்னும் எனக்குச் சந்தேகம் நிலவுகிறது என்றும் சுட்டிக்காட்டினார்.

நேற்று முன்தினம் இரவு தனியார் தொலைக் காட்சி ஒன்றுக்கு அளித்த நேரடி ஒளிபரப்புச் செவ்வியின் போதே அவர் இவ்வாறு தெரிவித்தார். இது தொடர்பில் அவர் மேலும் கூறுகையில்,

நான் பாதுகாப்புச் செயலாளராகப் பதவி வகித்த 24ஆம் பக்கம் பார்க்க....

நடுவுநிலை தவறா நன்னெறி காக்கும் உங்கள் நாளிதழ்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# யுத்த காலத்தில் காணாமல் போன லொறி 9 வருடங்களின் பின்னர் மீளக் கிடைப்பு

2006 ஆம் ஆண்டு காலப் பகுதில் யுத்த சூழ்நிலை காரணமாகக் காணாமற்போன தாகக் கூறப்பட்ட தென்மராட்சி கிழக்கு ப. நோ.கூ.சங்கத்துக்குச் சொந்தமான லொறி 9 வருடங்களின் பின்னர் நீதிமன்ற உத்தரவுக் கமைய சங்கத்திடமே மீள ஒப்படைக்கப்பட் டது. குறித்த லொறி வவுனியா பகுதியில் 2009 வரை பாதுகாக்கப்பட்ட நிலையில் அங்கிருந்து காணாமற்போயிருந்தது.

பல வருடங்களின் பின்னர் களுத்துறைப் பகுதி வாகன விற்பனை நிலையம் ஒன்றில் லொறி நிற்பது கடந்த பெப்ரவரி மாதம் 4 ஆம் திகதி தெரியவந்தது. களுத்துறைப் பகுதியில் உள்ள மோட்டார் வாகனங்கள் விற்கும் நிறுவனம் ஒன்றில் சம்பந்தப்பட்ட லொறி நிற்பதாகக் கிடைத்த தகவலையடுத்து களுத்துறை தெற்கு பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு செய்யப்பட்டது. இதனையடுத்து களுத்துறை பொலிஸ் நிலைய அதிகாரி உள்ளிட்ட குழுவினர் அங்கு சென்று லொறியை மீட்டனர்.

இதுதொடர்பான வழக்கு கடந்த வெள்ளிக்கிழமை வவுனியா நீதிமன்றில் விசாரணைக்காக எடுக்கப்பட்டபோது லொறியை சங்கத்தினர் எடுத்துச் செல்ல நீதிமன்று அனுமதி வழங்கியது. இந்த நிலையில் 9 வருடங்களின் பின் குறித்த லொறி யாழ்ப்பாணத்துக்கு எடுத்துவரப்பட்டு தற்போது சேவையில் ஈடுபடுத்தப்பட்டுள்ளது. (செ-11)


## விற்பனைக்கு

Offical Box chair
விற்பனைக்குண்டு.
தொடர்புகளுக்கு:-0766163678
(9820)

## தேவை

யாழ்.நகரிலுள்ள ஸ்ரூடியோ ஒன்றுக்கு வேலையாட்கள் தேவை.
1) Video Editing
2) Photoshop (Photo designer )
அனுபவமுள்ளவர்கள் இருபாலாரும் நேரில் சமுகம் தரவும். தகுதிக்கேற்ப ஊதியம் வழங்கப்படும்.
309, நாவலர் வீதி, ஆனைப்பந்தி, யாழ்ப்பாணம்
0777162339
(9824)

## பழுது பார்த்தல்

அனைத்து விதமான தையல் மெசின்களும் கடைகளிலும் வீடுகளிலும் வந்து திருத்திக் கொடுக்கப்படும்.
சூரி-0770258694
(9825)


# இறுதிப் போரில் மண்ணுக்குள் பல உண்மைகள் புதைப்பு

## வெளிகொணர வேண்டும் என மன்னார் ஆயர் உரை

இறுதிப்போரில் மண்ணுக்குள் புதைந்த உண்மைகள் இன்னும் வெளிவராமல் புதைந்த நிலையிலேயே உள்ளது என மன்னார் மறை மாவட்ட ஆயர் அதிவண.இராயப்பு ஜோசப் தெரிவித்துள்ளார்.

இவ்வாறு புதைந்து போயுள்ள உண்மைகளினை உயிரினை துச்சமென எண்ணி உண்மைகளினை வெளிக்கொணர ஊடகவியலாளர்கள் கொண்டுவர வேண்டும் எனவும் அவர் தெரிவித்துள்ளார்.

கொழும்பு தமிழ் சங்கத்தில் நேற்று பிற்பகல் ஆறு மணியளவில் ஊடகவியலாளர் எஸ்.நிக்சன் தலைமையில் நடைபெற்ற ஊடகவியலாளர் கௌரவிப்பு நிகழ்வில் பிரதம அதிதியாக கலந்து கொண்டு உரையாற்றும் போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்துள்ளார்.

அவர் அங்கு மேலும் உரையாற்றுகையில் நாட்டில் நடைபெற்ற இறுதிப்போரின் போது பல்லாயிரக்கணக்கான மக்கள் கொல்லப்பட்டிருந்தனர். யுத்த தவிர்ப்பு பிரதேசமாக குறித்த சில பகுதிகளை அரசாங்கம் அறிவித்து விட்டு மக்களை அந்த பகுதிகளுக்கு வரவழைத்து அங்கு கொத்து குண்டுகளை வீசி அப்பாவி பொது மக்களை கொலை செய்தது.

இதுதவிர போர் முடிவின் பின்னர் இராணுவத்திடம் ஒப்படைக்கபட்டவர்களும் வேறு பலரும் காணாமல் போகவைக்கப்பட்டுள்ளார்கள். இன்னும் பலர் பொது மக்கள் முன்னே கடத்தி செல்லப்பட்டார்கள்.

இத்தகைய உண்மைகளுடன் கொடிய போர் தொடர்பான பல உண்மைகளும் மண்ணோடு மண்ணாக புதைக்கபட்டுள்ளது. அந்த உண்மைகள் வெளிகொண்டு வரப்பட வேண்டும்.

இலங்கை பல இனங்களை, கலாசாரங்களை, வரலாற்றை கொண்ட நாடு. எனவே அதன்படி இங்கு வாழும் தமிழ் மக்களும் சுதந்திரமாக சுபீட்சமாக சகல உரிமைகளுடன் வாழ வேண்டும். இதற்கு தமிழ் மக்கள் அனைவரும் ஒன்று சேர வேண்டும் என்றார். (செ-11)


# ஓராம் ஆண்டு நினைவஞ்சலி



தோற்றம் 07 - 11 - 1956
மறைவு 28 - 03 - 2014

## அமரர் சுப்பிரமணியம் விநாயகமூர்த்தி
(வடமராட்சி கிழக்கு பேருந்து உரிமையாளர்)

அன்புடனும் பண்புடனும் பாசமழை பொழிந்து
ஊர் உலகம் எம்மைப் போற்ற
நல்லறிவு புகட்டி வாழ வழி காட்டி
எம் உயர்வுக் கெல்லாம் ஏணியாக நின்று
எம்மை உயர்த்தி விட்ட அன்புத் தெய்வமே!
நீங்கள் மறைந்து ஆண்டு ஒன்று சென்றாலும்
உங்கள் நினைவுகளைச் சுமந்து வாழ்கின்றோம்
ஆத்மா சாந்தியடைய பிரார்த்திக்கின்றோம்.

செம்பியன்பற்று தெற்கு,
செம்பியன்பற்று.
குடும்பத்தினர்
(சி-386)



# உவகையுடன் உளம் மகிழ்ந்து வாழ்த்துகின்றோம்

திரு.சதாசிவம் புண்ணியமூர்த்தி
இ.அ.சே-தரம்-I

10.03.2015 அன்று கொழும்பு றோயல் கல்லூரியில் நடைபெற்ற அதிபர்களுக்கான பதவி உயர்வு வழங்கும் நிகழ்வில் இலங்கை அதிபர் சேவையில் முதலாம் தர அதிபர் சேவை நியமனத்தைப் பெற்ற எமது பாடசாலை முதல்வர் திரு.சதாசிவம் புண்ணியமூர்த்தி அவர்களைப் பாராட்டி வாழ்த்துவதுடன், இவர் மேலும் தமது சேவையில் உயர்வடைந்து நலமுடனும் வளமுடனும் வாழ வாழ்த்துகின்றோம்.

கிளி/ இராமநாதபுரம் கிழக்கு
அ.த.க பாடசாலை இராமநாதபுரம், கிளிநொச்சி. (9823)
ஆசிரியர்கள், கல்விசாரா ஊழியர்கள்

# 09ஆம் ஆண்டு நினைவஞ்சலி

அன்னை மடியில் 1951 - 02 - 09
ஆண்டவன் அடியில் 2006 - 03 - 18



## அமரர் அருமைநாயகம் ஆமோஸ்

பாசத்தின் பிறப்பிடமாய் பண்பின் உறைவிடமாய் அன்புக்கு இலக்கணமாய் வாழ்வின் வழிகாட்டியாய் வாழ்ந்த எம் குலவிளக்கே! எம் வாழ்வில் ஒளி விளக்கேற்றிய எம் அன்பு அப்பாவே! எங்கள் வாழ்வில் எத்தனை கோடி இன்பங்கள் இருந்தாலும் -அது அத்தனையும் நீங்களாகுமா அப்பா! ஒன்பது ஆண்டுகள் என்ன ஒன்பதாயிரம் ஆண்டுகள் சென்றாலும் உங்கள் நினைவுகள் எம் மனதினில் எப்போதும் தெய்வமாக சுமந்து நிற்போம் அப்பா!

எம் வாழ்வில் என்றும் உங்கள் துணை தொடர இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்

ஆமோஸ் மில்
தர்மபுரம், பரந்தன்.
(9821)
பிரிவால் துயருறும்
மனைவி, பிள்ளைகள்,
மருமகன், பேரப்பிள்ளைகள்



# 50வது ஆண்டு திருமண வாழ்த்து

சி.இராசேந்திரம் நாகம்மா
தம்பதிகள்

விண்மீன்கள் புன்னகையால்
புது கவிதைகள் பாடிடுமே!
பூங்காற்றும் தென்றலும் சேர
இசை சாரால் தூவிடுமே!
சூரியனும் சந்திரனும்
தன் ஒளிகளால் வாழ்த்திடுமே!
சுற்றத்தார் சூழ நின்று போற்றிடுமே
வாழ்க பல்லாண்டு!
கையோடு கைசேர்த்து
இதயங்கள் இரண்டும் இணைந்து
பொன் விழா காணும் இரு
மனங்களை வாழ்த்துகின்றோம் மனதார.
வாழ்க பல்லாண்டு!
உலகமுள்ளவரை வாழ்ந்திடவே வாழ்த்தி
வணங்குகின்றோம் இறைவனையே!

வாழ்த்துவோர்
பிள்ளைகள், மருமக்கள்,
பேரப்பிள்ளைகள்.
கனகசபை வீதி,
மானிப்பாய்.
(9818)


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# முன்னாள் போராளிகளுக்கு வாழ்வாதாரத் திட்டம்

## பிரதமர் ரணில் தெரிவிப்பு

**புனர்வாழ்வளிக்கப்பட்ட தமிழீழ விடுதலைப்புலிகள் அமைபபின் உறுப்பினர்க ளுக்கு நிரந்த வருவாயை பெற்றுத் தரும் நோககில் வாழ்வாதார திட்டம் ஒன்றை அறிமுகப்ப டுத்த வேண்டும் என பிரதமர் ரணில் விக்கிரமசிங்க தெரி வித்துள்ளார்.**

இது தொடர்பான வேலைத்திட்டம் ஒன்றை ஆரம்பிப்பதற்காக குழு ஒன்று நியமிக்கப்பட்டுள்ளதாக பிரதமர் அலுவலகம் விடுத்துள்ள அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளது.

இதனிடையே, வவுனியா பூந்தோட்டம் புனர்வாழ்வு மத்திய நிலையத்தில், 49 முன்னாள் தமிழீழ விடுதலைப்புலி உறுப்பினர்கள் மாத்திரமே தற்சமயம் இருப்பதாக அந்த அறிக்கையில் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.

இதன்படி, புனர்வாழ்வு, இளைஞர் மற்றும் சிறுவர் விவகார ஆணையாளர் நாயகம் காரியாலயத்தின் அதிகாரிகளைக் கொண்ட குழுவொன்று தற்போது பணிகளை ஆரம்பித்துள்ளதாக பிரதமர் அலுவலகம் விடுத்துள்ள அறிக்கையில் மேலும் குறிப்பிடப்பட்டுள்ளது. (3-5)


### வேலையாள் தேவை

மிக்ஷர் பொதி செய்வதற்கு பெண் வேலையாள் தேவை. (சி-380)

தொடர்புகளுக்கு:- 021 225 5278, 077 772 5582

(சி-380)

### விற்பனைக்குண்டு

முத்து மணவறை விற்பனைக்குண்டு. (விலை விபரங்கள் நேரில்)

தொடர்புகளுக்கு : 0779789467

(9798)

### பெயர் மாற்றம்

நாவற்காடு அச்சுவேலி தெற்கு அச்சுவேலி எனும் முகவரியில் வசித்து வரும் செங்கமலம் ஆகிய நான் 16.03.2015 ஆம் நாள் தொடக்கம் எனது பெயரைச் சகல நடவடிக்கைகளுக்கும் தம்பிராசா புஸ்பமலர் என்றே பயன்படுத்துவேன் என்பதை பகிரங்கமாக அறியத் தருகின்றேன்.

உண்மையுள்ள

(9813) த.புஸ்பமலர்

### விற்பனைக்கு

கே.கே.எஸ்.வீதியில் அமைந்துள்ள 3 மாடிக்கட்டடம் விற்பனைக்கு உண்டு.

தொடர்புகளுக்கு:- 077 873 6561

### வாழ்க்கையில் வெறுப்பா?

பிரச்சினை எதுவானாலும், எம்முடன் தொலைபேசியில் அல்லது நேரில் பேசுங்கள்.

இரகசியங்களைப் பேணுவோம்.

காலை 9.00 – பி.ப 1.00

மதச்சார்பற்றது

கைகொடுக்கும் நண்பர்கள்

104, 4ஆம் குறுக்குத் தெரு, யாழ்ப்பாணம்.

021 222 8117, 0779008776

(சி-342)


## தோடு கண்டெடுப்பு

(யாழ்ப்பாணம்)

யாழ். போதனா வைத்தியசாலை வளாகத்தினுள் விடுதி இலக்கம் 15 இல் கண் டெடுக்கப்பட்ட அணிகலன் (தோடு) ஒன்று போதனா வைத்தியசாலைக் காரியாலயத்தில் ஒப்படைக்கப்பட்டுள்ளது.

உரியவர்கள் தகுந்த ஆதாரம் காட்டி அலுவலக நேரத்தில் காரியாலய காசாளரிடம் பெற்றுக்கொள்ள முடியுமென வைத்திய சாலைப் பணிப்பாளர் டாக்டர் எஸ். ஸ்ரீபவானந்தராஜா அறிவித்துள்ளார். (3)

## கருத்தரங்கு

(யாழ்ப்பாணம்)

க.பொ.த. (உ.த) பரீட்சைக்கு இவ் வருடம் தோற்றும் மாண வர்களுக்கான உயிரியல், (பிறப்புரிமை யியல்), இரசாயனவியல் (சேதன இரசாயனம்) ஆகிய பாடங்களுக்கான கருத்தரங்கு எஸ். நரேந்திரசிங்கம் ஆசிரியரால் நாளை வியாழக்கிழமை காலை 8.30 மணிக்கு வேம்படி பெண்கள் உயர்தர பாடசாலையில் நடத்தப்படவுள்ளது. (3-5)


## 31 ஆம் நாள் நினைவஞ்சலியும் வீட்டுக்கிருத்திய அழைப்பும்



| பிறப்பு | இறப்பு |
|---|---|
| 1948 | 2015 |
| 06 | 02 |
| 30 | 17 |

**அமரர் வீரவாகு கனகசுந்தரசுவாமி**

(ஓய்வு பெற்ற கிராம சேவையாளர், வடமாகாண சபை உறுப்பினர், புதுக்குடியிருப்பு)

கடந்த 17.02.2015 சிவராத்திரி நன்னாளில் சிவபதமடைந்த எமது குடும்பத்தின் குலவிளக்கு அவர்களின் 31 ஆம் நாள் நினைவஞ்சலி 19.03.2015 நாளை வியாழக்கிழமை அன்னாரது இல்லத்தில் இடம்பெற்று அதன் பின் நடைபெற்ற மதியபோசன நிகழ்விலும் கலந்து கொள்ளுமாறு அன்புடன் அழைக்கின்றோம் .

இதனை தனிப்பட்ட அழைப்பாக ஏற்று வருகை தரவும்

10 ஆம் வட்டாரம், புதுக்குடியிருப்பு. (9814) தகவல்: குடும்பத்தினர்.

## கிருஷ்ணா அடகு சேவை

பதிவு இல.J/DS/BR/472

மேற்குறிப்பிட்ட எமது ஸ்தாபனத்தில் 2014 ஆம் ஆண்டு 28.02.2014 இற்கு முன்னர் வைத்த அடகு நகைகள் யாவற்றையும் 2015 ஆம் ஆண்டு ஏப்ரல் மாதம் 15 ஆம் திகதி (15.04.2015) இற்கு முன்பு மீட்கவும். மீட்க முடியாவிட்டால் ஒரு பகுதி பணத்தைக் கட்டிப் புதுப்பித்துக் கொள்ளவும். புதுப்பிக்கத் தவறின் 15.04.2015 ஆம் திகதி விற்கப்படும் என்பதனை எமது வாடிக்கையாளர்களுக்கு அறியத் தருகின்றோம்.

உரிமையாளர் A.S.Surendran

| | |
|---|---|
| இல.370, | இல.09, |
| கே.கே.எஸ்.வீதி, | கன்னாதிட்டி வீதி, |
| யாழ்ப்பாணம். 021 490 0311 | யாழ்ப்பாணம்.021 222 5046 |

(சி-325)


## இராசி பலன்

18.03.2015

(பங்குனி 04, புதன்கிழமை)

சூரிய உதயம் காலை 6.18 மணிக்கு

திரயோதசி முன்னிரவு 8.51 மணிவரை

அவிட்டம் பிற்பகல் 3.48 மணிவரை

இராகுகாலம் 12.19-1.49 மணிவரை

சுபநேரம் 4.49-6.19 மணிவரை

பிரதோச விரதம்

வளவன்

**மேடம்:** ஆற்றல் மிக்கவர்களின் ஒத்துழைப்பு கிடைக்கும், பயண வாய்ப்புக்கள் கைகூடுவதற்கான சந்தர்ப்பமுண்டு, பணப்புழக்கம் அதிகரிக்கும் நாள், மதிப்பும் மரியாதையும் உயரும் நாள்.

**இடபம்:** சொல்லை செயலாக்கிக் காட்ட முற்படுவீர்கள், அரைகுறையாக இருந்த பணிகளை மீதியும் தொடர்வீர்கள், சமுதாயத்தில் உயர்ந்த நிலைக்கு வரத்தோன்றும்.

**மிதுனம்:** பகை விலகி பாசம் கூடும் நாள், தொழில் சம்பந்தமாக புதிய திட்டங்கள் தீட்டுவீர்கள், பூர்வீகச் சொத்துக்களால் நன்மையுண்டு, பயணங்களால் பலனுண்டு.

**கடகம்:** கவலைகள் தீர பரமேஸ்வரனை வழிபட வேண்டிய நாள், நேசித்த ஒருவருடன் யோசித்துப் பேசும் சூழ்நிலை உருவாகும், மருத்துவச் செலவுகள் அதிகரிக்கும்.

**சிம்மம்:** சிவாயநம என்று சொல்லி சிறப்படைய வேண்டிய நாள், குடும்பத்தினரிடையே அந்நியோன்னியம் அதிகரிக்கும் நாள், சிந்தனை ஆற்றலால் சிறப்படைவீர்கள்.

**கன்னி:** இனத்தார் பகை மாறி இன்பங்கள் கூடும் நாள், தொழிலை விருத்தி செய்யும் எண்ணம் மேலோங்கும், உள்ளன்போடு பழகியவர்களின் எண்ணிக்கை கூடும்.

**துலாம்:** கோரிக்கைகள் நிறைவேற கோயிலுக்குச் செல்ல வேண்டிய நாள், நிதிநிலை உயர்ந்து நிம்மதி கிடைக்கும், கொள்கைப்பிடிப்போடு செயற்படுவீர்கள்.

**விருச்சிகம்:** உறவினர் வருகையுண்டு, புதிய சொத்துக்கள் வாங்கும் எண்ணம் உருவாகும், சந்தித்த நண்பர்களால் சந்தோசமான தகவலொன்று வந்து சேரலாம்.

**தனுசு:** உடன் பிறப்புக்களின் ஒத்துழைப்பால் உற்சாகம் அடைவீர்கள், ஆரம்பத்தில் அச்சுறுத்தலாகத் தோன்றிய தகவல் முடிவில் ஆதாயத்தைக் கொடுக்கும்.

**மகரம்:** அன்பு நண்பர்களின் ஆதரவு பெருகும் நாள், பொதுவாழ்வில் புகழ்கூடும், எதிர்கால நலனில் அதிக அக்கறை காட்டுவீர்கள் வாக்கு மேன்மையுண்டு.

**கும்பம்:** தொழிலில் மேலதிகாரிகளை அனுசரித்துச் செல்வதன்மூலம் அனுகூலமுண்டு, விருப்பங்கள் நிறைவேற விநாயகரை வழிபட வேண்டிய நாள்.

**மீனம்:** மூத்த சகோதரர்கள் உங்களின் முன்னேற்றத்தில் அக்கறை காட்டுவர், உஷ்ண சம்பந்தமான ரோகங்கள் ஏற்படலாம், காரிய அலைச்சல்கள் ஏற்படலாம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஆத்ம ஞானத்தைத் தேடி

**ஆன்மீகம் 164**

## பயத்தை எதிர்கொள்ளல்



...இழப்பதற்கு எதுவுமில்லை என்பதை காண்பிப்பதற்கு குரு உங்களை முழுமையான பாதுகாப்பின்மைக்குள் எறிகிறார். உங்கள் மீது அவருடைய ஆழந்த பரிவினால் உங்கள் வளர்ச்சியின் மீது அவருடைய ஆழ்ந்த அக்கறையினால் அவர் உங்களுக்குப் பாதுகாப்புக் கொடுப்பதில்லை. வழக்கமான பாதுகாப்பு இல்லாததனால் நீங்கள் கடவுளை அடைகிறீர்கள்; நீங்கள் பிரபஞ்ச இருப்புத் தன்மையைப் புரிந்துகொள்கிறீர்கள்.

உங்களுடைய எல்லா அச்சங்களுக்கும் காரணம், இழப்பதற்கு எதுவுமில்லை என்பது உங்களுக்கு இன்னும் தெளிவாகத் தெரியாததுதான். ஒரே ஒருமுறை மரணத்தின் அருகாமையை நேருக்கு நேர் எதிர்கொண்டு விட்டீர்களானால், அதுவே இழப்பதற்கு எதுவுமில்லை என்பதையும் உங்களுடைய எல்லா அச்சங்களும் ஆதாரமற்றவை என்பதையும் காட்டிவிடும். குரு அவரது வழியில் இதை உங்களுக்குப் புரியவைத்துவிடுவார்.

அதனால் குருவிடமிருந்து தப்பிச் செல்ல முயற்சி செய்யாதீர்கள். உண்மையிலேயே நீங்கள் என்னவாக இருக்கிறீர்கள் என்பதைக் காட்டுவதற்காகவே அவர் இருக்கிறார் என்பதைப் புரிந்து கொள்ளுங்கள். உங்களின் உள்ளார்ந்த இயல்பு அச்சமின்மை. பல காலமாக நீங்கள், உங்களுக்குள் பயத்தைப் புகுத்தப்பட்டு வந்திருக்கிறீர்கள். நீங்கள் பல காலமாக உங்களுக்குள் எடுத்துக் கொண்டு விட்ட நெறிப்படுத்தல்களின் படிமங்களை குரு உடைக்க முயற்சி செய்கிறார்; அவ்வளவுதான். அவர் உங்களிடம் செயலாற்ற விசுவாசத்துடனும் அன்புடனும் அவரை அனுமதித்தீர்களானால், நீங்கள் உங்கள் கண் முன்னாலேயே உருமாற்றமடைவதைக் காணலாம்.

எனக்குப் பழக்கமான ஸ்வாமி ஒருவரைப் பற்றிய ஒரு சின்ன கதையைக் கூறுகிறேன்...

அந்த ஸ்வாமியின் அறையில் நிறைய கடிகாரங்கள் இருக்கும். ஒவ்வொன்றும் ஒவ்வொரு நேரத்தைக் காட்டும். நான் அது பற்றி ஒருநாள் அவரிடம் கேட்டேன். அவர் சொன்னார், நேரம் என்னுடைய எஜமான் அல்ல. நான்தான் எஜமான்! எனக்கு எந்த நேரம் வேண்டுமோ, அந்த நேரத்தை அந்த கடிகாரத்திலிருந்து எடுத்துக் கொள்வேன். அந்த ஸ்வாமி தான் உடலை விடப்போகும் நாளையும் நேரத்தையும் முன்கூட்டியே சொல்லிவிட்டார். இறப்பதற்கு முதல் நாள் இரவு, அவரது சீடர்களை எல்லாம் அவரைச் சுற்றி இருக்கச் செய்து கீர்த்தனைகளைப் பாடச் சொன்னார். அதில் ஒரு பாடகர் தனது இசைத் திறமையில் கொஞ்சம் கர்வம் உள்ளவர். அவர் அப்பொழுது பாடவில்லை. வழக்கமாகச் செய்வதைப் போல் ஸ்வாமி ஒரு துண்டுச் சீட்டில் ஏதோ எழுதி அதை அவரிடம் அனுப்பினார். அது ஏதோ ஒரு குறிப்பிட்ட பாடலைப் பாடுவதற்கான வேண்டு கோள் என்று அந்த சீடர் மகிழ்ந் தார். ஆனால், அவர் அந்த துண்டுச் சீட்டைத் திறந்து பார்த்த பொழுது... *(தொடரும்)*

பரமஹம்ஸ சுவாமி




**தாயின் கதறலால் உயிர் பிழைத்த அதிசய குழந்தை!**

அவுஸ்திரேலியாவில் இறந்துவிட்டதாக அறிவிக்கப்பட்ட குழந்தை ஒன்று உயிர் பிழைத்துள்ள சம்பவம் ஆச்சரியத்தை ஏற்படுத்தியுள்ளது.

அவுஸ்திரேலியாவில் வசிக்கும் கேட் என்ற பெண் கடந்த 5 ஆண்டுகளுக்கு முன்பு இரட்டைக் குழந்தைகளைப் பெற்றெடுத்தார்.



இதில் இவரது பெண் குழந்தை நலமாக இருந்தது. ஆனால் ஆண் குழந்தையின் நாடித் துடிப்புக் குறைந்து கொண்டே வந்து, நின்று விட்டதால் மருத்துவர்கள் குழந்தை இறந்துவிட்டதாக தெரிவித்துள்ளனர்.


இதைக் கேட்டு அதிர்ச்சியடைந்த கேட், தனது அறையை விட்டு எல்லோரையும் வெளியேறுமாறு கூறியுள்ளார்.

இதன்பின் தன் கணவர் டேவிட்டிடம் (David) குழந்தையை எடுத்து, தன் மார்பு மேல் வைக்க கூறியதுடன், கண்ணீர் பெருகியபடி குழந்தையைக் கட்டிப் பிடித்து, உடலைச் சூடேற்றியுள்ளார். இந்நிலையில் நீண்ட முயற்சிக்குப் பிறகு குழந்தை லேசாக அசைந்துள்ளது, இதனைத் தொடர்ந்து தேவையான மருத்துவ உதவிகள் அளிக்கப்பட்டதால் அக்குழந்தை உயிர் பிழைத்தது.

இதுகுறித்து குழந்தையின் பெற்றோர் கூறுகையில், கடந்த 5 ஆண்டுகளில் ஒரு தடவை கூட எங்கள் குழந்தை ஜாமிக்கு (துயஅநை) உ[illegible] என்றும் அவன் தற்போது ஆரோக்கியமாக இருக்கிறான் எனவும் தெரிவித்துள்ளனர்.




## ரவா ரொட்டி



**தே.பொருட்கள்:**

ரவை - 1 கப் (வறுத்தது)

கடலைமா - 1/2 கப்

கோதுமை மாவு - 1/2 கப்

தேங்காய் - 3 டேபிள்ஸ்பூன்

இஞ்சி - 1/4 டீஸ்பூன்

பச்சை மிளகாய் - 2

சர்க்கரை -1 டீஸ்பூன்

எண்ணெய் - 2 டேபிள் ஸ்பூன்

தண்ணீர் - தேவையான அளவு, உப்பு- தேவையான அளவு

**செய்முறை:**

முதலில் ஒரு பாத்திரத்தில் ரவை, கடலைமா , கோதுமை மா, தேங்காய், பச்சை மிளகாய், இஞ்சி, சர்க்கரை மற்றும் உப்பு ஆகியவற்றை சேர்த்துக்கொள்ள வேண்டும். பின்னர் அதில் தேவையான அளவு தண்ணீர் மற்றும் எண்ணெய் ஊற்றி ரொட்டி பதத்திற்கு பிசைந்து 20 நிமிடம் ஊற வைத்துக் கொள்ள வேண்டும். பின்பு ஒரு தோசைக்கல்லை அடுப்பில் வைத்து சூடேற்ற வேண்டும். பிறகு பிசைந்து வைத்துள்ள மாவை சிறிது எடுத்து அதனை கையால் ரொட்டி போன்று தட்டி, தோசைக்கல்லில் போட்டு, தீயை குறைத்து, எண்ணெய் ஊற்றி முன்னும் பின்னும் பொன்னிறமாக வேக வைத்து எடுக்க வேண்டும். இதேப்போல் அனைத்து மாவையும் ரொட்டிகளாக சுட்டு எடுக்க வேண்டும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# புகைப்படப் பொக்கிஷம்




புகையிரதப் பாதையில் விளையாட்டா?
இடம் : யாழ்.புகையிரத நிலையம் படங்கள் : விபுலானந் யாழ்.




அடித்து வலை உலர்த்தும் காட்சி
இடம் : நாவாந்துறை கடற்கரை



வலையில் சிக்கிய மீன்கள் பறியில்...
இடம் : நாவாந்துறை கடற்கரை



கடவுள் எனும் முதலாளி கண்டெடுத்த தொழிலாளி...
படங்கள் : தி.காயத்திரி - யாழ்.பல்கலைக்கழகம்.



அழகோ அழகு ; யாழ்ப்பாணக் கோட்டை



கூடி விளையாடு பாப்பா ஒரு குழந்தையை வையாதே...
இடம் : நல்லூர் படம் : எஸ்.உமாசுதன் - மிருசுவில்




நாவற்குழி புகையிரத பாலம்
படம் : சிறிதரன் - 300 வீட்டுத்திட்டம், நாவற்குழி



இணுவில் கந்தசுவாமி கோவில்
படங்கள் : தனோஜன்



யாழ்ப்பாணம் வரவேற்கிறது
இடம் : செம்மணி



வாழைக்குலைக்குள் குருவியின் வீடு
படங்கள் : எஸ்.எஸ்.லக்ஷன் - சுண்டுக்குளி



ஒரு மாலைக்காட்சி



பட்டபின்பே எல்லாம் புரிந்தது...
இடம் : புளியம்பொக்கணை படம் : வே.நயனீசன்



அன்புச் சகோதரிகள்
படம் : கீதன்

## அன்பு வாசகர்களே !

நீங்களும் புகைப்பட பொக்கிஷம் பகுதிக்கு உங்கள் கமராவில் சிக்கிய புகைப் படங்களை சம்பவ இடத்தை குறிப்பிட்டு உங்கள் பெயர், முகவரியுடன்

photosofvalampurii@gmail.com

என்னும் முகவரிக்கு அனுப்பி வையுங்கள் அல்லது நேரில்.

அடுத்த புதன் புகைப்பட பொக்கிஷம் வரும்



தாமரைக் குளம்
இடம் : கோணாவில் படம் : ஆர்.என்.ராஜேஸ் - கிளிநொச்சி

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# சிறுவர் அரங்கம்

1093



## முதல் வழக்கில் வெற்றி

...ஒருநாள் சக்கரவர்த்தி அக்பர் தர்பாரில் கூடியிருந்தவர்களை நோக்கி, "நமது நீதிமன்றத்தில் வழக்கு விசாரணைகள் ஒழுங்காக நடைபெறுகின்றனவா?" என்று கேட்டார்.

"மிகவும் சிறப்பாக நடைபெறுகின்றன பிரபு! நமது நீதிபதி ஏழை, பணக்காரன் என்ற பாகுபாடு பார்க்காமல் நியாயமாக நீதி வழங்குகிறார்!" என்று ஒரு அதிகாரி நீதிபதியைப் புகழ்ந்தார்.

பிறகு தர்பாரில் இருந்த அனைவரும் அதை ஆமோதிக்க, நீதிபதிக்கு உச்சி குளிர்ந்து விட்டது.

ஆனால் பீர்பால் மட்டும் எதுவும் பேசாமல் மௌனமாக இருந்ததை கவனித்த அக்பர், "பீர்பால்! நீ மட்டும் ஏன் மௌனமாக இருக்கிறாய்? மற்றவர்கள் கூறியது முற்றிலும் தவறு என்று நினைக்கிறாயா?" என்று கேட்டார்.

"முற்றிலும் தவறு என்று சொல்ல மாட்டேன். ஆனால் நமது வழக்கு விசாரணைகளும், நீதி வழங்குதலும் திருப்திகரமாக உள்ளது என்று நான் சொல்ல மாட்டேன்" என்றார் பீர்பால்.

அக்பர் அவரை மேலும் விளக்கம் கேட்க நினைக்கையில், வாயிற்காவலன் உள்ளே நுழைந்து, "பிரபு! ஒரு கிழவரும், இளைஞரும் நியாயம் கேட்டு வந்திருக்கிறார்கள்" என்றான். "அவர்களை வரச்சொல்!" என்றார் அக்பர்.

உடனே, தர்பாரில் ஒரு கிழவரும், ஓர் இளைஞனும் உள்ளே நுழைந்து சக்கரவர்த்தியை வணங்கினர்.

"என்ன விடயம்? உங்களில் யாருக்கு என்ன குறை?" என்று கேட்டார் அக்பர்.

"பிரபு! என் பெயர் அப்துல் ரஹ்மான்" என்று தன்னை அறிமுகப்படுத்திக் கொண்ட கிழவர் தொடர்ந்து, "நான் ஒரு சட்ட நிபுணன்! மாணவர்களுக்கு சட்டத்தின் நுணுக்கங்களையும், வழக்கு விசாரணைகளைப் பற்றியும் கற்பிக்கிறேன்.

இதோ நிற்கிறானே பிரமோத் பிஹாரி! இவன் என் மாணவனாக இருந்தவன்! இவன் மீது நான் குற்றஞ்சாட்ட வந்துள்ளேன்" என்றார்.

அந்த இளைஞன் செய்த குற்றம் குறித்து அக்பர் கேட்டார்.



"பிரபு! இவன் என்னிடம் மாணவனாக சேர விரும்பிய போது, நான் மாதம் மூன்று பொற்காசு வீதம் குரு தட்சிணை தர வேண்டுமென்றும், ஓராண்டு காலம் சட்டம் படிக்க வேண்டும் என்றும் கூறினேன்.

ஆனால், இவன் தான் பரம ஏழை என்றும், தட்சிணை கொடுக்க இயலாது என்றும் கூறினான்.

படிப்பு முடிந்ததும் வழக்கறிஞனாகி முதல் வழக்கில் வெற்றி பெற்றவுடன், முப்பத்தாறு பொற்காசுகள் சேர்த்து தருவதாகவும் வாக்களித்தான். அதை நம்பி இவனுக்கு ஓராண்டு காலம் கற்பித்தேன்.

இவன் மிகவும் கெட்டிக்கார மாணவன் என்பதால் ஓராண்டிலேயே மிகச் சிறப்பாக சட்ட நுணுக்கங்களைக் கற்றுக்கொண்டு விட்டான்.

நானும் இவன் வழக்கறிஞனாகி, முதல் வழக்கிலேயே வெற்றி பெறுவான் என்றும், தட்சிணையை மொத்தமாகக் கொடுப்பான் என்றும் நம்பினேன்" என்று சொல்லி நிறுத்தினார் கிழவர்.

"இப்போது பணம் தராமல் ஏமாற்றுகிறானா?" என்று அக்பர் கேட்டார்.

"இல்லை பிரபு! இவன் திடீரென வழக்கறிஞனாகப் பணி புரியும் யோசனையை கை விட்டு விட்டான்.

அந்தத் தொழிலில் ஈடுபடப் போவதில்லையாம்!" என்றார்.

உடனே அக்பர் அந்த இளைஞனை நோக்கி, "எதற்காக உன்னுடைய உத்தேசத்தை நீ மாற்றிக் கொண்டாய்?" என்று கேட்டார்.

"பிரபு! நான் சட்டம் பயின்று முடித்ததும் வழக்கறிஞர் தொழிலில் ஈடுபடுவதாகத்தான் இருந்தேன்.

ஆனால் என் சித்தப்பா திடீரென இறந்து போனார். அவர் தன்னுடைய உயிலில் அவருடைய அனைத்து சொத்துகளுக்கும் என்னை வாரிசாக்கி விட்டார். இப்போது நான் லட்சாதிபதி. அதனால் எந்த வேலையும் செய்யத் தேவையில்லை," என்றான்.

(தொடரும்)

03.2015

18

## இன்றைய நாளின் முன்னைய பதிவுகள்



- 1241 - போலந்தின் கிராக்கோவ் நகரம் மங்கோலியர்களினால் சேதமாக்கப்பட்டது.
- 1438 - ஹாப்ஸ்பேர்க்கின் இரண்டாம் ஆல்பேர்ட் ஜேர்மனியின் மன்னனாக முடி சூடினான்.
- 1850 - அமெரிக்கன் எக்ஸ்பிரஸ் நிறுவனம் ஆரம்பிக்கப்பட்டது.
- 1874 - வணிக உரிமைகளை வழங்கும் உடன்பாட்டில் ஹவாய் ஐக்கிய அமெரிக்காவுடன் கையெழுத்திட்டது.
- 1909 - ஐனார் டேசாவு குறுகிய அலை வானொலி அலைபரப்பியை உபயோகித்து முதலாவது ஒலிபரப்பாளரானார்.
- 1913 - கிரேக்கத்தின் முதலாவது ஜோர்ஜ் மன்னன் படுகொலை செய்யப்பட்டான்.
- 1922 - ஒத்துழையாமை இயக்கத்தில் ஈடுபட்ட மகாத்மா காந்தி ஆறு ஆண்டு சிறைத் தண்டனை பெற்றார். இரண்டு ஆண்டுகளில் விடுதலை ஆனார்.
- 1937 - டெக்சாஸ் மாநிலத்தில் நியூ லண்டன் நகரில் பாடசாலை ஒன்றில் ஏற்பட்ட இயற்கை வாயு வெடிப்பில் நூற்றுக்கணக்கான மாணவர்கள் ம்ற்றும் ஆசிரியர்கள் கொல்லப்பட்டனர்.
- 1940 - இரண்டாம் உலகப் போர்: பிரான்சையும் ஐக்கிய இராச்சியத்தையும் எதிர்த்துப் போரிட ஹிட்லரும் முசோலினியும் கூட்டிணைந்தனர்.
- 1945 - இரண்டாம் உலகப் போர்: 1,250 அமெரிக்க குண்டுவீச்சு விமானங்கள் பேர்லின் நகரைத் தாக்கின.
- 1945 - இரண்டாம் உலகப் போர்: ஜப்பானில் ஜப்பானுக்கும் நேச நாடுகளிக்கும் இடையில் ஒகினவா சமர் ஆரம்பமாகியது.
- 1962 - அல்ஜீரிய விடுதலைப் போர் முடிவுக்கு வந்தது.
- **1965 - சோவியத் விண்வெளி வீரர் அலெக்சி லியோனொவ் வஸ்கோத் 2 விண்கலத்தின் வெளியே 12 நிமிடங்கள் நடமாடி விண்வெளியில் நடந்த முதல் மனிதன் ஆனார்.**
- 1989 - எகிப்தில் 4,400 ஆண்டுகள் பழமையான பதனிடப்பட்ட உடல் பிரமிட் ஒன்றினுள் கண்டுபிடிக்கப்பட்டது.
- 1990 - கிழக்கு ஜேர்மனியில் 1932 ஆம் ஆண்டுக்குப் பின்னர் முதற் தடவையாக தேர்தல் இடம் பெற்றது.
- 2003 - ஐகக்கிய அமெரிக்கா ஈராக்குடன் போரை ஆரம்பித்தது. ஈராக்கின் மத்திய வங்கியிலிருந்து 1 பில்லியன் பெறுமதியான பணம் சதாம் ஹுசேனினாலும் அவரது குடும்பத்தினராலும் எடுத்துச் செல்லப்பட்டது.

### பிறப்புக்கள்

- 1828 - வில்லியம் கிரேமர், நோபல் பரிசு பெற்ற ஆங்கிலேயர் (இ. 1908)
- 1837 - குரோவர் கிளீவ்லாண்ட், ஐக்கிய அமெரிக்காவின் 22ஆவது, 24ஆவது குடியரசுத் தலைவர (இ. 1908)
- 1858 - ருடோல்ஃப் டீசல், ஜேர்மனியக் கண்டுபிடிப்பாளர் (இ. 1913)
- 1919 - இந்திரஜித் குப்தா, இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சித் தலைவர்களில் ஒருவர். (இ. 2001)
- 1936 - பிரடெரிக் கிளார்க், தென்னாபிரிக்க ஜனாதிபதி, நோபல் பரிசு பெற்றவர்

### இறப்புக்கள்

- 1996 - ஒடீசியஸ் எலீட்டிஸ், நோபல் பரிசு பெற்ற கிரேக்க எழுத்தாளர் (பி. 1911)
- 2007 - பாப் வுல்மர், துடுப்பாட்டக்காரரும் [illegible] பயிற்சியாளரும் (பி. 1948)



### அலெக்சி லியோனொவ்

அலெக்சி ஆர்க்கிபோவிச் லியோனொவ் 1934 ஆம் ஆண்டு மே மாதம் 30 ஆம் திகதி பிறந்தார். இவர் சோவியத்- ரஷ்யாவின் இளைப்பாறிய விண்வெளி வீரரும், சோவியத் வான் படையின் ஜெனரலும் ஆவார். இவர் மார்ச் 18, 1965 இல் விண்வெளி யில் நடந்த முதல் மனிதன் என்ற பெயரைப் பெற்றார். இவர் 1965 இலும் 1975 இலும் இரண்டு தடவைகள் சோவியத் ஒன்றியத்தின் வீரர் என்ற விருதைப் பெற்றார். லெனின் விருது பெற்றவர்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சூப்பர் ஸ்டார் ரஜினிகாந்த் வாழ்க்கை வரலாறு

82

...கேரக்டர் நடிப்பு

"அபூர்வ ராகங்கள்" படத்தில் தொடங்கி, எங்கள் நட்பு வளர்ந்தது. "அவர்கள்" படத்தின் படப்பிடிப்பு முடிந்த நேரத்தில் ரஜினியிடம், தொடர்ந்து ஸ்டைல் நடிப்பையே தந்து கொண்டிருக்கிறீர்களே. கொஞ்சம் கேரக்டர் நடிப்பிலும் கவனம் செலுத்தினால் என்ன? என்று கேட்டேன்.

ரஜினி அமைதியாக என்னிடம், கமல்! நீங்கள் உங்கள் வழியில் செல்லுங்கள். எனக்கு ஸ்டைல நடிப்புதான் சரி! என்றார்.


அவருடைய பதில் எப்போதுமே இப்படி நேரடியாகத்தான் வரும். சுற்றி வளைத்து பேசுவது என்பதே அவரிடம் கிடையாது.

"அவர்கள்" படத்தில் ரஜினியின நெகடிவ் நடிப்பு மிக வித்தியாசமாக அமைந்திருந்தது.

அவரும் அதை சிறப்பாகச் செய்திருந்தார். அப்போதுதான் அவரிடம் "அவர்கள்" நடிப்பை சுட்டிக்காட்டி மேற்கண்ட கேள்வியைக் கேட்டேன்.

"நினைத்தாலே இனிக்கும்" படப்பிடிப்பு, சிங்கப்பூரில் நடந்தது. தினமும் படப்பிடிப்பு முடிந்தபின், ரஜினி ஊரை சுற்றிப் பார்க்கக் கிளம்பி விடுவார். என்னையும் துணைக்கு அழைப்பார். எனக்கு மறுநாள் படப்பிடிப்புக்காக காலையிலேயே எழுந்தாக வேண்டும் என்பதற்காக தயங்குவேன். "அட, சும்மா வாங்க! சிங்கப்பூருக்கு எதுக்கு வந்திருக்கோம்!" என்று அழைத்துச் செல்வார்.

ஊர் சுற்றிவிட்டு எங்கள் இருப்பிடம் திரும்ப, நள்ளிரவு 2 மணிக்கு மேல் ஆகிவிடும். ரஜினியுடன் நீண்ட நேரம் சுற்றுவது எனக்கு சரிப்பட்டு வரவில்லை. அதனால் ஒரு மணி நேரம் முன்னதாகவே வந்துவிடுவேன்.



கமல்-ரஜினி- அபூர்வராகங்கள்

## சுறுசுறுப்பு

ரஜினி அதிகாலை 3 மணி, 4 மணிக்கு திரும்பி வருவார். ஆனால் மறுநாள் காலையில் பார்த்தால், முந்தின நாள் இரவு விழித்திருந்த அசதி அவரிடம் தெரியாது. பாலச்சந்தர் சார் இரவு 9 மணிக்கு தூங்கி காலை 5 மணிக்கே தயாராகி விடுவார். படப்பிடிப்பு தளத்துக்கு வந்தார் என்றால், காட்சியை தயார் செய்ய அரை மணி நேரமாவது ஆகும். அந்த இடைவெளியை நானும், ரஜினியும் வீணாக்குவது இல்லை. அருகே உள்ள பூங்காக்களிலும் நடைபாதைகளிலும் சிமெண்ட் சாய்மானங்கள் இருக்கும். அங்கே ஓய்வு எடுப்போம். நான் ஒரு இடத்திலும், ரஜினி வேறு இடத்திலும் இருக்க முடியாது. ஏனென்றால், டைரக்டர் அழைத்ததும் எழுந்து ஓடவேண்டும். எனவே, ஒரே இடத்தில் இருவரும் ஒருவர் தோள் மீது ஒருவர் தலை சாய்த்தபடி தூங்குவோம்.

ஒரே காரில் பயணம் செய்யும் போதும், விமான நிலையத்திலும் இப்படி தூங்கித்தான் ஓய்வு எடுப்போம். இதை எத்தனை பேர் நம்புவீர்களோ தெரியாது. ஆனால் உண்மை.

"அலாவுதீனும் அற்புத விளக்கும்" படப்பிடிப்பு சத்யா ஸ்டூடியோவில் நடந்தபோதுதான், இருவரும் இனி சேர்ந்து நடிப்பதில்லை என்று முடிவு எடுத்தோம். ஏனென்றால், நாங்கள் இருவரும் இணைந்து நடிக்கும்போது, படத்தயாரிப்பாளர்கள் எங்கள் இருவருக்குமே ஒரு தொகையை பேசிக் கொடுத்து விடுவார்கள். தனித் தனியாக நடித்தால் இருவருமே முன்னேற முடியும் என்று கருதி, அந்த முடிவுக்கு வந்தோம்.

(தொடரும்)

# கருவாச்சி காவியம்

## வைரமுத்து- 93



...போடா ஏலே போடா. எல்லாம் அந்துபோயி என் இத்த வேருக்குக் கீழ ஒட்டிக்கிட்டிருந்த ஒத்த வேரு நீயும் அத்துக்கிட்டு போறயா?

போ! ஒத்தையில பிள்ள பெத்தவளுக்கு ஒத்தையில சாகத் தெரியாதா? போங்கடா போறவனெல்லாம் போங்கடா!

அழுகை நிக்கல பாவம்- அழுகப் பெறந்தவளுக்கு.

சொக்கத்தேவன்பட்டியை கடக்கிற வரைக்கும் மாருல கல்லக் கட்டி நடந்த மாதிரி மனசு கனத்துத்தான் கெடந்துச்சு கொண்ணவாயனுக்கு.

கஞ்சி ஊத்துன வீட்ட விட்டுப் போறமே காத்தா அலஞ்சு திரிஞ்சு காட்ட விட்டுப் போறமே தீனிக்கு ஏறங்குற சென மாட்ட விட்டுட்டுப் போறமேங்குற வருத்தம் ஒரு பக்கமிருக்க நாம போன ஊடும் பாடும் ஒத்தாச பண்றதுக்குச் சின்னாத்தாவுக்கு நாதி இல்லையே அழகுசிங்கத்தத் தூக்க ஆளில்லையேங்கிற கவலதான் குறுக்குல குத்துது கொண்ணவாயன.

ஊரு கடந்து ஒத்தையடிப் பாதையிலவந்து சேர நெஞ்சில இருந்த பாரம் கொஞ்சமா எறங்க பையில இருந்த பாரம் கனக்குது லேசா.

பையத் தாண்டி எண்ணெய்ப் பசையக் கசிய விட்டு நான் இங்க இருக்கேங்குது உள்ளுக் கிருக்கிற அதிரசம் முறுக்கும் சீடையும் ஒண்ணுக்கொண்ணு முட்டிக் குட்டிக் கலாட்டாப் பண்ணி வருது.



என்னியக் கட்டப் போறவ பேரரென்ன பேரென்னன்னு பையிக்கு வெளிய பிதுங்கி நாக்கத் தொங்கப் போட்டுக் கேக்குது தேனிச் சந்தையில வாங்கித் திணிச்ச மஞ்சச் சீல.

அவ பேரு அய்யக்கா. அவ பேரு அய்யக்கான்னுக்னிங் மொழி பேசுதுக காயிதத்துல சுத்தி வச்ச கண்ணாடி வளவிக.

அவுந்த வேட்டியக் கட்ட அவன் கையத்தூக்கவும் எதேச்சையா மேல வந்த பையி மூக்குல ஒரு முட்டி முட்டிப் போனதுல அடிக்குது பைக்குள்ள அய்யக்கா வாசம்.

இன்னைக்கி நேத்துப் பழக்கமா அவனுக்கும் அய்யாவுக்கும். பத்துப் பதினோரு வயசுல ஊர்மாடு மேய்க்கப் போனவன் இவன்.

ஊர் மாட்டுக்குப் பின்னாலேயே சாணி பெறக்க வந்தவ அவ.

சாட்டைக்கம்புக்குக் கால் சட்டை போட்டு விட்ட மாதிரி இவன்.

முருங்கக் காய்க்கு முந்தான சுத்துன மாதிரி அவ.

இவன் விட மூணுமாசம் அவ பெரியவதான் ஆனா பெரிய வித்தியாசமில்ல உருவத்துல.

கொண்ணவாயன் அப்பன் ஒரு குடிகாரன்.

அய்யாக்கா அவுக ஆத்தா ஒரு ஒடுகாலி.

பொழச்சாப் பொழைங்க செத்தாச் சாங்கன்னு ரெண்டுபேரையும் தெருவுல விட்டுட்டாக அவன் அப்பனும் இவ ஆத்தாளும்.

மாடுதான் சொந்தபந்தம்னு ஆகிப் போச்சு இவனுக்கு; சாணிதான் கஞ்சின்னு ஆகிப்போச்சு அவளுக்கு.

கஞ்சிப் பொழுதுக்கு ஊர்மாடு ஓட்டிக்கெளம்பிடுவான் கொண்டவாயன். நாப்பது அம்பது மாடுகள முன்னுக்கவிட்டு இவன் பின்னுக்குப் போக- கூடையத் தூக்கிக்கிட்டுக் கூடவே வருவாக சாணி பெறக்கிற அஞ்சாறு பொம்பளைக. அந்தப் பொம்பளைக போடுவாளுகய்யா ஒரு சண்ட, சும்மா பானிப்பட்டு யுத்தம் மாதிரி ஒரு சாணிப்பட்டு யுத்தம்.

எந்த ஒரு மாடும் சாணி போடுறதுக்கு முன்ன மொதல்ல வாலத் தூக்கும். தூண்டிக்காரன் தக்கையிலயே கண்ணுவச்சிருக்கிற மாதிரி வால்லயே கண்ணுவச்சிருப்பாளுக சாணி பெறக்கிற பொம்பளைக.

எந்த மாடு வாலத் தூக்குதுன்னு கண்டுபுடிச்சு ஏஞ்சாணி ஏஞ் சாணின்னு எவ மொதல்ல கத்துறாளோ அவளுக்குத்தான் சட்டப்படி பாத்தியப்படும் சாணி.

(தொடரும்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மக்கள் விரும்பும் அரசாங்கத்தை நிறுவ சந்தர்ப்பம் வழங்குங்கள்

## ஜே.வி.பி.கோரிக்கை



(கொழும்பு)

மக்கள் விரும்பும் அரசாங்கத்தை அமைத்து கொள்வதற்கு மக்களுக்கு சந்தர்ப்பம் வழங்குங்கள் என மக்கள் விடுதலை முன்னணி தெரிவித்துள்ளது. கட்சியின் தலைமையகத்தில் நேற்று இடம்பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் கலந்து கொண்டு உரையாற்றிய போதே முன்னணியின் நாடாளுமன்ற உறுப்பினர் ரில்வின் சில்வா இதனை தெரிவித்துள்ளார்.

மகிந்தவின் சர்வாதிகார ஆட்சியை கவிழ்க்கும் வகையிலும், நிறைவேற்று அதிகாரம் கொண்ட ஜனாதிபதி முறைமையை நீக்கும் நோக்கிலும் 58 இலட்சம் மக்கள் ஜனாதிபதி தேர்தலின் போது மைத்திரிபால சிறிசேனவுக்கு வாக்களித்திருந்தார்கள்.

இதன் அடிப்படையில் கட்சி தலைவர்கள் மற்றும் சிவில் அமைப்புக்கள் தற்போதைய ஜனாதிபதிக்கு பூரண ஆதரவை வழங்கியிருந்தமை குறிப்பிடத்தக்கது.

நிறைவேற்று அதிகாரம் கொண்ட ஜனாதிபதி முறைமை இந்த நாட்டிற்கு பொருத்தமற்றது எனும் ம.வி.முவின் தலைவர் ரோஹண விஜேவீரவின் நிலைப்பாட்டிலேயே நாம் இன்றும் உள்ளோம் என ரில்வின் சில்வா தெரிவித்துள்ளார்.

கடந்த காலங்களில் முன்னெடுக்கப்பட்ட போராட்டங்களின் அடிப்படையில் எதிர்காலங்களில் நிறைவேற்று அதிகாரம் கொண்ட ஜனாதிபதி முறைமை நீக்கப்படும் எனும் நம்பிக்கை ஏற்பட்டுள்ளது.

புதிய தேர்தல் முறை ஜனநாயகத்தை உறுதிப்படுத்துவதுடன், அனைத்து மக்களின் பிரதிநிதித்துவத்தை பிரதிபலிக்கும் வகையில் சாதாரணமாக இருக்க வேண்டும்.

மேலும் ஜனாதிபதி தேர்தலின் போது ஜனாதிபதி மக்களுக்கு வழங்கிய வாக்குறுதிகளை நிறைவேற்ற வேண்டும் எனும் அடிப்படையில் எதிர்வரும் ஏப்ரல் மாதம் 23ஆம் திகதிக்கு பின்னர் பொது தேர்தலை நடத்த வேண்டும் என்பதை தற்போதைய அரசாங்கம் எவ்வித தயக்கமுமின்றி நிறைவேற்ற வேண்டும் எனவும் அவர் கேட்டுள்ளார். (3-5)

# பேசும் படம்-56

இடம்: கே.கே.எஸ்.வீதி, சுன்னாகம்



நாச்சார வீட்டில சுவட்டுக்குடும்பமா வாழ்ந்தது ஒரு காலம்... ம்ம்ம்... இனி நினைச்சாலும் அதுவருமே...?

**குறிப்பு :** அன்பு வாசகர்களே! நீங்களும் பேசும் படங்களை உங்கள் பெயர், முகவரி, சம்பவம் நிகழ்ந்த இடம் என்பவற்றுடன் அனுப்பி வைக்க முடியும்.

**மின்னஞ்சல் :** valampesumpadam@gmail.com
facebook: www.facebook.com/valam.puri.16

**தபால் முகவரி:** ஆசிரியர், பேசும் படம், வலம்புரி,
இல.03, 2-ம் ஒழுங்கை,
பிறவுண் வீதி, யாழ்ப்பாணம்.

அல்லது நேரில்.

**அனுப்பியவர்: சி.தர்சிகன், அரியாலை**

# மோடியின் இலங்கை விஜயம் புதிய அத்தியாயத்தின் தொடக்கம்

## த ஹிந்து தெரிவிப்பு

(சென்னை)

**இலங்கையில் 2 நாட்கள் அரசு முறை சுற்றுப்பயணம் மேற்கொண்ட இந்தியப் பிரதமர் மோடி இரு நாடுகளின் உறவில் புதிய அத்தியாயத்தைத் தொடங்கியிருக்கிறார். அத்துடன் தமிழர்களுடைய நலனில் இலங்கை அரசு மேலும் அக்கறை செலுத்த வேண்டும் என்பதை நாசூக்காக உணர்த்தியிருக்கும் மோடி, அதற்குத் தேவைப்படும் உதவிகளையும் தாராளமாகச் செய்திட வேண்டும். அதன்மூலம் இந்தப் பிராந்தியத்தில் மிகப் பெரிய ஜனநாயகப் பண்புள்ள நாடு என்ற புகழ் இந்தியாவுக்கு நிலைக்கும் என த ஹிந்து பத்திரிகை தனது ஆசிரியர் தலையங்கத்தில் தெரிவித்துள்ளது.**

பயணத்தின்போது, ஒன்றுபட்ட ஐக்கிய இலங்கை அமைதியாகவும் வளமாகவும் உருவெடுப்பதையே இந்தியா விரும்புவதாக அவர் குறிப்பிட்டதை இலங்கையில் அனைத்துத் தரப்பாருமே வரவேற்றுள்ளனர். வடக்கு மாகாணத்தில் தமிழர்களுடைய பகுதிகளுக்குச் சென்று அங்கு இந்திய ஆதரவுத் திட்டங்களைத் தொடங்கி வைத்ததுடன் அப்பகுதி மக்களிடம் உரையாடியதன் மூலம் அவர்களுக்கும் தமது ஆதரவை உறுதிப்படுத்தியிருக்கிறார். இலங்கையின் பொருளாதார வளர்ச்சிக்காக ஒப்புக்கொண்டபடி இந்தியா செயற்படும் என்பதைக் காட்ட ரயில் பாதைத் திட்டம், வீடமைப்பு திட்டம் போன்றவற்றைத் திறந்து வைத்துப் பேசியிருக்கிறார். இலங்கைத் தமிழர்கள் அமைதியாகவும் கௌரவமாகவும் சம உரிமைகளுடன் வாழ அந்நாட்டின் 13 ஆவது திருத்தம் மட்டும் போதாது, மேலும் அதிகமான நிர்வாக நடவடிக்கைகளை இலங்கை அரசு அதற்காக எடுக்க வேண்டும் என்பதை மோடி வலியுறுத்தியிருக்கிறார்.

இலங்கையின் வடக்குப் பகுதிக்கான ரயில் பாதை மறுநிர மாணம், காங்கேசன் துறைமுக வளர்ச்சிப் பணி, சம்பூரில் மின்சார நிலையம் நிறுவும் பணி, வீடிழந்த தமிழர்களுக்கு வீடு கட்டித்தரும் திட்டம் போன்றவை இலங்கை அரசின் ஒப்புதல்கள் கிடைக்கத் தாமதமானது உட்பட பல காரணங்களால் திட்டமிட்ட காலத்துக்குள் நிறைவேற்றப்படவில்லை. இதனால் இந்தியாவின் வளர்ச்சித் திட்ட உதவிகள் குறித்துப் பல ஐயங்கள் எழுந்தன. இந்திய அதிகார வர்க்கத்தின் திறமைக் குறைவும், ஆட்சியாளர்கள் அதிகாரிகள் இடையே ஒருங்கிணைப்பும் அக்கறையும் இல்லாமல் போனதும் தான் இதற்கெல்லாம் காரணம். திட்டங்களைச் சரியாக நிறைவேற்றுவதை விட்டுவிட்டு, இலங்கையில் சீன முதலீடு அதிகமாவது குறித்துப் புலம்பி ஒரு பயனும் இல்லை.

பொதுவாக இலங்கைத் தலைவர்களுடன் இந்தியத் தலைவர்கள் பேசும்போதெல்லாம் பெரிய அண்ணன் தோரணையைக் காட்டாமல் விடுவதில்லை. இராணுவரீதியாக உங்களைவிடப் பெரிய நாடு நாங்கள், எங்களுடைய தயவு உங்களுக்கு அவசியம் என்ற ரீதியில் எதையாவது சொல்லிவைப்பது வழக்கம். இம்முறை அவ்வாறான பேச்சுகள் ஏதுமில்லாதது வரவேற்கத்தக்கது.

இந்தியா மீது இலங்கை அரசியல் கட்சிகளிடையேயும் செய்தி ஊடகங்களிலும் இன்னும் சந்தேகம் நிலவுகிறது. தன்னுடைய இராணுவ நோக்கத்தில் மட்டுமே இந்தியா அக்கறை காட்டுகிறது என்ற கோபம் இலங்கையர்களுக்கு இருக்கிறது. எனவே அதற்குத் தூபம் போடும் வகையில் எதையும் பேசாமல், புதிய இலங்கைத் தலைவர்கள் இந்தியாவை மேலும் புரிந்து கொள்ள அவகாசம் அளித்திருக்கிறார் மோடி.

இந்திய-இலங்கை உறவில் மோடியின் பயணம் சற்றுப் புத்துணர்ச்சியை அளித்திருக்கிறது என்றே சொல்ல வேண்டும். பக்கத்து நாடாக மட்டுமில்லாமல் நல்ல தொரு நட்பு நாடாகவும் இலங்கை திகழ இந்திய அரசு நிதானமாகத் தான் செயற்பட்டாக வேண்டும். (3-5)

# குமார்குணரட்னத்தின் கடவுச்சீட்டு கறுப்புப் பட்டியலில் இணைப்பு

(கொழும்பு)

முன்னிலை சோசலிச கட்சியின் அரசியல் சபை உறுப்பினர் குமார் குணரட்னத்தின் கடவுச்சீட்டு கறுப்புப் பட்டியலிடப் பட்டுள்ளது.

அவுஸ்திரேலிய பிரஜையான குண ரட்னம் விசா காலம் நிறைவடைந்து மூன்று மாத காலத்திற்கு மேல் மறைந்து வாழ்வதாக குற்றஞ் சுமத்தப்பட்டுள்ளது. குடிவரவு குடியகல்வுத் திணைக்களத்தினால் இந்தக் குற்றச்சாட்டு சுமத்தப்பட்டுள்ளது.

ஒரு மாத காலத்திற்கு மட்டுமே குமார் குணரட்னத்திற்கு விசா வழங்கப்பட்டது. குமார் குணரட்னம், தம்மை நாட்டில் தங்கியிருக்க அனுமதிக்குமாறு நீதிமன்றில் மனுவொன்றை தாக்கல் செய்திருந்தார். இந்த மனு நிராகரிக்கப்பட்டதனைத் தொடர்ந்து நாட்டை விட்டு வெளியேறுமாறு பல தடவைகள் குடிவரவு குடியகல்வுத் திணைக்களம் கோரியிருந்தது.

எனினும், இந்தக் கோரிக்கைக்கு குமார் குணரட்னம் மதிப்பளிக்காது தலைமறைவாக வாழ்ந்து வருவதாகக் குற்றம் சுமத்தப்பட்டுள்ளது.

குமார் குணரட்னத்தை புலனாய்வுப் பிரிவினர் தேடி வருகின்றமை குறிப்பிடத்தக்கது. இதேவேளை, குமார் குணரட்னத்திற்கு இலங்கைக் குடியுரிமை வழங்கப்பட வேண்டுமென முன்னிலை சோசலிச கட்சி கோரி வருகின்றமை குறிப்பிடத்தக்கது. (3-5)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அமெரிக்காவுக்கு மீண்டும் சென்றால் மின்சார நாற்காலிக்கு செல்ல நேரிடும்

## கோத்தபாய ராஜபக்ஷ தெரிவிப்பு

(கொழும்பு)

**அமெரிக்காவிற்கு சென்றால் தான் மின்சார நாற்காலியில் உட்கார வேண்டிய நிலை ஏற்படும் என முன்னாள் பாதுகாப்பு செயலாளர் கோத்தபாய ராஜபக்ஷ தெரிவித்துள்ளார்.**



நேற்று முன்தினம் இடம்பெற்ற தொலைக்காட்சி நிகழ்வொன்றில் கலந்துகொண்டு கருத்து தெரிவிக்கும் போதே அவர் இவ்வாறு குறிப்பிட்டுள்ளார்.

மேலும் அவ்வாறானதொரு சம்பவம் நடைபெற வேண்டும் என்பதனை விடுதலை புலிகள் இயக்கத்தின் ஆதரவாளர்கள் எதிர்பார்த்துக் கொண்டிருந்தார்கள் எனவும் அமெரிக்காவின் குடியுரிமை இருந்தும் இக்காரணத்தினாலேயேதான் அங்கு செல்லாமல் இருந்தேன் எனவும் கோத்தபாய ராஜபக்ஷ தெரிவித்துள்ளார்.

தனக்கு தொடர்புடையதாக கூறப்படும் ரக்ன லங்கா பாதுகாப்பு நிறுவனம் சட்ட விரோதமான நிறுவனம் அல்ல என்றும் அந் நிறுவனம் அரசாங்கத்திற்கு சொந்தமான நிறுவனமெனவும் அவர் கூறியுள்ளார்.

இதேவேளை எவன்காட் நிறுவனத்தின் கீழ் நடத்திசென்ற மிதக்கும் ஆயுத களஞ்சியத்தினுள் எவ்வித சட்ட விரோதமான நடவடிக்கைகளும் மேற்கொள்ளப்படவில்லை எனவும் முன்னாள் பாதுகாப்பு செயலாளர் கோத்தபாய ராஜபக்ஷ குறிப்பிட்டுள்ளார். (3-5)

# தேசிய அரசில் இணையுமாறு அழைப்பு விடுக்கின்றனர்

## ஹெல உறுமய தெரிவிப்பு

எதிர்வரும் பொதுத் தேர்தலில் கூட்டணி சேருமாறு ஐக்கிய தேசியக் கட்சியும், ஸ்ரீலங்கா சுதந்திக் கட்சியும் அழைப்பு விடுத்துள்ளதாக ஜாதிக ஹெல உறுமய கட்சி தெரிவித்துள்ளது.

கட்சியின் தேசிய அமைப்பாளர் நிசாந்த ஸ்ரீவர்ண சிங்க இதனைத் தெரிவித்துள்ளார்.

நாட்டின் பிரதான அரசியல் கட்சிகள் இரண்டும் கூட்டணி சேருமாறு அழைப்பு விடுத்துள்ளன. எனினும் கூட்டணி சேர்வது தொடர்பில் தற்போதைக்கு கருத்து வெளியிட முடியாது. எதிர்கால அரசியல் நிலைமை மாற்றங்களின் அடிப்படையில் உரிய தீர்மானம் எடுக்கப்படும்.

ஏதேனும் கட்சியொன்றுடன் கூட்டணி சேர்வதா இலலையா அல்லது தனித்து சுயாதீனமாக போட்டியிடுவதா என்பது தீர்மானிக்கப்படும்.

தனித்து போட்டியிடுமாறு பல்வேறு தரப்பினரும் கோரிக்கை விடுத்து வருகின்றனர் என அவர் தெரிவித்துள்ளார்.

பத்தரமுல்லவில் நேற்று முன்தினம் நடைபெற்ற செய்தியாளர் சந்திப்பின் போது எதிர்வரும் பொதுத் தேர்தலில் ஜாதிக ஹெல உறுமய எவ்வாறு போட்டியிடும் என ஊடகவியலாளர் எழுப்பிய கேள்விக்கு பதிலளித்த போதே அவர் இதனைத் தெரிவித்துள்ளார். (3-5)

# 65 இலட்சம் ரூபா வெளிநாட்டு தாள்கள் மீட்பு

(கொழும்பு)

65 இலட்சம் ரூபாய் பெறுமதியான (ரூ. 6,544,462) பெறுமதியான வெளிநாட்டு தாள்களுடன் இலங்கை பிரஜை யொருவரை கட்டுநாயக்க பண்டாரநாயக்க சர்வதேச விமான நிலையத்தில் வைத்து கைது செய்துள்ளதாக சுங்க அதி காரிகள் தெரிவித்துள்ளனர்.

விமான நிலையத்தின் வெளியேறும் வாயிலில் வைத்தே அவரை நேற்று செவ்வாய்க்கிழமை காலை கைது செய்துள்ளதாக அந்த அதிகாரிகள் தெரிவித்தனர்.

கைப்பற்றப்பட்ட வெளிநாட்டு தாள்களில் அமெரிக்க டொலர் 29 ஆயிரம், யூரோ 7 ஆயிரத்து 850, சவுதி ரியால் 32 ஆயிரத்து 500, சவுதி அரேபிய டினார் 4 ஆயிரத்து 500 மற்றும் கனடா டொலர் ஆயிரத்து 750 என்பன அடங்குகின்றன. (3-5)

# பொலிஸ் வீரர் தினம்

(யாழ்ப்பாணம்)

இலங்கை பொலிஸ் திணைக்களத்தின் 151 ஆவது பொலிஸ் வீரர் தினம் எதிர்வரும் 21 ஆம் திகதி சனிக்கிழமை காலை 8 மணிக்கு காங்கேசன்துறை பொலிஸ் நிலையத்தில் நடைபெறவுள்ளது.

இலங்கை பொலிஸ் திணைக்களத்தின் 151 ஆவது பொலிஸ் வீரர் தின நிகழ்வில் பொலிஸ் உயரதிகாரிகள் கலந்து கொள்ளவுள்ளமை குறிப்பிடத்தக்கது. (3)

# இசைப்பாடல் போட்டி- 2015

பண்டிதர் பரந்தாமன் கவின் கலைக்கல்லூரியின் முதலாவது ஆண்டு நிறைவு விழாவையொட்டி நடாத்தப்படும் இசைப்பாடல் போட்டி.

★வன்னி பெருநிலப்பரப்பில் நடத்தப்படும் போட்டியில் சிறந்த பாடகர்களின் முதல் பதினைந்து பேரை தெரிவு செய்து அவர்களுக்கான பரிசளிப்பும் மதிப்பளிப்பும் வழங்கப்படும்.

★எமது கல்லூரியின் கதிரவேலுப்பிள்ளை (ஒலிப்பதிவகத்தில்) கலையகத்தால் உருவாக்கப்படும் பாடல் ஒலிப்பதிவில் பங்கு பற்றுவதற்கு முன்னுரிமை வழங்கப்படும்.

**நிபந்தனைகள்**

1. வயது, பால் வேறுபாடு கிடையாது.
2. நான்கு மாவட்டங்களை உள்ளடக்கியது (கிளிநொச்சி, முல்லைத்தீவு, வவுனியா, மன்னார்)
3. நடுவர்களின் தீர்ப்பே இறுதியானது.
4. இதற்கான விண்ணப்பப் படிவம் இப்பத்திரிகையில் பிரசுரிக்கப்பட்டிருக்கும். விண்ணப்பப் படிவம் அல்லது இதை ஒத்த விண்ணப்பப்படிவத்தை தயாரித்து பூர்த்தி செய்து அனுப்ப வேண்டிய முகவரி
**பண்டிதர் பரந்தாமன் கவின் கலைக்கல்லூரி**
**எண். 09, 2 ஆம் குறுக்குத்தெரு கனகபுரம், கிளிநொச்சி**
என்னும் முகவரிக்கு சாதாரண தபால் மூலம் அனுப்பப்படல் வேண்டும்.
5. இதற்கான முடிவுத்திகதி - 05.04.2015
6. தொடர்புக்கு:- **077 288 0830, 077 969 4419**
7. போட்டிக்கான திகதி பத்திரிகையிலும் தொலைபேசி மூலமும் அறிவிக்கப்படும்.

## இசைப்பாடல் போட்டி- 2015

முழுப்பெயர்:-..............................

முகவரி:-..............................

மாவட்டம்:-..............................

பிறந்தநாள்:-..............................

தொலைபேசி எண்:-..............................

ஈமெயில்:-..............................

மேற்படி தகவல்கள் யாவும் உண்மை எனவும் இவ் இசைப்பாடல் போட்டி நிபந்தனைக்கமைய பங்குபற்றவுள்ளேன் என்பதை இத்தால் உறுதிப்படுத்துகின்றேன்.

திகதி கையொப்பம்

----------

# கல்யாண மாலை

| இவர்களுக்கு மணமகள் தேவை | இவர்களுக்கு மணமகன் தேவை |
|---|---|
| பிறப்பு: 1978 இந்து<br>நட்சத்திரம்: பூராடம்<br>கி.பா: 4<br>உயரம்: 5'7"<br>தகைமை/தொழில்: BSC/,CIMA/ பொறியியலாளர்<br>தொ.இ: B/410 | பிறப்பு: 1981 இந்து<br>நட்சத்திரம்: அவிட்டம்<br>கி.பா: 75 செவ் 8இல்<br>உயரம்: 5'<br>தகைமை/தொழில்: BSC/அரச தொழில்<br>தொ.இ: G/669 |
| பிறப்பு: 1981 இந்து<br>நட்சத்திரம்: பூரம்<br>கி.பா: 10 சூரிசெவ் 9இல்<br>உயரம்: 5'<br>தகைமை/தொழில்: A/L/ சொந்த தொழில்<br>தொ.இ: B/411 | பிறப்பு: 1978 இந்து<br>நட்சத்திரம்: மிருகசீரிடம்<br>கி.பா: 16<br>உயரம்: 5'<br>தகைமை/தொழில்: A/L<br>தொ.இ: G/670 |
| பிறப்பு: 1985 இந்து<br>நட்சத்திரம்: பூராடம்<br>கி.பா: 48 செவ் 8 இல்.<br>உயரம்: 5'5"<br>தகைமை/தொழில்: A/L லண்டன் NOT PR<br>தொ.இ: B/414 | பிறப்பு: 1981 RC<br>உயரம்: 5'<br>தகைமை/தொழில்: O/L<br>எதிர்பார்ப்பு: விவாகரத்தானவரும் ஏற்கப்படும்<br>தொ.இ: G/671 |
| பிறப்பு: 1978 இந்து<br>நட்சத்திரம்: அனுசம்<br>கி.பா: 86 உயரம்: 5'11"<br>தகைமை/தொழில்: A/L/ தனியார் தொழில்<br>தொ.இ: B/416 | பிறப்பு: 1978 இந்து<br>நட்சத்திரம்: சுவாதி<br>கி.பா: 40 செவ் 2ல்<br>உயரம்: 5'2"<br>தகைமை/தொழில்: BBA/ அரச தொழில்<br>தொ.இ: G/672 |

**கல்யாண மாலை**
(சர்வதேச திருமண சேவை)
இல. 144, பிறவுண் வீதி,
யாழ்ப்பாணம்
பதிவுக் கட்டணம் ரூபா 1000 மட்டுமே
தொடர்பு:- 021 720 1005
E-mail:- kalyanamalai.jaffna@gmail.com
குறிப்பு: எமது காரியாலயம் காலை 9.00 - 5.00 மணிவரை திறக்கப்படும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வடக்கு மாகாண சபையில் விசாரணைக்குழு அமைப்பு

(யாழ்ப்பாணம்)


வடக்கு மாகாண சபைக்கு உட்பட்ட அனைத்து நிர்வாகத்திலும் ஏற்படுத்தப் பட்டுள்ள முறையற்ற நியமனங்கள் குறித்து விசாரணை செய்வதற்கு 7 பேர் கொண்ட குழு ஒன்று நேற்று நியமிக்கப்பட்டுள்ளது. வடக்கு மாகாண சபையின் 26 ஆவது மாதாந்த அமர்வு நேற்றுக்காலை அவைத் தலைவர் சி.வி.கே.சிவஞானம் தலைமை யில் நடைபெற்றது.

இவ் அமர்வில் முறையற்ற நியமனம் தொடர்பில் விசாரணையினை மேற்கொள்ள வடக்கு மாகாண சபையின் பிரதி அவைத் தலைவர் உள்ளிட்ட 7 பேர் கொண்ட குழு நேற்று நியமிக்கப்பட்டுள்ளது.

அதற்கமைய பிரதி அவைத் தலைவர் அன்ரனி ஜெகநாதன் தலைவராகவும் அவ ருடன் உறுப்பினர் கஜதீபன் பரஞ்சோதி, சர் வேஸ்வரன், லிங்கநாதன், விந்தன், அஸ் வின ஆகியோரும் நியமிக்கப்பட்டுள்ளனர் என அவைத் தலைவர் சபையில் அறிவித்தார்.

அதற்கமைய குறித்த குழு எதிர்வரும் 3 மாதங்களுக்குள் தங்களுடைய விசாரணை களை மேற்கொண்டு சபைக்கு அறிக்கை சமர்ப்பிப்பார்கள்.

அவ்விசாரணை அறிக்கை முதல மைச் சரின் அங்கீகாரத்தின் பின்னர் முறையற்ற நியமனங்கள் வழங்கியவர்களுக்கு எதிராக சட்ட நடவடிக்கை எடுக்கப்படும் என அவைத் தலைவர் மேலும் தெரிவித்தார். (3-4)




# வீழ்ந்த சரித்திரத்திலிருந்து நாம் மீண்டெழ வேண்டும்

## தாளையடியில் சுமந்திரன் தெரிவிப்பு

(யாழ்ப்பாணம்)

**ஆயுதப் போராட்டம் தோற்கடிக்கப்பட்டது என்று சொல்லப்பட்டால் அது அப்படியே இருக்கட்டும். அது ஒரு வீர சரித்திரம். அதிலிருந்து நாம் எழுகின்ற தந் திரத்தைக் கொண்டவர்களாக பொருளாதார, தொழில் நுட்ப ரீதியில் வெற்றி காண வேண்டியவர்க ளாக இருக்கின்றோம் என தமிழ்த் தேசியக் கூட்ட மைப்பின் பாராளுமன்ற உறுப்பினர் எம்.ஏ. சுமந் திரன் தெரிவித்துள்ளார்.**



வடமராட்சி கிழக்கு தாளையடி யில் இடம்பெற்ற கட்சியின் நெய் தலகம் பணிமனை திறப்பு விழா வில் கலந்து கொண்டு சிறப்புரை யாற்றும்போதே அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார். அவர் மேலும் தெரிவிக்கையில்,

வடமராட்சி கிழக்கு குடத்த னையை பிறப்பிடமாகக்கொண் டவன் என்ற வகையில் இந்த பணிமனை திறக்கப்படுவது மகி ழ்ச்சி தருகின்றது.சுவர் இருந்தால் தான் சித்திரம் வரையலாம் என்று சொல்வார்கள்.போரால் பாதிக்கப் பட்ட மக்களின் மீள் நிமிர்வுக்கு இத்தகைய பணிமனை வழிவகு க்கும் என்ற அடிப்படையில் இந்த பணிமனையின் உருவாக்கத்திற்கு காரணமாக இருந்தவர்களுக்கு நான் நன்றி தெரிவிக்கின்றேன்.

நாம் தோற்கடிக்கப்பட்டவர்கள் என்று சொல்லப்படுகின்ற நிலை யில் இருந்து ஒரு வித்தியாசமான பொறிமுறையினூடாக பயணித்து நாம் மீள நிமிரவேண்டும்.

ஆயுதப்போராட்டம் தோற்கடிக் கப்பட்டது என சொல்லப்பட்டால் ஆம் அது அப்படியே இருக்கட்டும். அது ஒரு வீரசரித்திரம்.அதில் இரு ந்து நாம் எழுகின்ற தந்திரத்தை கொண்டவர்களாக பொருளாதார ரீதியில் தொழில்நுட்ப ரீதியில் எமது அறிவைப்பயன்படுத்தி நாம் வெல்ல வேண்டியவர்களாக இருக்கின் றோம். இது வித்தியாசமான காலம். இதில் ஒரு வித்தியாசமான பொறி முறையை நாம் கையாளவேண் டும்.சற்றுப்பின் தள்ளிப்பார்த்தால் தமிழ் தேசிய கூட்டமைப்பு எமது மக்களுக்கு சரியான தலைமைத்து வத்தை கொடுத்து வந்திருப்பதை நாம் அவதானிக்கலாம். இப்பொழு தும் இந்த ஆட்சி மாற்றத்தை ஏற்படுத்துவதற்கு சரியான தலை மைத்துவத்தை மக்களின் எண் ணங்கள் உணர்ந்து கூட்டமைப்பு வழங்கியுள்ளது.

இனியும் சோரம் போகாத உரி மைகளை விட்டுக் கொடுக்காத இராஜதந்திரம் மிக்க தலைமைத்து வத்தை தமிழ்தேசிய கூட்டமைப்பு கொடுக்கும். அதற்கு மக்களாகிய உங்களின் நம்பிக்கையும் ஆதர வும் அவசியம்.மக்கள் தெளிவாக இருப்பதை நான் சந்திப்புக்களின் போது உணர்ந்துள்ளேன்.

நாம் ஆற்றைக்கடக்க வேண்டி யவர்க ளாக இருக்கின்றோம். இப் பொழுது படகில் ஏறி அமர்ந்துள் ளோம். படகை கவிழ்க்காமல் கரை சேருவது நம்மகையில்தான் இருக் கின்றது.நாம் அவசரப்பட முடியாது நிதானம் வேண்டும் என்று தெரிவித்தார். (3-5)

# முகாமைத்துவ வணிகபீட மாணவர்கள் ஒன்றுகூடல்

(யாழ்ப்பாணம்)

யாழ்.பல்கலைக்கழக முகாமை த்துவ வணிகபீட பழைய மாணவர் அமைப்பு (MCAA) எதிர்வரும் 29ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை யன்று மாலை 3 மணிக்கு தமது பீடத்திலிருந்து உள்வாரியாக வெளி யேறிய மாணவர்களுக்கு பீடத்தின் விரிவுரை மண்டபத்தில் (MH-III) வருடாந்த பொதுக்கூட்டத்தோடு ஒன்றுகூடலையும் நடத்தவுள்ளது.

யாப்பிற்கு அமைய புதிய நிர் வாகசபை தெரிவு இடம்பெ இருப்ப தால் அவற்றிற்கான பிரேரணை கள் ஏதாவது இருப்பின் 26ஆம் திகதிக்கு முன்னர் செயலாளர் MCAA முகாமைத்துவ வணிக பீடம் யாழ்.பல்கலைக்கழகம், யாழ்ப்பாணம் எனும் முகவரிக்கு அனுப்பி வைக்குமாறு கேட்டுக் கொள்ளப்பட்டுள்ளது.

அத்தோடு ஒன்றுகூடலை முன் னிட்டு அன்றைய தினம் காலை 10 மணிக்கு மாணவர்களின் இரத்த தான நிகழ்வும் இடம்பெறவுள்ளது என அறிவிக்கப்பட்டுள்ளது. (3)




# ஒப்பந்த அடிப்படையில் விண்ணப்பம் கோரல்

(யாழ்ப்பாணம்)

தேசிய நீர் வழங்கல் மற்றும் வடிகாலமைப்புச் சபையின் வடக்கு பிராந்திய உதவி சேவை மத்திய நிலையங்களில் காணப்படும் வெற் றிடங்களை நிரப்புவதற்காக ஒப்ப ந்த அடிப்படையில் தகைமை உடை யவர்களை ஆட்சேர்ப்பு செய்வதற் காக வடக்கு பிரதேச குடியிருப்பா ளர்களிடமிருந்து மாத்திரம் விண் ணப்பங்கள் கோரப்படுகின்றன.

இதற்கமைய மத்திய நிலையங் களில் பொறியியலாளர் (குடிசார்), கணனி வன்பொறியியலாளர் பிரத் தியேக செயலாளர், முகாமைத்துவ உதவியாளர் (கணக்கை, பாவனை யாளர் சேவை, மனிதவளம், கணனி இயக்குநர், சொற்செயலி-ஆங்கி லம்) ஆகிய பதவிகளுக்கு விண் ணப்பங்கள் கோரப்படுகின்றன.

விண்ணப்ப முடிவுத் திகதியன்று விண்ணப்பதாரி 45 வயதிற்கு மேற் படாதவராக இருத்தல் வேண்டும்.

முழு சுயவிபரங்களைக் கொண்ட பூரணப்படுத்தப்பட்ட விண்ணப்பப் படிவத்துடன் அவற்றில் உள்ளடக்கி யுள்ள விண்ணப்பங்களை உறுதிப்படுத் தக்கூடிய சான்றிதழ்களின் பிரதி களை இணைத்து எதிர்வரும் 23 ஆம் திகதிக்கு முன்னர் மேலதிக பொதுமுகாமையாளர் (மனிதவள முகாமைத்துவம்) தேசிய நீர் வழ ங்கல் மற்றும் வடிகாலமைப்பு சபை, இலக்கம் 14, காலி வீதி, இரத்ம லானை என்னும் முகவரிக்கு பதிவுத் தபாலில் அனுப்பி வைக்க வேண்டும்.

விண்ணப்பப் படிவங்களை பூர்த்தி செய்து அனுப்புவது மிக உகப்புடையதாகும். பூர்த்தி செய்து அனுப்புவது மிக உகப்புடையதாகும்.

இவ்விண்ணப்பம் கோரல் தொட ர்பான கல்வித் தகைமை பற்றிய மேலதிக விபரங்களை கடந்த 12 ஆம் திகதி (12.03.2015) அன்று வெளியான தினகரன் பத்திரிகை யிலோ வலம்புரி காரியாலயத்திலோ பார்வையிடலாம். (அ)

# கௌரவிப்பு

(யாழ்ப்பாணம்)

பிரான்ஸ் தலித் மேம்பாட்டுக் கழக அனுசரணையுடன் மக்கள் மகாசபை நடத்தும் பிரபல எழுத் தாளர் சாகித்திய ரத்னா தெணி யானின் கௌரவிப்பு விழா எதிர்வ ரும் 22 ஆம் திகதி ஞாயிற்றுக் கிழமை காலை 9 மணியளவில் தேவரையாளி இந்துக் கல்லூரி க.பொ. சின்னத்தம்பி அரங்கில் சட்டத்தரணி ரெங்கன் தேவராஜா தலைமையில் நடைபெறவுள்ளது.

இந்நிகழ்வில் யாழ்.பல்கலைக் கழக பேராசிரியர் மா.சின்னத்தம்பி வாழ்த்துரை வழங்கவுள்ளார். (3)



யாழ்ப்பாணத் தமிழ்ச் சங்கம் முன்னெடுத்த திருவள்ளுவர் விழா கடந்த ஞாயிற்றுக்கிழமை பிற்பகல் 5 மணிக்கு நல்லூர் துர்க்காதேவி மணிமண்டபத்தில் இடம்பெற்றது. யாழ். பெரியகடை சிவகனேசன் புடவையகத்தின் ஆதரவில் இடம்பெற்ற இந்த விழாவிற்கு யாழ்ப்பாணத் தமிழ்ச் சங்கத்தின் துணைத்தலைவரும் யாழ். பல்கலைக்கழக தமிழ்த்துறைத் தலைவருமாகிய பேராசிரியர் கி.விசாகரூபன் தலைமையில் நடைபெற்றது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தொகுதிவாரி தேர்தல் முறை முஸ்லிம்களுக்கு பெரும் பாதிப்பு

(கொழும்பு)

**எதிர்வரும் அரசியல் சூழல் இலங்கையில் வாழ்கின்ற சிறுபான்மைச் சமூகங்கள் அனைத்துக்கும் குறிப்பாக முஸ்லிம்களுக்கு அநேக இழப்புக்களை தருகின்ற ஒன்றாக அமையலாம் என்று சமுர்த்தி அலுவல்கள் பிரதியமைச்சர் எம்.எஸ்.எஸ்.அமீர் அலி தெரிவித்தார்.**

மட்டக்களப்பு மாவட்டத்தின் மத்திய கல்வி வலயத்திலுள்ள அமீரலி வித்தியாலய வருடாந்த மெய்வல்லுநர் போட்டி, நேற்றுமுன்தினம் நடைபெற்றது. அங்கு உரையாற்றுகையிலேயே அவர் மேற்கண்டவாறு கூறினார்.

அங்கு தொடர்ந்து உரையாற்றிய அவர்,'தொகுதிவாரி தேர்தல் முறைமையின் கீழ், அவசரமான ஒரு தேர்தல் அரசாங்கத்தினால் நடத்தப்படுகின்ற போது, அது மாவட்ட ரீதியில் முஸ்லிம்களுக்கு மிகுந்த பாதிப்பை ஏற்படுத்தும் என்பதில் இருவேறு கருத்துக்கு இடமில்லை.

அத்துடன், மலையகத் தமிழர்களும் தொகுவாரி தேர்தல் முறைமையின் பாதிப்புக்களை சந்திப்பார்கள். முஸ்லிம்களும் மலையகத் தமிழர்களும் தமது அரசியல் பிரதிநிதித்துவங்களை இழக்கவேண்டி வரும்.

அப்போது, அந்தச் சமூகங்களின் குரல்கள் நாடாளுமன்றத்தில் ஒலிக்க வாய்ப்பில்லாமல் போகும்.

இந்த விடயத்தில் பாதிக்கப்படப் போகின்ற சிறுபான்மைச் சமூகங்கள் விழிப்பாகவிருந்து செயற்பட வேண்டிய தேவைப்பாடு உண்டு. அவசரமாக ஒரு தேர்தலுக்கு செல்ல வேண்டும் என்று ஐக்கிய தேசியக் கட்சி விரும்புகின்றது.

ஆனால், அப்படி ஒரு அவசர தேர்தலுக்கு செல்லவேண்டியதில்லை. தொகுதிவாரி மாற்றத்தின் பின்னரே தேர்தலுக்கு செல்லவேண்டும் என்பதில் ஜாதிக ஹெல உறுமய உட்பட ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியும் இன்னும் சில கட்சிகளும் விரும்புகின்றன.

இந்தப் போட்டியில் ரணில் விக்கிரமசிங்க வெல்லப்போகின்றாரா அல்லது ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் நிமால் சிறிபால டி சில்வா வெல்லப்போகின்றாரா என்கின்ற நிலை எதிர்வரும் நாட்களில் எங்களுக்கு தெரியவரும்.

எது எவ்வாறாக இருந்தாலும், அவசரமான தொகுதிவாரியான தேர்தலொன்றுக்கு நாங்கள் முகங்கொடுப்போமாக இருந்தால், முஸ்லிம் சமூகம் இக்கட்டில் மாட்டிக்கொள்ளும் என்பதில் மாற்றுக் கருத்துக்கு இடமில்லை.

இந்த விடயத்தில் எதிர்க்கட்சி அரசியல்வாதிகளாக இருந்தாலும் ஆளும் கட்சி அரசியல்வாதிகளாக இருந்தாலும் மிகுந்த சமூகப் பொறுப்போடு நடக்கவேண்டிய தேவையுள்ளது.

சமூகம் பாதிக்கின்ற அளவுக்கோ அல்லது சமூகத்தின் அரசியல் பிரதிநிதித்துவம் நாடாளுமன்றத்தில் குறைகின்ற அளவுக்கோ வழி வகுத்துவிடக்கூடாது என்பதில் தற்போதைய சமூக அரசியல் தலைவர்கள் உறுதியாக இருக்கவேண்டும்.

எதிர்வரும் நாட்கள் அரசியலில் மண்டும் சூடு பிடிக்கக்கூடியதும் பெறுமதியானதுமான நாட்களாகும். இம முறை ஏறாவூரிலும் நான் நேரடியாக களமிறங்கி அரசியல் நடவடிக்கைகளை முன்னெடுக்க வுள்ளேன்' என்று அவர் தெரிவித்துள்ளார். (3-5)

## தமிழ்க் கட்சிகளை ஓரணியில் திரள தமிழர் விடுதலைக் கூட்டணி அழைப்பு

### இன்று கொழும்பில் கலந்துரையாடல்

(கொழும்பு)

சகலதமிழ் பேசும் மக்களையும் ஒன்றிணைத்து நம் கோரிக்கைகளை முன்வைப்பதன் மூலமே எமது மக்களின் அபிலாசைகளை பூர்த்தி செய்வதோடு நீண்ட காலமாக புரையோடிப் போயிருக்கும் எமது இனப் பிரச்சினைகளுக்கும் ஒரு நிரந்தரதீர்வினையும் பெற்றுக் கொள்ளமுடியும்.

இவ்வாறு தமிழர் விடுதலை கூட்டணி விடுத்துள்ள அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது. அவ்வறிக்கையில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது, எந்த நோக்கத்துடன் வடக்கு, கிழக்கு மற்றும் மலையகம் சார்ந்த முக்கிய தலைவர்களை ஒன்றிணைத்து தந்தை செல்வாவினால் தமிழர் விடுதலைக் கூட்டணி உருவாக்கப்பட்டதோ, அந்தநோக்கத்தை அடைய உறுதியுடன் செயற்பட தீர்மானித்துள்ளது.

அனைத்து தமிழ்பேசும் மக்களின் கட்சிகளும் சரி, விடுதலை இயக்கங்களும் சரி, சிறுபான்மை மக்களின் பிரச்சினைகளுக்கு ஒரு நிரந்தர தீர்வை பெற்றுத்தரவே தம் தம் வழியில் போராடிவந்துள்ளன.

சிலநேரங்களில் நெருக்குதல்கள், நிர்ப்பந்தங்கள், உயிராபத்துகள் மற்றும் ஒரு சில அமைப்புகளில் தாங்கள் மட்டும்தான் என்ற ஆணவப்போக்குகளின் செயற்பாடுகளின்ால், தவிர்க்க முடியாத சிலமுடிவுகள் எடுக்க தள்ளப்பட்டனர். எது எப்படி இருப்பினும் அத்தனை பேருமே எம் மக்களின் எதிர்கால நலன்களுக்கா கபாடுபட்டவர்கள்தான். யாரும் யாரையும் ஒதுக்கி வைக்கமுடியாது. எவரும் எவருக்கும் உயர்ந்தவர்களும் இல்லை தாழ்ந்தவர்களும் இல்லை.

இந்த கொள்கையை அடிப்படையாகக் கொண்டு அனைத்து தமிழ் பேசும் மக்களின் கட்சிகளையும், அமைப்புக்களையும் அழைத்து ஓரணியில் ஒன்று சேர்ந்து, செயற்படும் நோக்கத்தோடு எமது கடசியின் செயலாளர் நாயகம் **வீ.ஆனந்தசங்கரியின் தலைமையில் இன்று புதன்கிழமை, காலை 10 மணியளவில** கொழும்பு அலுவலகத்தில் ஒரு கலந்துரையாடலை நடத்த தீர்மானித்துள்ளோம்.

தமிழ் பேசும் கட்சிகளும், அமைப்புகளும் அதில் கலந்துகொண்டு தமது கருத்துக்களைக் கூறி, ஒன்று பட்ட இலங்கைக்குள் ஒரு நிரந்தர தீர்வினைப் பெறுவதற்கு ஓரணியாக நின்று செயற்படஅழைக்கின்றோம் என அவ்வறிக்கையில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (3-5)

## உடல்நலக் குறைவினால் பதவியை விட்டு விலகினேன்

### அஜித் ரோஹண தெரிவிப்பு

உடல் நலக் குறைவு காரணமாக ஊடகப் பேச்சாளர் பதவியிலிருந்து விலகியதாக எஸ்எஸ்பி அஜித் ரோஹன கொழும்பு ஊடகமொன்றுக்குத் தெரிவித்துள்ளார்.

சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சகரும், சட்டத்தரணியுமான அஜித் ரோஹண நீண்ட காலமாக பொலிஸ ஊடகப் பேச்சாளராக கடமையாற்றி வந்தார்.

அண்மையில் அஜித் ரோஹண கொழும்பு பிரதேசத்திற்குப் பொறுப்பான சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சகராக இடமாற்றம் செய்யப்பட்டிருந்தார்.

அஜித் ரோஹணவின் இடத்திற்கு சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சகரும், சட்டத்தரணியுமான ருவான் குண சேகர நியமிக்கப்பட்டுள்ளார்.

உடல் நலக் குறைவு காரணமாக சுய விருப்பின் அடிப்படையில் பேச்சாளர் பதவியிலிருந்து விலகிக் கொண்டதாக அஜித் ரோஹண தெரிவித்துள்ளார்.

## பிரிவுத்துயர் பகிர்வு



### கந்தப்பிள்ளை சண்முகம்

குமுழமுனை 6ஆம் வட்டாரத்தைப் பிறப்பிடமாகவும் உண்ணாப்பிலவு முல்லைத்தீவை தற்காலிக வதிவிடமாகவும் கொண்ட கந்தப்பிள்ளை சண்முகம் கடந்த 13 ஆம் திகதி வெள்ளிக்கிழமை அன்று காலமானார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று புதன்கிழமை அவரது தற்காலிக இல்லத்தில் நடைபெற்று பின்னர் பூதவுடல் மாலை 4 மணியளவில் குமுழமுனை தாமரைக்கேணி இந்து மயானத்தில் நல்லடக்கம் செய்யப்படும்.



### திருமதி பஞ்சரத்தினம் சந்திரபுஸ்பம்

மானிப்பாய் சங்குவேலியைப் பிறப்பிடமாகவும் நெதர்லாந்து Assen ஐவதிவிடமாகவும் கொண்ட பஞ்சரத்தினம் சந்திரபுஸ்பம் கடந்த 15 ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை அன்று காலமானார்.


அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை வியாழக்கிழமை பி.ப 2 மணியளவில் Tumulusstraat 1,9406 KX Assen, Netherlands என்னும் முகவரியில் நடைபெற்று பின்னர் பூதவுடல் தகனம் செய்யப்படும்.



### திருமதி ஆறுமுகம் மீனாம்பாள்

இணுவில் கிழக்கை பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட ஆறுமுகம் மீனாம்பாள் நேற்றுமுன்தினம் திங்கட்கிழமை அன்று காலமானார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று புதன்கிழமை அவரது இல்லத்தில் நடைபெற்று பின்னர் பூதவுடல் மு.ப 11மணியளவில் பூவோடை இந்து மயானத்தில் தகனம் செய்யப்படும்.



### திருமதி சாந்தலிங்கம் பூம்பாவை

நயினாதீவைப்பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட சாந்தலிங்கம் பூம்பாவை கடந்த 14 ஆம் திகதி சனிக்கிழமை அன்று காலமானார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று புதன்கிழமை மு.ப11மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று பின்னர் பூதவுடல் பி.ப. 2 மணியளவில் நயினாதீவு சல்லிப்பரவை மயானத்தில் தகனம் செய்யப்படும்.



### செல்லப்பா தோமஸ் எஸ்ராகே

யாழ்ப்பாணத்தைப் பிறப்பிடமாகவும் கனடா Markham ஐ வதிவிடமாகவும் கொண்ட செல்லப்பா தோமஸ் எஸ்ராகே கடந்த 13 ஆம் திகதி வெள்ளிக்கிழமை அன்று காலமானார்.

அன்னாரின் பூதவுடல் எதிர்வரும் 21 ஆம் திகதி சனிக்கிழமை மு.ப11.30 மணியளவில் Christ The King Cemetery,7770 Steeles Ave E,Markham,ON L6B 1AB,Canada என்னும் முகவரியில் நல்லடக்கம் செய்யப்படும்.



### திருமதி கனகலிங்கம் சிவபாக்கியம்

கோப்பாய் தெற்கு பழைய வீதியைப் பிறப்பிடமாகவும் கனடா Edmonton ஐ வசிப்பிடமாகவும் கொண்ட கனகலிங்கம் சிவபாக்கியம் கடந்த 14 ஆம் திகதி சனிக்கிழமை அன்று காலமானார்.


அன்னாரின் கிரியைகள் இன்று புதன்கிழமை பி.ப 2மணியளவில் Park Memorial Funeral Home,9709-111 Ave N·W,Edmonton,AB T5G OB2,Canada என்னும் முகவரியில் நடைபெற்று பின்னர் பூதவுடல் தகனம் செய்யப்படும்.



### நாகலிங்கம் சுந்தரலிங்கம்

காரைநகர் புதுறோட்டைப் பிறப்பிடமாகவும் வவுனியா தோணிக்கல்லை வதிவிடமாகவும் கொண்ட நாகலிங்கம் சுந்தரலிங்கம் கடந்த 15 ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை அன்று காலமானார்.

அன்னாரின் இறுதிக்கிரியை நாளை வியாழக்கிழமை காலை 8 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று பின்னர் பூதவுடல் வவுனியா தட்சணாமூர்த்தி இந்து மயானத்தில் தகனம் செய்யப்படும்.



### செல்லத்துரை ரட்ணகுமார்

உடுவிலைப் பிறப்பிடமாகவும், ஜேர்மனி Frankfurt ஐ வசிப்பிடமாகவும் கொண்ட செல்லத்துரை ரட்ணகுமார் கடந்த 12 ஆம் திகதி காலமானார்.

அன்னாரின் கிரியைகள் இன்று புதன்கிழமை பி.ப 1.30 மணியளவில் Haupt Friedh of Frankfurt,Eckenheimer Landstrabe 194,60320, Frankfurt am Main, Germany என்னும் முகவரியில் நடைபெற்று பின்னர் பூதவுடல் தகனம் செய்யப்படும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மக்கள் வங்கி முன்னாள் தலைவர் நிதிமோசடி தொடர்பில் விசாரணை

(கொழும்பு)

**முன்னாள் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷவின ஆளணியின் தலைவரும் மக்கள் வங்கியின் முன்னாள் தலைவருமான காமினி செனரத் பாரிய நிதக்குற்றங்கள் தொடர்பிலான விசாரணைப பிரிவினரால் விசாரணைக்கு உட்படுத்தப்பட்டுள்ளனர.**

சுமார் 10 கோடி ரூபா வரையிலான நிதி மோசடி ஒன்று தொடர்பலேயே நேற்று முன்தினம் காலை கொள்ளுப்பிட்டியில் உள்ள பாரிய நிதிக் குற்றங்கள் தொடர்பிலான விசாரணைப் பிரிவுக்கு அழைக்கப்பட்ட காமினி செனரத் அங்கு ஐந்து மணி நேரம் விசாரணை செய்யப்பட்டு வாக்குமூலம் பதிவு செய்துகொள்ளப்பட்டதன் பின் விடுவிக்கப்பட்டுள்ளார்.

புதிதாக தாபிக்கப்பட்ட பாரிய நிதிக் குற்றங்கள் தொடர்பிலான விசாரணைப் பிரிவுக்கு பொறுப்பான பிரதிப் பொலிஸ்மா அதிபர் ரவி வைத்தியலங்காரவின் கீழ் இந்த விசாரணைகள் இடம்பெற்றுள்ளதுடன் தேவை ஏற்படின் மண்டும் அழைப்பதாகவும் அப்போதும் விசாரணைக்கு சமுகம் தர வேண்டும் எனவும் குறித்த விசாரணை அதிகாரிகளால் குறிப்பிடப்பட்டதாக பொலிஸ் ஊடகப் பேச்சாளரின் உயர் அதிகாரி ஒருவர் குறிப்பிட்டார்.

பீப்பில்ஸ் லீஸிங் நிறுவனத்தினால் முன்வைக்கப்பட்டிருந்த முறைப்பாட்டின் மீதான விசாரணை தொடர்பிலேயே காமினி செனரத் விசாரணைக்கு உட்படுத்தப்பட்டதாக அவர் மேலும் குறிப்பிட்டார்.

நிதி மோசடிகள் தொடர்பில் ஆராயும் அரசின் விசேட குழுவுக்கு பீப்பல்ஸ் லீஸிங் நிறுவனம் இந்த நிதி மோசடி தொடர்பில் முறைப்பாடு செய்திருந்ததுடன் அது தொடர்பிலான விசாரணைகள் அது குறித்து விசாரணை செய்யும் பொலிஸ் பிரிவுக்கு அண்மையில் மாற்றப்பட்டிருந்தது.

பாராளுமன்ற உறுப்பினரான சஜின் வாஸ் குணவர்தனவின் நிறுவனமொன்றுக்கும் ஜனாதிபதி செயலகத்துக்கும் 99 வாகனங்கள் குத்தகைக்கு வழங்கப்பட்டுள்ளதாகவும் அது தொடர்பில் குத்தகை பணம் செலுத்தப்படாது மோசடி செய்யப்பட்டுள்ளதாகவும் அதற்கு அப்போதைய மக்கள் வங்கியின் தலைவராக இருந்த காமினி செனரத் பொறுபபுக் கூற வேண்டும் எனவும் குறிப்பிட்டே முறைப்பாடளிக்கப்பட்டிருந்தது.

இந் நிலையிலேயே நேற்று முன்தினம் அவரிடம் ஐந்து மணி நேர விசாரணை நடத்தப்பட்டமை குறிப்பிடத்தக்கது. (3-5)

# சீர்திருத்த நடைமுறைகளை இலங்கை மேம்படுத்த வேண்டும்

## ஜேர்மன் தூதுவர் கோரிக்கை

இலங்கை அரசாங்கம் தொடர்ந்தும் சீர்திருத்த நடைமுறைகளை மேம்படுத்த வேண்டும் என ஜேர்மனி கோரியுள்ளது. இதன்மூலம் நல்லாட்சி மற்றும் சமூக நலன்கள் பலப்படும் என கொழும்பில் உள்ள ஜேர்மன் தூதுவராலயம் குறிப்பிட்டுள்ளதுடன் அதற்கான சகல ஒத்துழைப்பையும் ஜேர்மன் வழங்கும் என குறிப்பிடப்பட்டுள்ளது.

ஜேர்மன் வெளிவிவகார அமைச்சின் ஆசிய மற்றும் பசுபிக் பிராந்திய இயக்குநர் பீற்றர் புருகல் கடந்த 9ஆம்திகதி இலங்கைக்கான விஜயம் ஒன்றை மேற்கொண்டிருந்தார். இவர் கடந்த 13 ஆம் திகதி வரை இலங்கையில் தங்கியிருந்தார்.

இங்கு தங்கியிருந்த காலப்பகுதியினில் அவர் கொழும்பு மற்றும் வடக்கு பிரதேசங்களைச் சேர்ந்த அரசாங்க அதிகாரிகள், அரசியல் தலைவர்கள், குடியியல் சமூகத்தவர்கள் மற்றும் சமய தலைவர்களை சந்தித்து உரையாடியிருந்தார்.

இவரின் விஜயம் தொடர்பாக ஜேர்மன் தூதுவராலயம் நேற்று விடுத்துள்ள அறிக்கையிலே இலங்கைக்கு ஒத்துழைப்பு வழங்குவது குறித்தும் உறுதி அளிக்கப்பட்டுள்ளது. இதுதவிர, இலங்கையில் மேற்கொள்ளப்படும் அபிவிருத்தி நடவடிக்கைகளுக்கும் மேலும் ஜேர்மன் உரிய ஒத்துழைப்பினை வழங்கும் எனவும் அந்த அறிக்கையில் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது. (3-5)

# பொலிஸ் உத்தியோகத்தர்கள் எண்மர் பணியிலிருந்து இடைநிறுத்தப்பட்டனர்

சிலாபத்தில் மாவட்ட சுற்றிவளைப்பு பிரிவின் 8 பொலிஸ் உத்தியோகத்தர்கள் பணியில் இருந்து இடைநிறுத்தப்பட்டுள்ளனர்.

பொலிஸ் பரிசோதகர், பொலிஸ் உப பரிசோதகர்கள், சார்ஜன் மற்றும் 5 கான்ஸ்டபிள்கள் பணியில் இருந்து இடைநிறுத்தப்பட்டுள்ளதாக, பொலிஸ் ஊடகப் பேச்சாளரும், உதவிப் பொலிஸ் அத்தியட்சகருமான ருவன் குணசேகர தெரிவித்தார்.

தங்கொட்டுவ பகுதியில் இடம்பெற்ற சுற்றிவளைப்பொன்றில் கடமை தவறிய குற்றச்சாட்டின் அடிப்படையில் இவர்கள் பணியிலிருந்து இடைநிறுத்தப்பட்டுள்ளதாக அவர் கூறினார்.

இதுதொடர்பில் மேலதிக விசாரணைகள் முன்னெடுக்கப்படுவதாகவும் பொலிஸ் ஊடகப் பேச்சாளர் குறிப்பிட்டார். (3-5)

# வாரம் ஒரு யாழ்ப்பாணத்து மூலிகை



## முடக்கறுத்தான் / உழிஞை

**Botanical Name:** Cardiospermum halicacabum

**Family:** Sapindaceae

**Sinh:** Penela-wel

முடக்குத் தீர்த்தான் எனவும் அழைக்கப்படும். பூக்கும் இருவித்திலைத் தாவரம். ஏறிப்படரும் கொடி. இணர் நுனியில் சிறுபற்றுக் கம்பிகள் இருக்கும். இதனைக்கொண்டு இக்கொடி, கொம்புபற்றி ஏறிப் படர்ந்து வளரும்.சுவட்டிலை, சிற்றிலைகள் பளபளப்பானவை. இலைநுனி கூர்மையானதாக இருக்கும். இலைக் கோணத்தில் கலப்புமஞ்சரியாகத் தோன்றும். மஞ்சரிக்காம்பின் அடியிலுள்ள இரு மலர்க்காம்புகள் பற்றுக்கம்பிகளாக மாறியிருக்கும். சிறிய இளமஞ்சள் நிறமான பூக்கள். சூலகம் 3 கலங்கள் உடையது. சூல் மூடி மூன்று பிளவானது. மெல்லிய காற்றடைத்த முக்கோண வடிவான உலர்கனி மூன்று வால்வுகளையுடையது. விதை உருண்டை வடிவானது. வித்திலைகள் இரண்டும் அகலமானவை. குறுக்கே மடிந்திருக்கும். இதை மற்றக் கீரைகளுடன் சேர்த்துச் சமைத்துச் சாப்பிடலாம். அல்லது இதைத் தனியாக மருந்தாகவும் பயன்படுத்தலாம்.

ஒரு கைப்பிடியளவு முடக்கறுத்தான் இலை, காம்பு, தண்டு இவைகளை ஒரு சட்டியில் போட்டு 200 மில்லி அளவு தண்ணீர்விட்டு நன்றாக கொதிக்கவைத்து இறக்கி அந்த நீரை மட்டும்வடித்து, சாதாரண புளி இரசம் வைப்பது போல அந்த நீரில் புளி கரைத்து மிளகு, பூண்டு, சீரகம் சேர்த்து இரசம் தயாரிக்க வேண்டும்.

3 நாட்களுக்கு ஒருமுறை முடக்கொத்தான் இரசம் வைத்துச் சாப்பிட்டு வந்தால் உடலிலுள்ள வாய்வு கலந்து வெளியேறிவிடும். வாய்வு, வாதம், மலச்சிக்கல் சம்பந்தப்பட்ட கோளாறுகள் நீங்கும்.

முடக்கறுத்தான் இலை 40 கிராம் அளவு எடுத்து நைத்து ஒரு சட்டியில்போட்டு அதேயளவு வேலிப் பருத்தி இலையையும் சூரத்து நிலாவாரை இலையையும் இத்துடன் சேர்த்து 400 மில்லி நீர்விட்டு 100 மில்லியாக குடிநீர் காய்ச்சி 50 மில்லி இதனுடைய இலைகளையும் வேரையும் குடிநீர் காய்ச்சிமூலநோய், நாட்பட்ட இருமலுக்குக் கொடுக்கலாம்.

இதன் இலைகள் 35 கிராமை தேங்காய் எண்ணெய் 350 மில்லியில் போட்டுக்காய்ச்சி வலிகளுக்கு பூசலாம்.

**முடக்கறுத்தான் இலைத்தோசை**

சிவத்தப்பச்சரிசி-500 கிராம், முடக்கறுத்தான் இலை உருவியது-100 கிராம், தேவையான அளவு உப்பு.

இரண்டு மணிநேரம் அரிசியை ஊறவைத்து இலைகளை நீரில் ஊறவைத்து வடித்து இலைகளை நீரில் அலசி ஒன்றாகப்போட்டு கிரைண்டரில் அரைத்து இலேசாக தண்ணீர்விட்டு தோசைமாவுப் பதத்தில் அரைத்து 3 மணிநேரம் ஊறவிட்டு தோசைசுட்டு காலையிற் சாப்பிட மூட்டுவலிகள் குறையும். பித்தம் தீரும் [illegible] சுழியும் காலை, மாலை கொடுக்க (3 நாட்கள்) பக்கவாதத்தில் ஏற்படும் கை, கால் உளைச்சல் நீங்கி தசைகள் வலுவடையும். (Tone of the muscle) இதையே தொடர்ந்து 3 முறை 3 நாட்கள்இடைவெளிவிட்டுக்கொடுக் கலாம்.

30 கிராம் அளவு முடக்கறுத்தான் இலையை ஒரு சட்டியில் போட்டு வெள்ளைப்பூண்டு பற்களில் 5 நைத்து இதில் போட்டு அரைத் தேக்கரண்டி அளவு 5 கிராம் மிளகை ஒன்றிரண்டாக உடைத்து அதையும் சேர்த்து 400 மில்லி அளவு தண்ணீர்விட்டு அடுப்பில் வைத்து 100 மில்லி அளவுக்கு சுண்டக்காய்ச்சி குடிநீரை வடிகட்டி காலையில் சாப்பிட்டு வந்தால் பேதியாகும். அதிகமாக பேதியானால் ஒரு எலுமிச்சம் பழச்சாறு குடிக்கலாம்.

சாதாரண பிரசவத்தின்போது பிரசவம் கடினமாக இருந்தால் முடக்கறுத்தான் இலைகளை தேவையானளவு எடுத்து அம்மியில் வைத்து மைபோல அரைத்து அடிவயிற்றில் கனமாகப் பூசிவிட்டால் பிரசவம் இலகுவாகும்.

**முடக்கறுத்தான் காம்பு இரசம்**

எலுமிச்சம்பழம்-1, தக்காளி-3, சீரகம்-2 தேக்கரண்டி, மிளகு-அரைத் தேக்கரண்டி, பூண்டு- 6பல், தேவையான உப்பு, முடக்கறுத்தான் காம்பு பொடியாக அரிந்தது 5 கைப்பிடியளவு, தண்ணீர்- 800 மில்லி, பசுநெய்- ஒருதேக்கரண்டி.

முடக்கறுத்தான் காம்புகளை தண்ணீரில் வேகவிடவும். நன்கு வெந்ததும் ஒரு தேக்கரண்டி நெய்யை வாணிலியில் விட்டு சீரகம் ஒரு தேக்கரண்டி போட்டு வெடித்ததும் வெந்த முடக்கற்றான் காம்பு இரசத்தை ஊற்றவேண்டும். தக்காளியை கரைத்து அதோடு எலுமிச்சம் பழச்சாறு பிழிந்து ஊற்றி உப்பைப் போட்டு சீரகம், மிளகு, பூண்டு இவற்றை உடைத்துப்போட்டு கறிவேப்பிலையை உருவிப்போட்டு மல்லித் தழை நசுக்கிப்போட்டு இரசம்ஒருகொதிவந்ததும் இறக்கிவைக்கவும். வெறும்வயிற்றில் 200 மில்லி குடித்தால் வயிறு கழியும். மூட்டு வலி, உடம்புவலி ஆகியவைநீங்கும்.

**100 கிராம் முடக்கறுத்தான் இலையிலுள்ள சத்துக்கள்**

ஈரலிப்பு-83.3 கிராம்

சக்தி-61 கிலோகலோரி

புரதம்-6.7 கிராம்

கொழுப்பு-1.7 கிராம்

காபோவைதரேற்று-9.1 கிராம்.

டாக்டர் (திருமதி) விவியன் சத்தியசீலன்
M.D(Siddha)India
சிரேஷ்ட விரிவுரையாளர்
சித்தமருத்துவத்துறை
யாழ்.பல்கலைக்கழகம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அணுயுகத்தை நோக்கிய எமது நகர்வு?

கடந்த மாத ஆரம்ப நாட்களில் இடம்பெற்றிருந்த இந்திய -இலங்கை உச்சநிலைப் பேச்சு வார்த்தைகள் சுமுகமான முறையிலேயே இடம்பெற்றிருந்தன. பேச்சுவார்த்தையின் முனைப்பான விடயம் இலங்கை மற்றும் இந்திய கடற்பிராந்திய அத்துமீறல்கள் பற்றியதாக இருந்தும் இருநாடுகளுக்குமிடையில் ஏற்பட்டிருந்த அணுசக்தி ஒப்பந்தமே (Nuclear Pact) அநேகருக்கு எதிர்பாராத ஆச்சரியத்தைக் கொடுத்தாக இருந்தது.

அரசினது ஆத்மார்த்தமான வெளிப்படைத் தன்மை (The Sprit of Transperancy) என்பது மூடுமந்திரமான விதத்தில் அதுமட்டில் உயர் இரகசியம் பேணப்பட்டதாகவே அது இருந்தது. இந்தப் புதிய விடயம் முற்றுமுழுதாக யாருடைய இறுதி நலன்களின் பொருட்டு முகிழ்ந்துள்ளது என்ற கேள்வியை



எழுப்பும் இந்த ஆச்சரியத்திற்குரிய தகவலுக்கு விடையில்லை! இதனை பிராந்திய வலிமைக்கான ஒரு இராஜதந்திர வலுச்சாதனையொன்றாகவே (A DiplomaticTour de force) இந்திய ஊடகங்கள் உடன் பாராட்டிய அதேவேளை இதனை இந்திய வெளிநாட்டுக் கொள்கை வகுப்புக்குழுவின் சதியொன்றென்பதாகவே வேறு சிலர் கருத்துக்கூறியுமிருந்தனர். இலங்கையை விருப்பத்திற்குரிய தெரிவான ஓர் முதற்தரப் பங்காளியாக (As a partner of first choice) இந்திய நலன்களுக்கு வாய்ப்பாக நகர்த்திக் கொண்டதாக பாராட்டுமளவிற்கேகூட அவர்கள் சென்றிருந்தனர். சீனாவுடனான நிலைப்பாட்டை அந்த மட்டில் கைவிட்டதில் இது இலங்கைக்கு இழுக்கினை ஏற்படுத்துவதாகவே அமையும். ஆனாலும் இலங்கையுடனான இந்த அணுசக்தி உடன்படிக்கை மூலம் அதற்கு விளையப் போவதுதான் என்ன?

இந்த ஒப்பந்தத்தின் கீழ், மின்சக்தி வலுப்பயிற்சி மற்றும் மின்சார விநியோகம், விற்பனை சேவைகள் உள்ளிட்ட அணுசக்தி உட்கட்டமைப்பு, சிறிய அளவிலான அணு உலைகள் (Reactors) போன்ற கட்டுமான நிர்மாணிப்பு வேலைகளில் இலங்கைக்கு இந்தியா உதவ இருக்கிறது. மாதத்தின் இறுதி வாரங்களின் போது கொழும்பிலுள்ள ரஷ்யத் தூதுவரை சந்தித்த மின்சக்தி அமைச்சர் இதேபோன்ற தொரு உடன்படிக்கையொன்றின் பொருட்டு அவருடன் கலந்துரையாடியிருந்தார். அதாவது, தனது மின்சக்தி வளத் தேவைகளின் பொருட்டு அணுசக்தி வலுவைப் பெற்றுக்கொள்வுதற்கான வழிகளில் எமது நாடு மிகுந்த ஆர்வத்துடன் முன்னேறிச் சென்று கொண்டிருக்கிறது. அதேநேரம், அணுஉலைகளில் ஏற்படக்கூடிய தவறுகள், விபத்துக்கள் காரணமாக தமது மக்களுக்கு ஏற்படக்கூடிய ஆபத்துக்களைக் கருத்திற் கொள்ளும் உலகின் ஏனைய நாடுகள், விசேடமாக மேற்கத்தேய நாடுகள் அணுசக்தி வளப் பிரயோகத்திலிருந்து விடுபட்டு விலகிச் செல்வதென்ற தீர்மானத்துடன் செயலிலும் இறங்கியுள்ளன. தற்போது இந்த நாடுகளிலெல்லாம் புதிது புதிதான சக்தி வளங்களைத் தேடிக் கொள்ளும் முயற்சியாக பாதுகாப்பான ஒரு இடமாக உலகினை கண்டுகொள்ளும் செயற்பாடுகளே இடம் பெற்று வருவது கண்கூடு.

> அணு யுகத்தை நோக்கிய எமது நகர்வு எனும் தலைப்பில் சண்டே ரைம்ஸ் ஆசிரியர் தலையங்கத்தில் வெளியான கட்டுரையின் தமிழாக்கம் இங்கு பிரசுரமாகிறது.

கிழக்கு ஐரோப்பாவைச் சேர்ந்த உக்ரைனின் செர்னோபிஸ் நகரில் 1986 இல் இடம்பெற்ற அந்தப் பயங்கர அணுக்கதிர் வீச்சு விபத்தின் துயரம் மிகுந்த பயங்கர அனுபவங்கள் இன்றுங்கூட உலகையே உலுப்பிக் கொண்டிருக்கின்றன. அணுக்கதிர்வீச்சுக் கசிவினால் ஜப்பானின் புகுஷிமாவில் ஏற்பட்ட பேரழிவுகளிலிருந்து முற்றிலும் விடுபடுவதற்காக ஜப்பான் இப்போதும் திணறிக் கொண்டேயிருக்கிறது. ஜப்பானின் அணு உலைகள் அப்போது ஏற்பட்ட சுனாமிப் பேரலையின் தாக்கத்திற்கு உள்ளாகியதிலேயே அப்போதைய அணுக் கதிர் வீச்சு கட்டுப்பாட்டையும்மீறி





அடிக்கடி பிரவகிக்கும் நிலை ஏற்பட்டிருந்தது. அணுசக்திக்கெதிரான பரந்துபட்ட போராட்டங்களைத் தொடர்ந்து ஐரோப்பாவின் மிகப் பெரிய கைத்தொழில் சக்தியான ஜேர்மனி தன்னகத்தேயுள்ள அணுசக்தி நிலையங்களனைத்தையும் 2022 ஆம் ஆண்டளவில் மூடிவிடத் தீர்மானித்துள்ளது.

அணுசக்தி எதிர்ப்பு சம்பந்தமாக ஆராய்வதற்கென தனியான சட்ட ஆய்வு அமைப்பெதுவும் இலங்கையில் இல்லாததுடன் பாரம்பரியமாக நாம் பயன்படுத்தும் நீர்வள மின்சாரத்



திற்குப் பதிலாக மாற்றீட்டுச் சக்திவளப் பயன்பாடுகள் பற்றிய விவாதங்கள் இடையிடையே ஏற்படுவதுமுண்டு. பருவகால வரட்சி, இறக்குமதி செய்யப்படும் விலையுயர்ந்த எரிபொருள் பயன்பாட்டுக்கான மின்னுற்பத்தி இயந்திராதிகள் போன்றவற்றுடன் சுற்றுச்சூழலை மாசுபடுத்தும் நிலக்கரிப் பயன்பாடுகள் போன்றவையும் மின்னுற்பத்தியைப் மட்டுப்படுத்துவதால் அவற்றுக்கான மாற்றுவள சக்தி பற்றி கருத்திற் கொள்ளப் பட்டுள்ளது. இது எதுவா விருப்பிற்குரிய அணுசக்தியே தான் அவர்களுக்கான ஒரே மாற்றுவள சக்தியாக விருப்பத்திற்குரிய ஒரே சிறப்பு தெரிவு என்றாகிவிடுமா?

எனவே பெரிய நாடுகளிலும் பார்க்க இவ்வித சக்திப் பயன்பாடுகள் காரணமாக பேரழிவு ஆபத்துக்களுக்கு முகங்கொடுக்கும் தகுதியோ பலமோ அற்ற மிகச்சிறிய நாடாகிய இலங்கையில் பூகோள ரீதியில் பெரிய அளவிலான நிலப் பகுதிகள் எதற்காக அணுசக்தி வளப்பயன்பாட்டிற்கான விருப்பத்திற்குரிய தெரிவாகவேண்டும்? அணுசக்தியொன்றேதான் விருப்பத்திற்கான எமது தெரிவா? தொழில் ரீதியில் ஒரு பொறியியலாளராக இருக்கும் எமது மின்சக்திவள அமைச்சரவர்கள் அணுசக்திப் பயன்பாட்டிற்கு ஆதரவுடன் ஆக்கமும் ஊக்கமும் அளித்துவரும் ஒருவராக இருப்பினும் நுரைச் சோலையில் (சீன) மற்றும் சம்பூரில் இந்திய அனுசரணையுடனும் இயங்கிவரும் நிலக்கரிப் பயன்பாட்டிற்குரிய அணுசக்தி இயந்திராதிகள் மட்டில் வெவ்வேறு விதமான காரணங்களின் அடிப்படையில் தொடர்ந்தும் விமர்சிப்பவராகவே இருக்கிறார். இதன்பயனாக பரந்தளவில் ஏற்படக்கூடிய வாய்ப்புகள் குறித்தும் பேசும் அவர் விவசாயம், மின்னுற்பத்தி, மருத்துவம் போன்ற துறைகளுக்கு அதிகரித்தவிதமாக ஏற்படக்கூடிய நன்மைகளின் பொருட்டு இலங்கைக்கு அணுசக்திப் பயன்பாட்டையே அவர் பரிந்துரைக்கிறார்.

2012 ஆம்ஆண்டிலும் முன்னைய அரசாங்கத்தின் கீழ் இதே விடயத்தைக் கையாண்டிருந்தவரான இந்த அமைச்சர் இலங்கைக்கு வெகு அருகாமையாக இந்தியாவில் இயங்கிவரும் அணு உலைகளிரண்டு பற்றிய பாதுகாப்புப் பகுப்பாய்வு அறிக்கை (Safety analysis report) ஒன்றினை இந்தியா ஏற்கனவே தந்திருக்கவில்லை என்பதை அவர் ஏற்றுக்கொண்டதன்மூலம் அணுசக்தி விபத்தொன்று எதிர்காலத்தில் ஏற்படக்கூடிய சந்தர்ப்பம் இல்லை என்பதற்கு 100 வீத உத்தரவாதம் இல்லை என்பதையுங்கூட அவர் ஏற்றுக் கொண்டவராகவே இருக்கிறார். அமைச்சர் அவர்களது இந்தவிதக் கரிசனையையும் துரதிர்ஷ்டியையும் 2015 இல் புதுடில்லியில் வைத்து அவர் மாற்றிக்கொண்டுவிட்டாரா? இதுமட்டில் முன்னைய தெளிவற்ற கொள்கையே தொடர்கிறதா?

இந்தியாவுடனான உடன்படிக்கை கைச்சாத்தாகிய பின்னர் மின்சக்தி வள அமைச்சு வெளியிட்டிருந்த உத்தியோகபூர்வ ஊடக அறிக்கையொன்றில் இந்த இருதரப்பு உடன்படிக்கை மட்டிலான ஏற்பாடுகள் பற்றியும் குறிப்பிடப்பட்டுள்ளது.

2012 இல் நடை பெற்ற மூன்று சந்திப்புக் கள் மற்றும் 2014 இல் மே மாதமும் ஒக்டோபர் மாதமும் இடம்பெற்ற சந்திப்புக்களைத் தொடர்ந்தே இந்த உடன்படிக்கை ஏற்படுத்தப்பட்டதாக அது கூறுகிறது.

(தொடரும்)

**தமிழில்: யோகர்**

Digitized by Noolaham Foundation. noolaham.org | aavanaham.org

# சுகாதார தொண்டர்களுக்கு நாளை நிரந்தர நியமனம்

(கிளிநொச்சி-1)

**வடக்கு மாகாண சுகாதார அமைச்சின் கீழுள்ள திணைக்களங்களில் சுகாதாரத் தொண்டர்களாகப் பணிபுரிந்து வருகின்ற 350 பேருக்கு நிரந்தர நியமனம் வழங்கப்படவுள்ளது.இந்நிரந்தர நியமனம் வழங்கும் நிகழ்வு நாளை வியாழக்கிழமை பி.ப 2மணிக்கு கிளி/மத்திய கல்லூரியில் நடைபெறவுள்ளது.**

இதுதொடர்பில் தெரியவருவதாவது, வடக்கு மாகாணத்திலுள்ள கிளிநொச்சி, முல்லைத்தீவு ஆகிய மாவட்டங்களில் வடக்கு மாகாண சுகாதார அமைச்சின் கீழுள்ள திணைக்களங்களில் 180 நாட்களைப்பூர்த்தி செய்த சுகாதாரத் தொண்டர்களுக்கே நிரந்தர நிய்மனம் வழங்கப்படவுள்ளது.

இந்நிகழ்விற்கு பிரதம விருந்தினராக வடக்கு மாகாண சபையின் முதலமைச்சர் சி.வி. விக்னேஸ்வரன் கலந்து கொண்டு சிறப்பிக்கவுள்ளார்.

அத்துடன் வடக்கு மாகாண கல்வி அமைச்சர் த.குருகுலராசா, வடக்கு மாகாண சுகாதார அமைச்சர் ப.சத்தியலிங்கம், வடக்கு மாகாண அவைத் தலைவர் சி.வி.கே.சிவஞானம், வடக்கு மாகாண சுகாதார அமைச்சின் செயலாளர் ஆர்.ரவீந்திரன் ஆகியோர் கலந்து சிறப்பிக்கவுள்ளனர்.

யாழ்ப்பாணம், வவுனியா, மன்னார் ஆகிய மாவட்டங்களைச் சேர்ந்த சுகாதார தொண்டர்களுக்கு மிக விரைவில் இந்நிரந்தர நியமனங்கள் வழங்கப்படவுள்ளமை குறிப்பிடத்தக்கது.

முல்லைத்தீவு மாவட்ட சுகாதாரத் தொண்டர் தமக்கான நிரந்தர நியமனம் கோரி கடந்த ஜனவரி மாதம் இருநாட்கள் கவனயீர்ப்புப் போராட்டமொன்றையும் அடையாள உண்ணா விரதப் போராட்டத்தையும் முல்லைத்தீவு மாவட்ட செயலகத்துக்கு முன்பாக நடத்தியிருந்தனர்.

இதனையடுத்து வடக்கு மாகாண சபை உறுப்பினர் து.ரவிகரன் நேரில் சென்று சுகாதார தொண்டர்களின் குறைகளை கேட்டறிந்து கொண்டதோடு வடக்கு மாகாணசபை சுகாதார அமைச்சர் ப.சத்தியலிங்கத்துடன் தொலைபேசியில் தொடர்பு கொண்டு நிலைமைகளை விளக்கியிருந்தமை குறிப்பிடத்தக்கது.

இதேவேளை சுகாதார தொண்டர்கள், வடக்கு மாகாண சபையின் முதலமைச்சர் உட்பட சம்பந்தப்பட்டவர்களுக்கு மகஜரையும் அனுப்பி வைத்திருந்தனர். (அ-2-277)





மாத்தளன் றோமன் கத்தோலிக்க அரசினர் தமிழ்க்கலன் பாடசாலையில் தரம் 5 இல் கல்வி பயின்று வருகின்ற மாணவர்களால் வருடாவருடம் நடத்தப்பட்டு வருகின்ற மாதிரிச் சந்தையொன்று கடந்த 12 ஆம் திகதி நடை பெற்றது. இச் செயற்பாடானது சுற்றாடல் பாடத்திட்ட அடிப்படையில் மாணவர்களின் திறன்களை விருத்தி செய்யும் நோக்கில்மேற் கொள்ளப்பட்டது.

# கிணற்றிலிருந்து யுவதி சடலமாக மீட்கப்பட்டார்

(குருமன்காடு)

வவுனியா கிணறு ஒன்றிலிருந்து யுவதி ஒருவரின் சடலம் மீட்கப்பட்டுள்ளது.

வவுனியா வேப்பங்குளம் 7 ஆம் ஒழுங்கையில் வசிக்கின்ற குணரட்ணம் லக்சிகா (வயது18) என்ற யுவதியே நேற்றுக்காலை சடலமாக மீட்கப்பட்டவராவார்.

இது தொடர்பில் தெரியவருவதாவது,

குறித்த யுவதியை கடந்த 15ஆம் திகதி மாலையிலிருந்து காணவில்லையென வீட்டார் தேடி வந்தனர்.

இந்நிலையில் அவர்கள் வசித்துவந்த வளவு கிணற்றில் தண்ணீர் எடுக்கச்சென்றபோதே யுவதி சடலமாக மிதப்பதைக் கண்டு மீட்டுள்ளனர்.






சம்பவ இடத்திற்கு விரைந்த திடீர் மரண விசாரணைஅதிகாரி சிவநாதன் கிசோர் விசாரணைகளை மேற்கொண்ட பின் சடலத்தை வவுனியா வைத்தியசாலைக்கு கொண்டு செல்லுமாறு பணித்தார். இது தொடர்பாக விசாரணைகளை வவுனியா பொலிஸார் மேற்கொண்டுவருகின்றனர். (அ-2-250)

# தவிசாளருக்கு எதிராக சபை உறுப்பினர்கள் ஆர்ப்பாட்டம்

(குருமன்காடு)

வவுனியா தெற்கு தமிழ் பிரதேச சபை உறுப்பினர்கள் ஏழு பேர் தவிசாளருக்கு எதிராக பிரதேச சபை வளாகத்தின் பிரதான வாயிலை பூட்டி ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டனர்.

இவ் ஆர்ப்பாட்டம் நேற்றுக்காலை இடம் பெற்றது. இது தொடர்பில் மேலும் தெரிய வருவதாவது,

தமிழ் தேசியக் கூட்டமைப்பின் வசமுள்ள வவுனியா தெற்கு தமிழ் பிரதேச சபையின் பதவிக் காலம் எதிர்வரும் ஏப்ரல் மாதத்துடன் நிறைவடையவுள்ளது.

இதனால் ஒதுக்கப்பட்ட அபிவிருத்தி பணிகளை துரிதமாக நடைமுறைப்படுத்த பிரதேச சபை தவிசாளர் ஒத்துழைப்பு வழங்கவில்லை.



தன்னிச்சையாக செயற்படுவதாகவும் அபிவிருத்தி வேலைகளுக்கு வாகனத்தை தனது விருப்பப்படியும் செயற்படுத்துவதாகவும் ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டுள்ள உப தவிசாளர் மற்றும் உறுப்பினர்கள் தெரிவித்தனர்.

சபையில் எடுக்கப்படும் சில தீர்மானங்கள் மற்றும் சில கருத்துக்கள் ஆவணப்படுத்தப் படுவதில்லை.

அத் தீர்மானங்களுக்கு ஏற்ப செயற்படுவதில்லை எனவும் தெரிவித்தும், தமக்கு நீதி வேண்டும் எனக் கோரியுமே உறுப்பினர்கள் இவ் ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டனர்.

இது தொடர்பில் பிரதேச சபை தவிசாளர் க.சிவலிங்கம் கருத்து தெரிவிக்கையில்,

தனக்கு இது தொடர்பில் எதுவும் அறியத்தரவில்லை எனவும் தாம் முழுமையாக அபிவிருத்தி செய்து வருவதாகவும் வேறு சபைகளிடம் இருந்து கூட வாகனங்கள் பெறப்பட்டு அபிவிருத்தி இடம்பெறுவதாகவும் தெரிவித்தார்.

எனவே தமிழ்த்தேசியக் கூட்டமைப்பின் தலைமை இவ்விடயம் தொடர்பில் ஆராய்ந்து முடிவெடுக்க வேண்டுமென கோரிக்கை விடுக்கப்படுகின்றது. (அ-2-250)

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# மீனவர்களை சுடுவதற்கு உரிமையுண்டு

## ரணிலின் கருத்துக்கு அமைச்சர் ராஜித கடும் எதிர்ப்பு தெரிவிப்பு



(கொழும்பு)

**இலங்கை கடற்பரப்பிற்குள் எல்லை தாண்டி மீன்பிடி நடவடிக்கையில் ஈடுபடும் இந்திய ம்னவர்கள் மீது துப்பாக்கி பிரயோகம் செய்வதற்கு உரிமையுள்ளது என பிரதமர் ரணில் விக்கிரம சிங்க மீண்டும் தெரிவித்துள்ள கருத்திற்கு அமைச்சரவை பேச்சாளர் ராஜித சேனாரத்ன கடும் எதிர்ப்பை வெளியிட்டுள்ளார்.**

பிரதமர் ரணில் விக்கிரம சிங்க ஏன் மீண்டும் என்.டி. தொலைக்காட்சிக்கு இவ்வாறு கருத்து வெளியிட வேண்டும் என்ற கேள்வி க்கு, இந்திய மீனவர்களின் ஊடுருவல் காரணமாக பாதி க்கப்பட்டு ள்ள வடபகுதி மீனவர்களின் ஆதரவை பெறும் நோக்கத் துடன் ரணில் விக்கிரமசி ங்க இந்த கருத்தை வெளியி ட்டிருக்கலாம் என ராஜித சேனாரத்ன தெரிவித்துள் ளார்.

பிரதமர் ரணில் விக்கிரம சிங்கவின் இந்த கருத்தினை தான் அங்கீகரிக்கவில் லையென அமைச்சரவை பேச்சா ளர் ராஜித சேனாரத்ன இந் திய ஊடகத்திடம் தெரிவி த்துள்ளார்.

மேலும் வடமாகாண முத 'லமைச்சர் விக்னேஸ்வர னுடனான ரணில் விக்கி ரமசிங்கவின் மோதலின் ஒரு பகுதியாகவும் இது அமை ந்திருக்கலாம் என அவர் குறிப்பிட்டுள்ளார்.

அடுத்த சில மாதங்களில் நாடாளுமன்ற தேர்தலை சந்திக்கவுள்ளதை சுட்டிக் காட்டி தமிழ் தேசிய கூட்ட மைப்பிற்கு ஆதரவான மீன வர்களை பிரதமர் தன் பக்கம திருப்ப முயற்சிகளை மேற் கொண்டிருக்கலாம் எனவும் தெரிவித்துள்ளார்.

எல்லை தாண்டி மீன்பிடி ப்பதற்கு மீனவர்களினை மாத்திரம் குற்றஞ்சாட்ட முடி யாது. றோலர் படகுகளின் உரிமையாளர்களையும் குற் றஞ்சாட்ட வேண்டும், அவர் களே மீனவர்களை எல்லை தாண்டுவதற்காக அழுத்தங் களை கொடுக்கின்றனர் என அமைச்சர் மேலும் தெரிவித் துள்ளார்.பிரதமர் தெரிவித்தி ருப்பது ஒரு கவலை தரக்கூடிய கருத்து. இது ஒரு மனிதாபிமான பிரச்சினை என அவர் மேலும் சுட்டிக்காட்டியுள்ளார். (3-5)

## சந்தைகளில் நேற்றைய விலை விபரம்

| மரக்கறி வகைகள் | நெல்லியடி | திருநெல்வேலி | கிளிநொச்சி | சுன்னாகம் | மருதனார்மடம் |
|---|---|---|---|---|---|
| | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா |
| கத்தரிக்காய் | 60 | 80 | 80 | 80-90 | 90 |
| உருளைக்கிழங்கு | 100 | 100 | 100 | 100 | 90 |
| பச்சைமிளகாய் | 50 | 60 | 80 | 60 | 60 |
| தக்காளி | 30 | 60 | 40 | 30 | 40 |
| மரவள்ளிக்கிழங்கு | 50 | 50 | 60 | 40 | 50 |
| கோவா | 40 | 30 | 60 | 30 | 40 |
| கரட் | 140 | 80 | 120 | 80-120 | 120 |
| பூசணி | 50 | 50 | 80 | 50 | 70 |
| புடோல் | 40 | 40 | 50 | 40 | 50 |
| வாழைக்காய் | 80 | 80 | 60 | 60 | 60 |
| சின்ன வெங்காயம் | 80 | 60 | 80-100 | 50-70 | 50 |
| பெரிய வெங்காயம் | 80 | 80 | 90 | 90 | 80 |
| பாகற்காய் | 80 | 100 | 80 | 80 | 60 |
| வெண்டிக்காய் | 50 | 70 | 80 | 50 | 60 |
| கருணைக் கிழங்கு | — | 40 | 60 | 50 | 70 |
| பயற்றங்காய் | 60 | 80 | 80 | 80 | 80 |
| லீக்ஸ் | 200 | 160 | 160 | 160-180 | 150 |
| பீற்றூட் | 30 | 40 | 60 | 40 | 40 |
| கறிமிளகாய் | 200 | 150 | 120 | 120-160 | 100 |
| முருங்கைக்காய் | 150-300 | 300 | 300 | 240 | 400 |
| போஞ்சி | 160 | 140 | 160 | 120 | 120 |
| கத்தரிதம்புள்ள | 40 | 60 | 60 | 70 | 60 |
| கீரை - 1 பிடி | 10 | 20 | 20 | 30 | 25 |
| தேசிக்காய் | 30 | 50 | 60 | 60 | 50 |
| தேங்காய் (ஒன்று) | 25-70 | 60 | 50-70 | 60 | 60 |
| இராசவள்ளி | 140 | 100 | 150 | 100-120 | 120 |
| வெங்காயப்பூ | 80 | 160 | 50 | 80 | 100 |
| முள்ளங்கி | 20 | 30 | 50 | 30 | 30 |
| பொன்னாங்காணி | 20 | 20 | 20 | 30 | 30 |
| வல்லாரை | 10 | 10 | 10 | 10 | 20 |

## நிறைவேற்று அதிகாரத்தை மட்டும் குறைத்தால் ஆதரவு இல்லை

தேர்தல் முறைமையில் மாற்றத்தை ஏற்படுத்தாமல், நிறைவேற்று அதிகாரம் கொண்ட ஜனாதிபதி முறை யின் அதிகாரங்களை மாத்தி ரம் குறைப்பதனால் அதற்கு ஒருபோதும் ஆதரவளிக்கப் போவதில்லை என்று ஐக்கிய மக்கள் சுதந்திரக் கூட்டமை ப்பின் கட்சித் தலைவர்கள் தீர்மானித்துள்ளனர் என்று ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின்

**அனுரபிரிய தர்ஷன யாப்பா தெரிவிப்பு**

பொதுச் செயலாளர் அனுரபிரிய தர்ஷன யாப்பா தெரிவித்துள ளார்.

ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவின் தலைமையில், ஐக்கிய மக்கள் சுதநதிரக் கூட்டமைப்பின் கட்சித் தலை வர்களுடனான கலந்துரை யாடலொன்று, இலங்கை மன் றக் கல்லூரியில் நேற்று முன்தி னம் திங்கட்கிழமை நடை பெற்றது. இதன்போது, நிறை வேற்று அதிகாரம் கொண்ட ஜனாதிபதியின் அதிகாரங் களைக் குறைத்தல் மற்றும் தேர்தல் முறையை மாற்றிய மைத்தல் ஆகிய திருத்தங் களை ஒரே தடவையில் கொணடுவரப்பட வேண் டும் என்று இக்கூட்டத்தின் போது தீர்மானம் நிறைவே ற்றப்பட்டமை குறிப்பிடத்த க்கது. (3-5)

## facebook (f) ஃபேஸ்புக் பார்த்ததில் பிடித்தவை... Like 314

இலக்கியா நகுலன்

உண்மையைப் பேசி யார் மனதையும் நோகடிப்பதை விட மௌனம் பேசி நகர்ந்து செல்வதே மேல். -

ருக்சி சிவகுமார்





தனு தனுசியா




பிரவின் தாஸ்




ராஜா தனு



தர்சன் கவிதா





நீங்கள் பார்த்த ஃபேஸ்புக்கில் உங்களுக்குப் பிடித்தவை இருந்தால் www.facebook.com/valam.puri.16 எனும் தளத்தில் பதிவு செய்யுங்கள். அவை உங்கள் பெயர்களுடன் facebook பார்த்ததில் பிடித்தவை பகுதியில் பிரசுரமாகும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பங்குனி மாத இராசி பலன்கள்

## 15.03.2015-13.04.2015



**மூன்றாமிடத்து புதனால் முயற்சிகளில் வெற்றி! பக்கத்தில் இருப்பவர்களை பாச மழையில் நனைய வைக்கும் தனுசு இராசி நேயர்களே!**

பங்குனி மாதக் கிரக நிலைகளை ஆராய்ந்து பார்க்கும்பொழுது, உங்கள் ராசிநாதன் குரு வக்ர இயக்கத்தில் இருக்கிறார். அதே நேரத்தில் பலம்பெற்ற ராகு 10இல் சஞ்சரிக்கின்றார். எனவே, முன்னேற்றப் பாதையில் அடியெடுத்து வைக்கப் போகிறீர்கள். தொழிலுக்காக முதலீடு செய்ய, கேட்ட இடத்தில் தொகை கிடைக்கும். வெளிவட்டாரப் பழக்க வழக்கம் விரிவடையும்.

வெற்றிக்குரிய ஸ்தானத்தில் புதன் வீற்றிருப்பதால் வழக்குகள் சாதகமாக முடியும். அனைத்து வழிகளிலும் முயற்சி செய்து இன்னும் காரியம் கைகூடவில்லையே என்று அங்கலாய்த்தவர்கள் இப்பொழுது மகிழ்ச்சியடையும் விதத்தில் ஒவ்வொன்றாக நடைபெறப் போகின்றது.

நீடித்த நோயிலிருந்து நிவாரணம் பெறுவீர்கள். நிறுத்தி வைக்கப்பட்டிருந்த சலுகைகள் ஒவ்வொன்றாக வந்துசேரும். நீண்டதூரப் பயணங்களால் நன்மை கிடைக்கும். உத்தியோகத்தில் உடனிருப்பவர்களால் ஏற்பட்ட பிரச்சினை அகலும். புத்தாண்டு பிறந்து இன்னும் எதுவும் சரியாக நடக்கவில்லையே என்று ஏங்கியவர்களுக்கு இப்பொழுது மகிழ்ச்சிக்குரிய தகவல்கள் வந்துசேரப் போகின்றது.

சூரிய பலம் நன்றாக இருப்பதால் பொதுநலத்தில் ஈடுபட்டிருப்பவர்களுக்கு புதிய பொறுப்புகளும், பதவிகளும் வந்துசேரலாம். குடும்பச்சுமை கூடுகிறதே என்று கவலைப்படுவீர்கள். இருப்பினும் ஏழரைச் சனியின் ஆதிக்கம் நடைபெறுவதால் பற்றாக்குறை தீர பக்கத்திலிருப்பவர்களிடம் கைமாற்று வாங்கும் சூழ்நிலை ஏற்படலாம். உற்றார், உறவினர்களின் பகையை வளரவிடாமல் பார்த்துக்கொள்வது உங்கள் புத்திசாலித்தனமாகும்.

விரயச் சனியின் ஆதிக்கத்தில் விரயங்களே அதிகம் சேரும் என்பதால் இதுபோன்ற காலங்களில் சுபச் செலவுகளை மேற்கொண்டால் வீண விரயங்களிலிருந்து விடுபட இயலும். எனவே, மந்தன் சனியைக் கொண்டாடினால் வந்த செலவு வளர்ச்சிக்குரிய செலவாக அமையும். பங்குனி உத்திரத் திருநாளில் முருகப்பெருமானை வழிபடுவதன் மூலம் மங்கலம் அனைத்தும் மனை தேடிவரும்.

**மேட செவ்வாயின் சஞ்சாரம்!**

மார்ச் 21 ஆம் திகதி மேட ராசியில் செவ்வாய் சஞ்சரிக்கப் போகின்றார்.




பாக்யாதிபதி பாக்ய ஸ்தானத்தில் சஞ்சரிப்பது யோகம்தான். பூர்வீக சொத்து தகராறுகள் அகலும். உதாசீனப்படுத்திய உடன்பிறப்புகள் உங்களைத் தேடி வருவர். ஏற்கனவே உள்ள சொத்துக்களை வைத்திருப்பதைக் காட்டிலும், அதைக் கொடுத்து விட்டுப் புதிய சொத்துக்களை வாங்க வேண்டுமென்ற எண்ணம் மேலோங்கும். புதிய முயற்சிகளில் வெற்றி கிட்டும். தொழில் வளர்ச்சி கூடும். இதுவரை கிடைக்காத நல்ல வாய்ப்புகள் இப்பொழுது வந்துசேரப் போகின்றது.

**நீச்ச புதனின் சஞ்சாரம்!**

மார்ச் 21 ஆம் திகதி புதன் மீனத்திலும் நீச்சம்பெறுகிறார். 7, 10இறகு அதிபதியான புதன நீச்சம் பெறுவது யோகம்தான். தொழில வளர்ச்சி நன்றாக இருக்கும். தொகை கேட்ட இடத்தில் கிடைக்கும். பிரிந்த தம்பதியர் வந்திணைவர். பிரசசினைகள் ஒவ்வொன்றாக தீரும். மாமன், மைத்துனர் வழியில் இருந்த மனக்கசப்புகள் மாறும். சேமிப்பில் சிறிது கரைந்தாலும் அதை ஈடுகட்ட புதிய ஒப்பந்தங்கள் வந்துசேரும். ஏப்ரல் 6 ஆம் திகதி மேட புதனின் சஞ்சாரத்தால் குடும்பத்திற்குத் தேவையான விலையுயர்ந்த பொருட்களை வாங்கி மகிழ்வீர்கள்.

**இடப சுக்ரனின் சஞ்சாரம்!**

இடப ராசியில் ஏப்ரல் 7 ஆம் திகதி சுக்ரன் சஞ்சரிக்கப் போகிறார். மறைவிடத்தில் சுக்ரன் நிற்கும் பொழுது நிறைவான பலன்கள் வந்துசேரும். எனவே, ஆரோக்கியத் தொல்லை அகலும். அடுத்தவர் நலன் கருதி எடுத்த முயற்சிகளிலும் ஆதாயம் கிடைக்கும். உற்சாகத்துடன் பணி புரிந்து உயர்பதவிகளைப் பெற சிலர் முயற்சிப்பர். ஆபரண சேர்க்கை உண்டு. பெண்களால்பெருமை வந்து சேரும். நகை வாங்குவதில் நாட்டம் செலுத்துவர்.

இம்மாதம் நவக்கிரகத்தில் உள்ள குருவை வழிபட்டு நன்மைகளை வரவழைத்துக் கொள்ளுங்கள். முருகப் பெருமான் வழிபாடு உங்கள முன்னேற்றத்திற்கு வித்திடும்.

**பெண்களுக்கான சிறப்பு பலன்கள்**

இம்மாதம் 10 இல் உள்ள ராகுவால் பல்வேறு முன்னேற்றங்கள் வந்துசேரும். மாதத் தொடக்கத்தில் தனலாபாதிபதி வக்ரம் பெற்றிருப்பதால் செலவு செய்யும் முன் ஒரு கணம் யோசியுங்கள். ஆரோக்கியப் பாதிப்பு ஏற்பட்டால் உடனடியாக மருத்துவ ஆலோசனைகளைப் பெறுவது நல்லது. தாய்வழி உறவில் ஆதாயம் உண்டு. உடன் பிறப்புகளால் உதவிகள் கிடைக்கும். கணவன்- மனைவிக்குள் ஒற்றுமை பலப்பட அனுசரித்துத்தான் செல்ல வேண்டும். குழந்தைகளால் விரயம் உண்டு. இடமாற்றங்கள், ஊர்மாற்றங்கள் ஒரு சிலருக்கு எளிதில் வந்து சேரலாம். ஏழரைச் சனியின் ஆதிக்கத்திலிருந்து விடுபட சனிக்கிழமை சனிபகவான் வழிபாட்டை மேற்கொள்ளுங்கள். பங்குனி உத்திர நாளில் முருகனை வழிபட்டால் குறைகள் அகலும். மாதக்கடைசியில் தாய்வழி ஆதரவும், தனவரவும் உண்டு.

## மூன்றாமிடத்து புதனால் முயற்சிகளில் வெற்றி!

**ஜோதிடக் கலாமணி சிவல்புரி சிங்காரம்**



**சொத்து சேர்க்கை ஏற்படும் நேரம்! ஒளிவு மறைவின்றி உள்ளதை உள்ளபடி சொல்லும் மகர இராசி நேயர்களே!**

பங்குனி மாதக் கிரக நிலைகளை ஆராய்ந்து பார்க்கின்ற பொழுது, மாதத் தொடக்கத்தில் குருவின் பார்வை உங்கள் ராசியில் பதிந்தாலும், சனியின் பார்வையும் பதிவாகின்றது. எனவே வரவு ஒருபுறம் வந்தாலும் செலவும் அதிகரித்துக் கொண்டுதான் போகிறது என்று கவலைப்படுவீர்கள். மக்கள் செல்வங்களால் மனக் கலக்கம் ஏற்படலாம். தொழில் ஸ்தானாதிபதி சுக்ரன் தொழில் ஸ்தானத்தையே பார்ப்பதால் நடக்கும் தொழில் நல்ல விதமாக நடைபெறும். வரன்கள் வாயில் தேடிவரும்.

நாட்டுப்பற்று மிக்கவர்கள் உங்கள் கூட்டு முயற்சிக்கு ஒத்துழைப்புச் செய்வர். வீடு மாற்றச் சிந்தனைகள் மேலோங்கும். இருக்கும் இடத்தில் புதுப்புது தொல்லைகள் உருவாகிறதே என்று சிந்திப்பீர்கள். எனவே, ஏதேனும் இல்லத்தில் குடியேறலாமா அல்லது புதிய இல்லம் கட்டிக் குடியேறலாமா? என்றுகூட சிலர் சிந்திப்பர்.

செவ்வாய் பெயர்ச்சிக்குப் பிறகு உங்கள் எதிர்பார்ப்புகள் நிறைவேறும். இடம், பூமி வாங்குவதில் இருந்த தடைகள் அகலும். இலாப நோக்கத்தோடு பழகியவர்கள் உங்களை விட்டு விலகுவர். புதிய கூட்டாளிகள் வந்திணைந்து நீங்கள் முன்னேற்றப் பாதையில் அடியெடுத்து வைக்க முக்கியக் காரணமாக விளங்குவர். அரசுவழித் தொல்லைகள் எதிர்பாராத விதத்தில் வந்து சேரலாம். அதிகாரிகளை அனுசரித்துச் செல்வதன் மூலமே ஆதாயத்தை அடைய முடியும்.

விரயாதிபதி குருவின் பார்வை உங்கள் ராசியில் பதியும் இந்த நேரத்தில் வரும் விரயங்கள் தவிர்க்க முடியாததாக அமையும். எதையும் ஒருமுறைக்கு இருமுறை செய்யும் சூழ்நிலை உருவாகலாம். குழந்தைகளின் அலட்சியப் போக்கால் வீண் விரயங்கள் ஏற்படாதிருக்க அவர்களை உங்கள் மேற்பார்வையிலேயே வைத்துக்கொள்வது நல்லது. ராகு-கேதுக்களின் ஆதிக்கம் திடீர் திருப்பங்களை உங்களுக்கு ஏற்படுத்தலாம். குடும்பச் சுமை கூடும்.

குறிப்பாக சகாய ஸ்தானத்தில் கேது அஷ்டமாதிபதியுடன் இணைந்து சஞ்சரிக்கிறார். எனவே, தொழில் கூட்டாளிகளுடன் கொஞ்சம் விழிப்புணர்ச்சியுடன் இருப்பது நல்லது. அவர்கள் மூலம் கொடுத்த ஒரு பெரும் தொகை வருவதில்தாமதம்ஏற்படலாம். எனவே, தடைகளும், தாமதங்களும் அகல அனுமனுக்கு வடை மாலை அணிவித்து வழிபட்டு வருவது நல்லது. பங்குனி உத்திரம் நாளில் கந்தனை வழிபட்டால் கவலைகள் தீரும்.

**மேட செவ்வாயின் சஞ்சாரம்!**

மார்ச் 21 ஆம் திகதி மேட ராசியில் செவ்வாய் சஞ்சரிக்கின்றார். இதன் விளைவாக இடம், பூமி வாங்குவதில் இருந்த தடைகள் அகலும். தாய்வழி உறவினர்களிடமிருந்த பகை மாறும். குடும்ப ஒற்றுமைக்கு குந்தகம் விளைவித்தவர்கள் விலகுவர். அஞ்சல் வழியில் அனுகூலத் தகவல் வந்து சேரும். பணியாளர்களின் பாதிப்பால் இனி பாதியில் நின்ற பணி மீதியும் தொடரும். புதிய கூட்டாளிகள் வந்திணைந்து கூடுதல் லாபத்தை வரவழைத்துக் கொடுப்பர்.




**நீச்ச புதனின் சஞ்சாரம்!**

மார்ச் 21 ஆம் திகதியிலும் புதன் நீச்சம் பெறப்போகிறார். இது யோகத்தை வழங்கும் காலமாகும். காரணம் எதிர்ப்பு, வியாதி, கடன் எனப்படும் 6 ஆம் இடத்திற்கு அதிபதியானவர் புதன். அவர் நீச்சம் பெறுவதன் மூலம் எதிரிகள் விலகுவர். குறுக்கீடு சக்திகள் மாறும். குறை சொல்லியவர்கள் உங்கள குணமறிந்து நடந்துகொள்வர். கடன் சுமை பாதிக்கு மேல் குறையும். பாயில் படுத்தவர்கள் கூட பம்பரமாய் சுழன்று பணிபுரிவர்.

ஏப்ரல் 6 ஆம் திகதி மேடத்தில் புதன் சஞ்சரிக்கப் போகிறார். 9 இற்கு அதிபதி 4 இல் சஞ்சரிக்கும் பொழுது பெற்றோர் வழியில் பிரியம் கூடும். இதுவரை மற்ற சகோதரர்களிடம் அன்பு காட்டிய பெற்றோர்கள் இப்பொழுது உங்களிடம் அன்பு காட்டத் தொடங்குவர்.

**இடப சுக்ரனின் சஞ்சாரம்!**

ஏப்ரல் 7 ஆம் திகதி இடப ராசிக்கு சுக்ரன் செல்கிறார். இக்காலம் உங்களுக்கு ஒரு யோககாலம்தான். பிள்ளைகளாலும் உங்களுக்கு நன்மை கிடைக்கும். பெற்றோர்களின் பாச மழையிலும் நனைவீர்கள். ஆடை, ஆபரண சேர்க்கை அதிகரிக்கும். அன்றாட வாழ்க்கை நன்றாக அமைய இதுபோன்ற காலங்களில் தெய்வ வழிபாட்டை மேற்கொள்வது நல்லது. குறிப்பாக வடக்கு நோக்கிய தெய்வ வழிபாடு வளர்ச்சியைக் கூட்டும். இம்மாதம் நல்ல வாய்ப்புகள் இல்லம் தேடிவர நந்தி வழிபாட்டை மேற்கொள்ளுங்கள்.

**பெண்களுக்கான சிறப்பு பலன்கள்**

இம்மாதம் தொடக்கத்தில் ஆரோக்கியப் பாதிப்புகள் ஏற்பட்டாலும் மாற்று மருத்துவத்தால் உடல் நலத்தை சீராக்கிக் கொள்ள இயலும். தாய்வழி ஆதரவு உண்டு. தொழில் மற்றும் உத்தியோகம் சம்பந்தமாக எடுத்த முயற்சிகளில் ஏப்ரல் மாதம் அனுகூலம் கிட்டும். குடியிருக்கும் வீட்டால் ஏற்பட்ட பிரச்சினைகளை தீர்த்துக் கொள்ள முன்வருவீர்கள். கணவன-மனைவிக்குள் விட்டுக்கொடுத்துச் செல்வது நல்லது. குழந்தைகளின் எதிர்கால நலன்கருதி சேமிக்க முற்படுவீர்கள். மாதக் கடைசியில் பயணங்களால் பலன் கூடும். குரு வக்ர இயக்கத்திலிருப்பதால் குழந்தைகளின் கல்வி நலன் கருதி வெளியூரில் படிக்க வைக்கும் முயற்சியில் ஒரு சிலர் ஆர்வம் காட்டுவர். உதிரி வருமானங்கள் வருவதற்கான அறிகுறிகள் தென்படுகின்றன. கார்த்திகேயன் வழிபாடு கவலையைப் போக்கும்.

(தொடரும்)

## சொத்து சேர்க்கை ஏற்படும் நேரம்!

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# எகிப்தில் கட்சி தலைவர் உட்பட 14 பேருக்கு தூக்குத்தண்டனை

## அந்நாட்டு நீதிமன்றம் தீர்ப்பு

(கெய்ரோ)

**எகிப்தில் அரசியல் கட்சி ஒன்றின் தலைவர் உட்பட அக்கட்சியைச் சேர்ந்த 14 மூத்த உறுப்பினர்களுக்கு தூக்குத் தண்டனை விதித்து அந்நாட்டு நீதி மன்றம் தீர்ப்பளித்துள்ளது.**

எகிப்து ஜனாதிபதியாக இருந்த முகமது முர்சி கடந்த 2013 ஆம் ஆண்டு பதவி நீக்கம் செய்யப்பட்டார். அதை தொடர்ந்து அவரது சகோதரத்துவ கட்சிதொண்டர்கள் போராட்டம் மற்றும் வன்முறையில் ஈடுபட்டனர். அதில் ஏராளமானவர்கள் பலியாகினர்.

அதை தொடர்ந்து, சகோதரத்துவ கட்சியை தீவிரவாத இயக்கம் என அறிவித்து எகிப்து அரசு தடை செய்தது.

கலவரத்தில் ஈடுபட்டவர்களை கைது செய்து நூற்றுக்கணக்கானவர்களுக்கு தூக்குத்தண்டனை விதித்தது. இந்த நிலையில் சகோதரத்துவ கட்சி தலைவர் முகமது பாடி மற்றும் 13 மூத்த உறுப்பினர்கள் மீது நீதிமன்றில் வழக்கு தொடரப்பட்டது. வழக்கு விசாரணை தொடர்ந்து நடைபெற்று வந்தது.

இந்த வழக்கில் நேற்று முன்தினம் தீர்ப்பளிக்கப்பட்டது. அதில் கட்சி தலைவர் முகமது பாடி உட்பட 14 பேருக்கு தூக்குத் தண்டனை விதிக்கப்பட்டது.

மேலும், தண்டனையை குறைக்க, தீர்ப்பு குறித்த மறு விசாரணையை எகிப்தின் இஸ்லாமிய சட்ட நிபுணருக்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளது.

இதன் மீதான இறுதி தீர்ப்பு ஏப்ரல் 11 ஆம் திகதி வெளியாகிறது. (3-5)

# பாக்கில் 12 பேருக்கு தூக்குத் தண்டனை

(கராச்சி)

பாகிஸ்தானில் 12 தூக்குத்தண்டனை கைதிகளுக்கு நேற்றுக்காலை தூக்குத்தண்டனை நிறைவேற்றப்பட்டுள்ளது.

பல்வேறு சிறைகளில் அடைக்கப்பட்டிருந்த தூக்குத்தண்டனை கைதிகளின் கருணை மனுக்கள் ஏற்கனவே அந்நாட்டின் உச்ச நீதிமன்றம் மற்றும் பாக்கிஸ்தான் ஜனாதிபதியால் நிராகரிக்கப்பட்டிருந்தது.

இந்த நிலையில் நேற்று காலை கராச்சி உட்பட ஆறு பாகிஸ்தான் நகரங்களின் சிறைகளில் இருந்த 12 தூக்குத்தண்டனை கைதிகளின் தண்டனை நிறைவேற்றப்பட்டுள்ளது.

இதில் முல்தான் மத்திய சிறையில் இருந்த தூக்கு தண்டனை கைதி நசிரின் தண்டனை நிறைவேற்றம் கடைசி நேரத்தில் தள்ளி வைக்கப்பட்டுள்ளது.

இதற்கு குற்றவாளி தரப்புக்கும், எதிர்தரப்புக்கும் இடையே ஏற் பட்ட உடன்படிக்கைதான் காரணம் என்று சொல்லப்படுகிறது.

கராச்சியில் உள்ள பாடசாலையின் மீது தீவிரவாதிகள் தாக்குதல் நடத்தியதில் இருந்து பாகிஸ்தான் முக்கிய தீவிர வாதிகள் மற்றும் கொடுஞ்செயலில் ஈடுபட்டவர்களுக்கு தூக்குத்தண்டனையை நிறைவேற்றி வருகிறது குறிப்பிடத்தக்கது. (3-5)

# இந்திய மாணவி சுட்டுக்கொலை



அமெரிக்காவின் கலிபோர்னியா மாகாணத்தில் வசித்து வந்த இந்திய மாணவி ஒருவர் சுட்டுக் கொல்லப்பட்டார். அவருக்கு வயது 37. இந்தியாவைச் சேர்ந்தவர் ரந்திர் கவுர். இவர் சான் பிரான்சிஸ் கோவில் உள்ள கலிபோர்னியா பல்கலைக்கழகத்தில் பல் மருத்துவம் தொடர்பான சர்வதேச படிப்பு ஒன்றை படித்து வந்தார்.

அடுத்த ஆண்டு ஜூன் மாதம் அவர் படிப்பு முடிவடைவதாக இருந்தது. இந்நிலையில், கடந்த 8 ஆம் திகதி அல்பேனி நகரத்தில் உள்ள அவரது வீட்டில் மாலை சுமார் 4 மணியளவில் மர்மமான முறையில் இறந்து கிடந்தார். அதனைத் தொடர்ந்து பொலிஸார் விசாரணை மேற்கொண்டனர்.


கடந்த ஒரு வாரமாக நடந்து வரும் விசாரணையில், ரந்திர் கவுர் தனது வீட்டுக்குள்ளே வைத்து சுடப்பட்டிருக்கிறார் என்று தெரிய வந்துள்ளது. எனினும், மர்ம நபர்கள் அத்துமீறி வீட்டுக்குள் நுழைந்ததற்கான எந்த ஒரு தடயங்களும் இல்லை என்பதும் தெரியவந்துள்ளது. தவிர, அவரது கார் உள்ளிட்ட உடைமைகளுக்கும் எந்த ஒரு சேதமும் ஏற்படுத்தப்படவில்லை என்று பொலிஸார் தெரிவித்துள்ளனர். (3-5)

# ஐ.எஸ்.ஐ.எஸ். தீவிரவாதிகளுக்கு எதிரான தாக்குதலுக்கு வத்திக்கான் தூதுவர் ஆதரவு

ஈராக் மற்றும் சிரியா உள்ளிட்ட மத்திய கிழக்கு நாடுகளில் இஸ்லாமிக் ஸ்டேட் ஆயுதக்குழுவினர் இனப்படுகொலைகளை நிகழ்த்தி வருவதாகவும், அவற்றை நிறுத்தும் பொருட்டு அவர்களுக்கு எதிரான தாக்குதல் அவசியம் என்றும் வாத்திக்கான் தெரிவித்துள்ளது.

மத்திய கிழக்குப் பிராந்தியத்தில் ஏற்பட்டுள்ள பிரச்சினையை முடிவுக்கு கொண்டு வர அரசியல் ரீதியான முயற்சிகள் அவசியம் என்றும், அவை பலன்தராத பட்சத்தில் ஆயுதத்தாக்குதல் மூலம் சிறுபான்மையினர் காக்கப்பட வேண்டும் என்றும் ஐ.நாவுக்கான வத்திக்கான் தூதுவர் சில்வானோ டாமோசி தெரிவித்துள்ளார்.

மத்திய கிழக்குப் பிராந்தியத்தில் வாழும் கிறிஸ்தவர்கள், யாசிதிக்கள், ஷியா, சன்னி, அலாவித் என அனைத்துப்பிரிவு மக்களின் உரிமைகளைக் காக்க வேண்டிய கடமை சர்வதேச சமூகத்திற்கு உள்ளது என்றும், இப்போது நடவடிக்கை எடுக்கப்படவில்லை எனில் வருங்காலத்தில் அதற்காக வருந்த வேண்டிய சூழல் ஏற்படும் என்றும் அவர் தெரிவித்துள்ளார்.



ஈராக்கில் உள்ள சிறுபான்மையினர் ஒட்டுமொத்தமாக அழிக்கப்படக்கூடும் என்று கடந்த பெப்ரவரியில் மனிதவுரிமை அமைப்புகள் அச்சம் தெரிவித்திருந்தன என்பது குறிப்பிடத்தக்கது. (3-5)

# ரஷ்யாவில் பாரிய இராணுவ பயிற்சி

ரஷ்யாவில் பல பாகங்களில் பாரிய இராணுவ பயிற்சி நடவடிக்கைகள் நேற்று முன்தினம் ஆரம்பிக்கப்பட்டுள்ளன.

மேற்கு நாடுகளுடனான பனிப் போருக்குப் பின்னர் இந்த அளவிலான இராணுவ பயிற்சி நடவடிக்கைகள்இடம்பெறுவது இதுவே முதல் முறை என்பது குறிப்பிடத்தக்கது.

இந்த இராணுவ பயிற்சி நடவடிக்கைகளில் 41 யுத்த விமானங்கள் மற்றும் 15 நீர் மூழ்கி கப்பல்களும் ஈடுபடுத்தப்பட்டுள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ளது.

ரஷ்ய கடற்படையினரை, முழு அளவிலான தயார் நிலையில் இருக்கும்படி ஜனாதிபதி விளாடிமீர் புடின் உத்தரவிட்டுள்ளார். (3-5)

# பறக்கும் கார்கள் வருகிறது விற்பனைக்கு



உலகின் முதல் தானியங்கி பறக்கும்கார்கள் எதிர்வரும் 2017 ஆம் ஆண்டில் அறிமுகப்படுத்தப்படும் என தகவல் வெளியாகியுள்ளது. கடந்த 5 ஆண்டுகளாக இதற்கான ஆராய்ச்சியில் ஈடுபட்டு வரும் ஏரோமொபில் இதற்கான இறுதிக் கட்ட வடிவமைப்பு பணியில் தற்போது மும்முரமாக ஈடுபட்டுள்ளது.

சாதாரண பெற்றோலில் ஓடும் வகையில் தயாரிக்கப்படவுள்ள இந்த நவீன பறக்கும் கார்களில் இருவர் அமர்ந்து பயணம் செய்யலாம். மனிதர்களே ஓட்டும் வகையில் ஒரு மொடலும், தானியங்கி (ஆட்டோ பைலட் மோட்) முறையில் இயங்கும் மற்றொரு மொடலும் இதற்காக வடிவமைக்கப்பட்டு வருகின்றது.

சில நூறு அடிகள் நீளத்தில் ஒரேயொரு செயற்கை புல்தரை பட்டை மட்டும் இருந்தால் போதும். சாதாரண கார்போல தரையில் வேகமாக ஓடி, பின்னர் குட்டி விமானம் போல் உயரப்பறந்து 400 மைல் தூரம் கொண்ட இடத்தை இது விரைவாக சென்றடையும். பரசூட்டின் உதவியுடன் செயற்கை புல் தரையுடன் கூடிய ஓடுபாதையில் இறங்கும் இந்த நவீன பறக்கும் காரை பின்னர் ஷெட்டுக்குள் வைத்து பூட்டிவிட்டு நிம்மதியாக தூங்கப் போகலாம்.

விற்பனைக்கு வரும்போது இந்த காரின் விலை என்னவாக இருக்கும்? என்பது பற்றிய பலவிதமான யூகங்கள் நிலவிவரும் நிலையில் சராசரி பணக்காரர்களுக்கு இந்த பறக்கும் கார்கள் எட்டாத கனவாகவே இருக்கும்என கருதப்படுகிறது. (3-5)

# தீர்ப்புத் திகதி இன்று அறிவிப்பு

அ.தி.மு.க. பொதுச் செயலாளர் ஜெயலலிதா மற்றும் அவரின் தோழி சசிகலா உட்பட 4 பேர் மீதான சொத்துக் குவிப்பு வழக்கின் மேல் முறையீடு மீதான தீர்ப்புத்திகதி இன்று வெளியாகும்என்று செய்திகள் வெளியாகியுள்ளன.

சொத்துக் குவிப்பு வழக்கில் குற்றவாளிகளாக தீர்ப்பளிக்கப்பட்ட ஜெயலலிதா உள்ளிட்ட 4 பேர் பெங்களூர் தனிநீதி மன்ற தீர்ப்பை எதிர்த்து கர்நாடக உயர் நீதி மன்றத்தில் மேல் முறை யீட்டு மனு தாக்கல் செய்தனர்.

இந்நிலையில் வழக்கின் மீதான தீர்ப்புத் திகதி இன்று அறிவிக்கப்படும் என்று செய்திகள் வெளியாகியுள்ளன. இதனால் அ.தி.மு.க. வட்டாரத்தில் பரபரப்பு நிலவுகிறது. (3-5)


# உலகின் நீளமான விமானம் பறப்பதற்கு தயார்

உலகின் மிக நீளமான விமானம், அடுத்த ஆண்டு தொடக்கத்தில் விண்ணில் பறக்க தயாராக இருப்பதாக, அதன் தயாரிப்பு நிறுவன தலைவர் கிறிஸ் டேனியல் கூறியுள்ளார்.

"ஏர்லேண்டர் 10" என்று பெயரிடப்பட்டுள்ள இந்த ஹைபிரிடு விமானத்தின் நீளம் 302 அடி, அகலம் 143 அடி, 10 தொன் எடையுள்ள இந்த விமானம் மணிக்கு 148 கி.மீ. வேகத்தில் பறக்கக் கூடியது.

இவ் விமானத்தை அமெரிக்க இராணுவ பயன்பாட்டிற்காக, பிரிட்டனைச் சேர்ந்த ஹைபிரிடு ஏர் வெஹிக்கில்ஸ் நிறுவனம் தயாரிக்கத் தொடங்கியது. ஆனால், அமெரிக்காவின் பட்ஜெட் குறைப்பால் இதன் தயாரிப்பு பணி தடைபட்டது. பின்னர் பிரிட்டன் அரசு 5.1 மில்லியன் டொலர் நிதியுதவி வழங்கியதை அடுத்து, தயாரிப்பு பணி தொடர்ந்தது. இந்த விமானத்தின் தயாரிப்புப் பணிகள் முடிந்து இந்த ஆண்டு இறுதியில் சோதனை ஓட்டம் நடத்தப்படுகிறது.

தோற்றத்தில் விமானம் போலவும், ஹெலிகொப்டர் போலவும் தோன்றும் இந்த விமானத்திற்கு "ஏர்லேண்டர் 10" என்று பெயரிடப்பட்டுள்ளது. இதன் தயாரிப்பில் ஹீலியம் வாயு பயன்படுத்தப்பட்டுள்ளது. எரிபொருள் பயன்பாடு மற்ற விமானங்களை விட 20 சதவீதம் குறைவு, சுற்றுச்சூழலுக்கு




70 சதவீதத்திற்கும் அதிகமாக உகந்தது.

அடுத்த ஆண்டு தொடக்கத்தில், பிரிட்டன் வானில் இந்த விமானம் பறக்கும் என்றும் அவர் தெரிவித்தார். (3-5)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# இந்திய மாக்கடல் பிராந்தியத்தில் சீனாவின் சவால்களை முறியடிக்குமா இந்தியா?

இந்திய மாக்கடல் பிராந்தியத்தில் சீனாவின் கை ஓங்கினால் அது இந்தியாவின் அதிகார சக்தியாக மிளிரவேண்டும் என்கின்ற இலட்சியத்தை முடிவுக்குக் கொண்டு வருவதையே குறித்து நிற்கும். இதன்பின்னர், இந்தியா இப்பிராந்தியத்தின் அதிகாரத்துவ சக்தியாக விளங்குவது கடினமானதாகும்.

**இவ்வாறு "ஹிந்துஸ்தான் ரைம்ஸ்" நாளிதழில் Brahma Chellaney எழுதியுள்ள ஆய்வில் குறிப்பிட்டுள்ளார்.**

இந்திய மாக்கடல் பிராந்தியத்தைச் சேர்ந்த மூன்று நாடுகளுக்கு பிரதமர் நரேந்திர மோடி பயணிப்பதானது வெளிச் சக்திகள் இப்பிராந்தியத்தில் தலையீடு செய்வதைத் தடுப்பது உட்பட இந்தியாவின் பாதுகாப்பின் முக்கியத்துவத்தை நோக்காகக் கொண்டுள்ளது.

இப்பிராந்தியத்தில் சீனாவின் கை ஓங்கினால் அது இந்தியாவின் அதிகார சக்தியாக மிளிரவேண்டும் என்கின்ற இலட்சியத்தை முடிவுக்குக் கொண்டு வருவதையே குறித்து நிற்கும். இதன்பின்னர், இந்தியா இப்பிராந்தியத்தின் அதிகாரத்துவ சக்தியாக விளங்குவது கடினமானதாகும். பாகிஸ்தானின் மேற்குப்புறமாகவும் சீனாவின் வடக்கு மற்றும் தெற்குப் புறமாகவும் இந்தியா தனது அதிகாரத்தைப் பலப்படுத்த முடியாதிருக்கும்.

இந்தியாவின் தந்திரோபாய மற்றும் மூலோபாய பிரதிகூலங்கள் இந்திய மாக்கடல் பிராந்தியத்தில் இந்தியா கொண்டுள்ள செறிவான பூகோள நலன்கள் மூலம் ஈடுகட்டப்படுகிறது. உலகின் முதன்மையான சக்தி மற்றும் வர்த்தக கடல்வழிகளை உள்ளடக்கியுள்ள இந்திய மாக்கடலில் இந்தியத் தீபகற்பம் கொண்டுள்ள சாதகமான கேந்திர முக்கியத்துவமானது சீனாவின் துரித கரையோரப் பட்டுப் பாதைத் திட்டம் உட்பட முக்கிய கடல் தொடர்பு வழிகளைக் கட்டுப்படுத்துவதற்கான வாய்ப்பை வழங்குகிறது.

இந்தியா சாதகமான கடல்சார் இருப்பைக் கொண்டிருப்பினும், அயல்நாடுகளுடனான எல்லைத் தகராறு இந்தியா கடலை விட நிலத்தில் அதிக கவனத்தைச் செலுத்த வேண்டிய நிலைக்குத் தள்ளப்பட்டது. இவ்வாறான எல்லைத் தகராறில் இந்தியா தனது பலத்தைச்செலவழிப்பதால்தான் ஒரு பெரிய கடற்பலத்தைக் கொண்டுள்ள ஒரு நாடு என்ற உண்மையை விளங்கிக் கொள்ளவில்லை.

இந்தியா கூட்டணிக் கட்சிகளால் 1989 இல் ஆளப்பட்ட காலத்திலிருந்து கடந்த 25 ஆண்டுகளாக இந்திய மாக்கடல் பிராந்தியதில் தனக்கான செல்வாக்கை நிலைநாட்டுவதை இராஜதந்திர ரீதியாக புறக்கணித்து வருகிறது. இந்த நிலை அண்மைக்காலத்தல் மிகவும் மோசமாகியது. 34 ஆண்டுகளின் பின்னர் சீசெல்சுக்கும் 28 ஆண்டுகளுக்குப் பின்னர் இலங்கைக்கும் சுற்றுப்பயணம் செய்யும் இந்தியப் பிரதமராக மோடி விளங்குகிறார்.

இந்தியா நீண்டகாலமாக இந்திய மாக்கடலில் தனது நலன்களைத் தட்டிக்கழித்ததன் காரணமாக சீனா இப்பிராந்தியத்தில் தனது மூலோபாய நலனை அடைவதற்கான முயற்சியை மேற்கொண்டுள்ளது.

பல பில்லியன் டொலர் பெறுமதியில் பல்வேறு திட்டங்களை மேற்கொள்வதன் மூலம் சீனா இந்தியாவின் இயற்கையான பூகோள கேந்திர முக்கியத்துவத்தைக் குறைத்து வருவதுடன், இந்திய மாக்கடல் பிராந்தியத்தில் தனது செல்வாக்கைப் பலப்படுத்துவதுடன், தெற்கு மற்றும் கிழக்கு சீனக கடலிலும் தனது இருப்பைப் பலப்படுத்தி வருகிறது.

இந்திய மாக்கடலானது ஆசியாவிலும் அதற்கப்பாலும் அகன்ற பூகோள அரசியல் மற்றும் வலுச்சமநிலையை வடிவமைப்பேன் என உறுதியளிக்கிறது. எனினும், இந்தியாவானது தனது சொந்த மூலோபாய வளாகத்தில் தனது திறனை வலுப்படுத்த வேண்டும்.

'இந்திய மாக்கடலை எந்தவொரு சக்திகள் கட்டுப்படுத்தினாலும் கூட, இந்தியாவின் கடல் சார் வர்த்தகம் மற்றும் இந்தியாவின் சுதந்திரச் செயற்பாடுகள் போன்றன இம்மாக்கடலில் தனித்துவம் பெற்றுள்ளது என்பதை வரலாறு எடுத்துரைக்கிறது' என ஜவர்ஹலால் நேரு குறிப்பிட்டிருந்தார்.

தனியொரு நாட்டின் பெயரைக் கொண்டுள்ள ஒரேயொரு மாக்கடலாக இந்திய மாக்கடல் விளங்குகிறது என்பது இங்கு முரணாகும்.

இந்திய மாக்கடலில் மூலோபாய நலன்களையும் கடல் சார் இருப்பை அடைவதற்காகவும் 'முத்துமாலை' என்கின்ற மூலோபாயத் திட்டத்தை சீனா விடாமுயற்சியுடன் அமுல்படுத்தி வருகிறது. சீனாவின் முத்துமாலை மூலோபாயத் திட்டமானது '21வது நூற்றாண்டின் கரையோர பட்டுப்பாதைத் திட்டமாக' மீள்பெயரிடப்பட்டுள்ளதன்மூலம் சீனா தனது சொந்த நோக்கங்களை மூடி மறைப்பதற்கான வழியைத் தேடியுள்ளது.

சீனாவின் மீள்பெயரிடல் மூலோபாயத்தை சீன ஜனாதிபதி ஆரம்பித்து வைத்துள்ளார். இதன் தொடர்ச்சியாக 'முத்துமாலை' என்கின்ற பட்டுப்பாதைத் திட்டமானது சீனாவை அதிகார சக்தியாக மாற்றுவதன் மூலம் ஆசியாவின் பூகோள அரசியல் வரைபடத்தை மீளவரைவதற்கேற்ப வடிவமைக்கப்பட்டுள்ளது.

சீனாவின் பட்டுப்பாதைத் திட்டமானது சீனாவின் முதலீடு, உதவி மற்றும் தனது நீள்வட்டப்பாதையில் உள்ள நாடுகளில் துறைமுகங்கள், தொடருந்துப் பாதைகள் மற்றும் நெடுஞ்சாலைகள் போன்றவற்றைக் கட்டுவதன் மூலம் மேலும் பலப்படுத்தப்படுகின்றது. இவ்வாறான கட்டுமாணங்கள் சீனாவின் இராணுவ மேலாதிக்கத்திற்கு வலுச்சேர்ப்பதாக உள்ளது.

சீனாவின் பொருளாதாரம் மற்றும் பாதுகாப்பை வலுப்படுத்துவதற்காக நாடுகளை ஒன்றாக்கி அவர்களின் நலன்களுக்காகவே சீனாவை ஆசியாவின் முக்கிய வலுச் சக்தியாக ஏற்றுக்கொள்ள வேண்டும் என அந்த நாடுகளை நம்பிக்கை கொள்ளச் செயவதற்காகவும் சீனாவால் முன்னெடுக்கப்படும் மென்மையான மற்றும் கடும்போக்கான தந்திரோபாயங்களைச் செயற்படுத்துவதற்கு சீனாவின் பட்டுப்பாதைத் திட்டம் இன்றியமையாததாகும்.

சீனாவின் நிதியுதவியுடன் கொழும்புத் துறைமுகத்தில் கட்டப்பட்டுப் புதிதாகத் திறக்கப்பட்ட முனையத்தில் அண்மையில் 2 சீன நீர்மூழ்கிக்கப்பல்கள் தரித்து நின்றமையானது சீனாவின் பொருளாதார மற்றும இராணுவ நலன்கள் ஒருசேர செல்வாக்குச் செலுத்துவதற்கான எடுத்துக்காட்டாகும்.

இந்திய மாக்கடலில் தனது இராணுவ இருபபிடத்தை நிலையாக்கிக் கொள்வதற்கு சீனா மூன்று தளங்களை விரிவாக்கியதன் மூலம் நிரூபணமாகிறது. ஹோர்மஸ் நீரிணையின் வாயிலில் மூலோபாய இருப்பிடத்தைக் கொண்டுள்ள பாகிஸ்தானின் குவாடர் துறைமுகம் சீனாவின் கட்டுப்பாட்டில் உள்ளது. தனது வர்த்தக செயற்பாடுகளை வலுப்படுத்துவதற்காக அன்றி, தனது கடற்படையின் இருப்பைப் பலப்படுத்துவதற்காக குவாடரில் சீனாவால் கட்டப்பட்ட துறைமுகத்தின் செயற்பாடுகள் அனைத்தையும் சீனா தனது கட்டுப்பாட்டில் கொண்டுள்ளது.

இந்திய மாக்கடலில் இந்தியாவின் கடல் வளாகத்தில் தற்போது அதிகரித்துவரும் சீனாவின் செல்வாக்கு இந்தியாவுக்குச் சவாலாக உள்ளதால், இதனை எதிர்ப்பதற்கான நம்பகமான மூலோபாயத்தை மோடி விரிவாக்கிக் கொள்ள வேண்டும். புதிய பொருளாதார மற்றும் பாதுகாப்பு உறவுகளை மேம்படுத்துவதை நோக்காகக் கொண்ட தனது பிராந்திய அயல்நாடுகளுக்கான மோடியின் பயணமானது இந்திய மாக்கடலில் தனக்கெதிரான சவாலை எதிர்கொள்வதற்கான இந்தியாவின் ஆரம்பமாக உள்ளது.

மாலைதீவுக்கான தனது பயணத்தின் மூலம் மோடி வெற்றிகரமாக மாலைதீவில் தனது உறவை விரிவாக்கியுள்ளார்.

புதிய ஜனாதிபதியாக மைத்திரிபால சிறிசேன பதவியேற்று ஒரு மாதத்தின் பின்னர் இந்தியாவுக்குப் பயணம் செய்ததன் பின்னர் மோடி சிறிலங்காவுக்கான தனது பயணத்தை மேற்கொண்டிருக்கிறார்.

இரு தரப்புகளுக்கும் இடையிலான ஒத்துழைப்பு மற்றும் கூட்டுறவு தொடர்பில் மேற்கொள்ளப்பட்ட புதிய பேச்சுக்களில் மோடி நம்பிக்கை கொண்டுள்ளார். மோடியின் இராஜதந்திர நகர்வுகள் மட்டும் போதுமனதல்ல.

இந்திய மாக்கடல் பிராந்தியத்தில் சீனாவின் இராணுவ முற்றுகையைத் தடுப்பதற்கு இந்தியா தனது கடற்பலத்தை நவீனமயப்படுத்தி மேலும் விரிவுபடுத்த வேண்டிய தேவையுள்ளது. இப்பிராந்தியத்தில் சீனாவின் தலையீட்டைத் தடுப்பதற்காக இந்தியா போதியளவில் தனது கடற்படையைத் தயார்ப்படுத்தவேண்டும். இமயமலை யுத்தம் ஒன்று மீண்டும் ஏற்படாது தடுப்பதற்கு சீனாவின் பொருளாதார முற்றுகையைத் தடுக்கவேண்டும்.

சீன இராணுவத்தினர் சமாதான காலத்தில் இமயமலை எல்லையில் இந்திய இராணுவத்தினர் மும்முரமாகப் பாதுகாப்புக் கடமையில் ஈடுபடுவதற்கான வழியை ஏற்படுத்தியிருந்தாலும் கூட, வளைகுடா மற்றும் ஆபிரிக்காவிலிருந்து சீனாவால் பெறப்படும் எரிபொருள் மற்றும் எரிவாயு போன்றன இந்திய மாக்கடலின் ஊடாக எவ்வித தங்குதடையின்றி கொண்டு செல்லப்படுகின்றது. இதற்கு இந்தியா எவ்வித தடைகளையும் இடவில்லை.

சீனாவால் இறக்குமதி செய்யப்படும் எண்பது சதவீத பெற்றோலியம் மலாக்கா நீரிணையின் முக்கிய புள்ளியின் ஊடாகவே கொண்டு செல்லப்படுகிறது.

இந்திய மாக்கடலில் இந்தியக் கடற்படையினர் முக்கிய கடல்வழித் தொடர்புகளை ஆள்வதற்கான திறனை வளர்த்து அதன்மூலம் முக்கிய கடல்வழிகளை இந்தியக் கடற்படை தனது கட்டுப்பாட்டில் கொண்டு வருவதற்கான உந்துதலை வழங்குவதற்கும் இமயமலை எல்லையில் சீன இரா்ணுவச் செயற்பாட்டைக் கட்டுப்பாட்டில் கொண்டு வருவதற்கும் உதவும்.

சீனா இந்திய மாக்கடலில் தனது செல்வாக்கை விரிவுபடுத்துவதற்கான சவாலானது சீனாவை மையப்படுத்திய ஆசியாவைக் கட்டியெழுப்புவதற்கான சீன மூலோபாயத்தின் வெற்றிக்கு மிகவும் இன்றியமையாததாகும்.

-நித்தியபாரதி-

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# நாடாளுமன்ற உறுப்புரிமையை 250 ஆக அதிகரிக்க நேரிடும்



## தேர்தல்கள் ஆணையாளர் வலியுறுத்து

(கொழும்பு)

**சிறுபான்மை கட்சிகளுக்கு பாதிப்பு ஏற்படாத வகையில், தேர்தல் முறைமை சீர்திருத்தப்பட வேண்டுமானால் நாடாளுமன்ற உறுப்பினரின் எண்ணிக்கை 250 இற்கு மேலாக அதிகரிக்கப்பட வேண்டும் என தேர்தல்கள் ஆணையாளர் மஹிந்த தேசப்பிரிய தெரிவித்துள்ளார்.**

தேர்தல் முறைன்மை மாற்றம் தொடர்பில் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன, பிரதமர் ரணில் விக்கிரமசிங்க மற்றும் அரசியல் கட்சிகளின் பிரதிநிதிகளுக்கு இடையே நேற்று இடம்பெற்ற கலந்துரையாடலின் போது, தேர்தல்கள் ஆணையாளர் இந்த யோசனையை முன்வைத்துள்ளார்.

ஜனாதிபதி செயலகத்தில் இடம்பெற்ற இந்த கலந்துரையாடலில் எதிர்க்கட்சித் தலைவர் நிமால் சிறிபால டீ சில்வா, தமிழ்த் தேசிய கூட்டமைப்பு, ஜே.வி.பி. ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ், ஜாதிக ஹெல உறுமய, மக்கள் ஐக்கிய முன்னணி உள்ளிட்ட பல கட்சிகளின் பிரதிநிதிகள் கலந்து கொண்டதாக ஜனநாயக மக்கள் முன்னணியின் தலைவர் மனோ கணேசன் தெரிவித்துள்ளார்.இதன்போது, தேர்தல் முறைமை சர்திருத்தப்பட வேண்டிய விதம் தொடர்பான யோசனைகளை எதிர்வரும 10 நாட்களுக்குள் தமக்கு வழங்குமாறு, ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன, தேர்தல்கள் ஆணையாளரை பணித்துள்ளார். (3-5)

# தேர்தல் முறைமை மாற்றத்திற்கு மு.காங்கிரஸ் இணங்கவில்லை

## அமைச்சர் ரவூப் ஹக்கீம் தெரிவிப்பு

(கொழும்பு)

தேர்தல் முறைமை மாற்றத்திற்கு எவ்வித இணக்கப்பாட்டையும் வெளியிடவில்லை என ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் அறிவித்துள்ளது.

தேர்தல் முறைமையில் மாற்றம் செய்யப்பட உள்ள போதிலும் அது தொடர்பில் தமது கட்சிக்கு எவ்வித உடன்பாடும் கிடையாது என ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸின் தலைவரும் அமைச்சருமான ரவூப் ஹக்கீம் தெரிவித்துள்ளார்.

கொழும்பில் நேற்று முன்தினம் நடைபெற்ற செய்தியாளர் சந்திப்பில் அவர் இதனைத் தெரிவித்துள்ளார்.

தேர்தல் முறைமை மாற்றம் தொடர்பில் மாற்று யோசனைகளை முன்வைக்கத் திட்டமிடப்பட்டுள்ளது.

இதற்காக ஏனைய சிறுபான்மை மற்றும் சிறு கட்சிகளுடன் பேச்சுவார்த்தை நடத்தப்படும்.

இந்த பேச்சுவார்த்தைகளுக்காக ஜே.வி.பியும் இணைந்து



கொள்ளும் என ரவூப் ஹக்கீம் தெரிவித்துள்ளார். (3-5)

# நிறைவேற்று ஜனாதிபதிமுறை முற்றாக நீக்கப்பட வேண்டும்

## ஜே.வி.பி. செயற்குழு கூட்டத்தில் தீர்மானம்


(கொழும்பு)

நிறைவேற்று அதிகாரம் கொண்ட ஜனாதிபதி முறைமையை முற்றாக நீக்க வேண்டும் என ஜே.வி.பி தெரிவித்துள்ளது.

நேற்று கூடிய ஜே.வி.பியின் மத்திய செயற்குழு கூட்டத்தின் போது, இது தொடர்பில் கலந்துரையாடப்பட்டதாக அந்தக் கட்சி வெளியிட்டுள்ள அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளது.

இதனிடையே, உத்தேச யாப்பு சீர்த்திருத்தம் மற்றும் தேர்தல் முறைமை மாற்றல் குறித்தும் கலந்துரையாடப்பட்டுள்ளது.

தேர்தல் முறை தயாரிப்பின் போது, தற்போதைய தேர்தல் முறைமையை விட சாதாரண, நேர்த்தியான மற்றும் ஜனநாயக ரீதியாக



தயாரிக்கப்பட வேண்டும் என்பதில் அவதானம் செலுத்தப்பட்டுள்ளது.

அதேபோன்று அடுத்த மாதம் 23 ஆம் திகதியின் பின்னர் நாடாளுமன்றம் கலைக்கப்பட வேண்டும் என நேற்றுக் கூடிய மத்திய செயற்குழு கூட்டத்தில் தீர்மானிக்கப்பட்டதாக ஜே.வி.பியின் பொதுச் செயலாளர் ரில்வின் சில்வா தெரிவித்துள்ளார். (3-5)

# மரண தண்டனை

இருவரை கொலை செய்த குற்றச்சாட்டுகளில் குற்றவாளியாக இனங்காணப்பட்ட சிவில் பாதுகாப்பு படையின் முன்னாள் வீரருக்கு அம்பாறை மேல் நீதிமன்றம் மரண தண்டனை விதித்து தீர்ப்பளித்துள்ளது.

மஹாஓய பொலிஸ் பிரிவில் சிவில் பாதுகாப்பு படைவீரராக கடமையாற்றும் போது கடமைகளுக்காக வழங்கப்பட்ட ரி-56 துப்பாக்கியை பயன்படுத்தி, 2008 ஆம் ஆண்டு செப்டெம்பர் மாதம் 25 ஆம் திகதியன்று விமான மற்றும் இராணுவ வீரர்கள் இருவரை கொலை செய்தமை மற்றும் மற்றொருவரை கடும் காயத்துக்கு உள்ளாக்கியமை ஆகிய குற்றச்சாட்டுகளே இவர் மீது சுமத்தப்பட்டிருந்தன.

அக்குற்றச்சாட்டுகளில் குற்றவாளியாக இனங்காணப்பட்ட சிவில் பாதுகாப்பு வீரருக்கு அம்பாறை மேல் நீதிமன்றம் மரண தண்டனை விதித்து தீர்ப்பளித்தது. (3-5)

# இன்று ஒரு தகவல்

## அறிஞர் அண்ணா

அறிஞர் அண்ணா அடுக்கு மொழிக்குச் சொந்தக்காரர். அடுக்கு மொழியென்றால் வெறும் அலங்காரம் மட்டும் அதில் இருக்காது. அதோடு ஆழமான கருத்துக்களும் இருக்கும். அது தான் அவருடைய அடுக்கு மொழியினுடைய சிறப்பு. அதில் ஒன்றிரண்டாவது நமக்கெல்லாம் அதிகமாகத் தெரிந்ததாக இருக்கும். அதை மீண்டும் நினைவுபடுத்திக்கொள்ளலாம். அடுக்குமொழி எப்படிச் சரளமாக அவருக்கு வருகிறது பாருங்கள். அதுவும் அர்த்தத்தோடு வருகின்றது. மாற்றான் தோட்டத்துத்து மல்லிகைக்கும் மணமுண்டு. இது ஓர் ஆழமான கருத்து. ஆகையால் அழகான அடுக்கு மொழியும் இதில் வந்திருக்கிறது. ஆக மொழியின் வளம், கருத்தின் வளம் இரண்டுமே இணையும்போது எங்களுடைய இதயத்தை அது தொடுகிறதல்லவா? அதேபோல மனித வாழ்க்கையை அவர் வரையறுப்பார்.

கடமை, கண்ணியம், கட்டுப்பாடு மூன்றுமே முக்கியமானது. அதே நேரத்தில் அந்த அடுக்கு மொழியோடு அது வரும்போது ஓர் அழகோடு வரும். ஆங்கிலத்திலும் தமிழிலும் அவ்வளவு சரளமாகப் பேசக்கூடிய ஆற்றல் பெற்றவர் அண்ணா என்பது உலகமறிந்த விடயம்.

அதேநேரத்தில் கல்லூரிகளிலும் பல்கலைக்கழகங்களிலும் இலக்கிய மேடைகளிலும் அவர் பேசும்போது முன்கூட்டியே தலைப்புக்களைக் கொடுக்காமல் திடீரென்று தலைப்பைக் கொடுத்துப் பேசச் சொல்லுவார்கள். அப்படிப் பேசினால்கூட அண்ணாவுடைய உரை முழுமையானதாக இருக்கும், ஆழமானதாக, அழகாக இருக்கும். அப்படியென்றால் அது எந்த அளவுக்கு உச்சக்கட்டத்திற்குப் போய்விட்டுதென்றால் 1963 ஆம் ஆண்டு சென்னை மாநிலக் கல்லூரியில் ஒரு நிகழ்ச்சியில் பேசுகின்றார் அறிஞர் அண்ணா. அப்போது தலைப்பு முன்னரே அவருக்குக் கொடுக்கப்படவில்லை. பேசும்போது பேச எனக்குத் தலைப்பு ஏதாவது உண்டா என்று அங்கிருந்தவர்களைக் கேட்டாராம். அப்போது தலைப்பு இல்லையென்று அங்கிருந்த ஒரு பேராசிரியர் சொன்னாராம். அண்ணா அதை அப்படியேவிடவில்லை. அந்தத் தலைப்பு இல்லை என்ற தலைப்பிலே இரண்ட மணி நேரம் பேசினதாக வரலாறு உண்டு.

அது மாதிரி இன்னொரு கல்லூரியில் பேசும்போது நாங்கள் கரும்பலகையில் தலைப்பை எழுதியிருப்போம். அதை திரையால் மூடியிருப்போம். நீங்கள் பேசுவதற்கு எழுந்திருக்கும்போது அந்தத் திரையை விலக்குவோம். அதிலேயிருக்கின்ற தலைப்பை வைத்து நீங்கள் பேசவேண்டும் என்று சொன்னாராம். அண்ணாவும் தயார் என்று சொல்லிவிட்டார். அதைப்போல அவர் பேச எழுந்திருக்கும் போது அந்தக் கரும்பலகையில் இருக்கின்ற திரையை விலக்கியிருக்கிறார்கள். விலக்கினால் அங்கே தலைப்பே இல்லையாம். வெறும் கரும்பலகை மட்டும்தான் இருந்ததாம். அதனால் அண்ணா அதிர்ச்சியடையவில்லை, ஆச்சரியப்படவில்லை. கரும்பலகை என்ற தலைப்பிலே அழகாக பேசினாராம். கரும்பலகைகள் எப்படி சமுதாயப் புரட்சியை ஏற்படுத்தும் என்பதை அற்புதமான உரையாக அது அமைந்தது என்று சொல்கிறார்கள்.

சென்னையில் ஒரு கூட்டத்தில் அண்ணா பேசும் போது, தமிழ்த் தென்றல் வி.க. அதைக் கேட்டுக்கொண்டு இருந்தார். கேட்டு விட்டு அப்போது அவர் ஒரு கருத்தை சொன்னாராம். "இதுவரை தமிழ் நாட்டில் என் எழுத்து நடையைப் பற்றி பெருமையாக பேசிக்கொள்கிறார்கள்" என்று நான் கேள்விப்பட்டிருக்கிறேன். இதில் வருங்காலத்தில் அண்ணாதுரையின்நடை, அண்ணாதுரையின் தமிழ் என்று வரப் போகின்றது. எதிர்காலத்தில் தமிழ்மொழி என்னவாகுமோ என்று சஞ்சலம் அடைந்து வந்தேன். அதைக் காப்பாற்ற இதோ என் அண்ணாதுரை வந்துவிட்டார். இனி என்வாழ்க்கை நிம்மதியாக, அமைதியாக அமையும் என்று சொன்னாராம். அந்த அளவுக்கு அறிஞராக இருந்த வி.க.வின் பாராட்டையும் பெற்றவர் அறிஞர் அண்ணா.

அவருடைய பேச்சிலே எளிமை இருக்கும், நகைச்சுவை இருக்கும், இலக்கிய ஆழம் இருக்கும், அரசியல் சாதுரியம் இருக்கும். அதெல்லாம் அப்பப்போ பேச்சின் நடுநடுவே அழகாக வெளிப்படும். இப்போது ஒரு சம்பவத்தைப் பாருங்கள்.

எதையும் நகைச்சுவையாக , அதே நேரத்தில் ஆழமாக சொல்லக் கூடிய ஆற்றல் அவருக்கு உண்டு. அவர் முதலமைச்சராக இருக்கிறார். சட்ட மன்றத்தில் விலைவாசியை பற்றிய ஒரு பிரச்சினை வருகிறது. அப்போது ஆளும் சட்சியை சேர்ந்த நிதியமைச்சர் சொல்கிறார். இந்த வருடம் விலைவாசி எல்லாம் குறைந்திருக்கிறது. அதுவும் புளியினுடைய விலை ரொம்பவே குறைந்திருக்கின்றது.

அதற்காக நாங்கள் பெருமையடைகிறோம். எதிர்க்கட்சித் தலைவர் சொல்லியிருக்கிறார். இல்லவேயில்லை எங்களுடைய காலத்தில் போட்ட திட்டம் தான் இதற்குக் காரணம் என்று. அப்போது முதலமைச்சராக இருந்த அறிஞர் அண்ணா எழுந்து சொல்கிறார். இந்தப் புளியின் விலை குறைவதற்கு நாங்களும் காரணம் இல்லை. நீங்களும் காரணம் இல்லை. புளியமரம் தான் காரணம். அதிகமாக அது காய்த்ததனால் தான் விலைவாசி குறைந்திருக்கின்றது. உடனே சபையில் ஒரே கலகலப்பு.

*கலைமாமணி முனைவர் இளசை சுந்தரம்*

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# செட்டிகுளம் கோட்ட பாடசாலைகளுக்கு 39 ஆசிரியர்கள் நியமிக்கப்படவேண்டும்

## கோட்டக்கல்வி பணிப்பாளர் சுட்டிக்காட்டு

(குருமன்காடு)

**செட்டிகுளம் கோட்டப் பாடசாலைகளில் 39 ஆசிரியர்களுக்கு வெற்றிடங்கள் நிரப்பப்படாமல் உள்ளமையால் இவற்றை நிவர்த்தி செய்து தருமாறு கோட்டக் கல்விப்பணிப்பாளர் யேசுதாசன் கோரிக்கை விடுத்துள்ளார்.**



வவுனியா செட்டிகுளம் கோட்டத்திற்குட்பட்ட 35 பாடசாலைகளுக்கிடையிலான மெய்வல்லுநர் திறனாய்வுப் போட்டி செட்டிகுளம் மகாவித்தியாலய மைதானத்தில் நடைபெற்றது.

இந்நிகழ்விற்கு தலைமைதாங்கி உரையாற்றும் போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அங்கு அவர் மேலும் தெரிவிக்கையில்,

செட்டிகுளம் கோட்டத்தில் இயங்கி வந்த 43 பாடசாலைகளில் கடந்த கால போர்ச் சூழல் காரணமாக 8 பாடசாலைகள் மூடப்பட்டன.

தற்போது 35 பாடசாலைகள் மட்டுமே மாணவர் களுக்கு கல்வி போதிக்கின்றன.

இப்பாடசாலைகளில் 5 ஆயிரத்து 290 மாணவர்களும் 360 ஆசிரியர்களும் கற்றல் மற்றும் கற்பித்தல் நடவடிக்கைகளில் ஈடுபடுகின்றனர்.

அத்துடன் செட்டிகுளம் கோட்ட அலுவலகம் மின்சாரம், குடிநீர், மலசலகூடம், தளபாடம் போன்ற அடிப்படை வசதிகள் இன்றி இயங்குகின்றது.

துட்டுவாகையில் ஆரம்ப பாடசாலை ஒன்று மாணவர்களின் கல்வி நடவடிக்கைக்காக அமைக்கப்பட வேண்டிய தேவையுள்ளது.

செட்டிகுளம் கோட்ட பாடசாலைகளில் 39 ஆசிரியர்களுக் கான வெற்றிடங்கள் உள்ளன.

இதில் ஆரம்பப்பிரிவிற்கு 10 ஆசிரியர்களும் விஞ்ஞான பாடத்திற்கு 12 ஆசிரியர்களும் கணித பாடத்திற்கு 7 ஆசிரியர்களும் உடற்கல்வி பாடத்திற்கு 6 ஆசிரியர்களும் மனையியல் பாடத்திற்கு 2 ஆசிரியர்களும் சித்திரப் பாடத்திற்கு 2 ஆசிரியர்களுமாக மொத்தம் 39 ஆசிரியர்கள் நியமிக்கப்பட வேண்டிய தேவையுள்ளதாக அவர் சுட்டிக் காட்டினார். (அ-2-250)

## ஒலுமடு கிராமத்திற்கு மின்சாரம் வழங்கப்பட்டது

வவுனியா வடக்கு பிரதேச செயலகப்பிரிவிலுள்ள ஒலுமடு கிராமத்திற்கு மின்சாரம் வழங்கப்பட்டுள்ளது.

இக்கிராமத்திற்கு 36 மில்லியன் ரூபா நிதியொதுக்கீட்டின் மூலம் மின்சார இணைப்பு அண்மையில் வழங்கப்பட்டுள்ளது. மின்னிணைப்பு மற்றும் மின்வலு இராஜாங்க அமைச்சர் பாலித ரங்கே பண்டாரவினால் அண்மையில் ஆரம்பித்து வைக்கப்பட்டுள்ளது. இதன்மூலம் 300 இற்கும் மேற்பட்ட குடும்பங்கள் பயனடைந்துள்ளன. இதேவேளை நெடுங்கேணி பெரியமடு கிராமத்திற்கு சுமார் 26 மில்லியன் செலவில் மின்னிணைப்பு வேலைகள் பூர்த்தி செய்யப்பட்டு, மக்களுக்கு மின்சார விநியோகம் வழங்கி வைக்கப்பட்டமை இங்கு குறிப்பிடத்தக்கது. (அ-2-272)

# மல்லிகைத்தீவு கிராமசேவகர் பிரிவில் சேவாலங்காவின் செயற்றிட்டங்கள்

(மல்லாவி)

ஜப்பான் அரசின் ஒரு கோடியே 40 இலட்சம் ரூபா நிதியுதவியுடன் முல்லைத்தீவு மாவட்டத்தில் உள்ள புதுக்குடியிருப்பு பிரதேச செயலக பிரிவில் மல்லிகைதீவு கிராம சேவையாளர் பிரிவில் மீள்குடியேற்றம் செய்யப்பட்ட ஆயிரத்து 4 குடும்பங்களைச் சேர்ந்த 3 ஆயிரத்து 125 அங்கத்தவர்களின் வாழ்வாதார உதவிகள் உட்பட பல்வேறு சமூகநலத்திட்டங்களை முன்னெடுக்கவுள்ளதாக சேவா லங்கா மன்றத் தலைவர் கலாநிதி ஹர்சகுமார நவரத்ன தெரிவித்துள்ளார். இது தொடர்பில் தெரியவருவதாவது,

முல்லைத்தீவு மாவட்டத்தில் இடம் பெயர்வின் பின்னர் மீள்குடியேறியுள்ள மக்களின் வாழ்வாதாரத்தை மேம்படுத்தும் நோக்கில், ஜப்பானிய அரசு சேவாலங்கா நிறுவனத்தின் ஊடாக ஒரு கோடியே 40இலட்சம் ரூபா நிதியுதவியுடன் பல்வேறு வேலைத்திட்டங்களை முன்னெடுக்கவுள்ளது.

இதில் நெற்களஞ்சியசாலைகள் அமைத்தல், நவீன உபகரணங்களைப் பொருத்தி அரைக்கும் ஆலை அமைத்தல், அதனூடாக உற்பத்தி செய்யப்படும் பொருட்களை பொதி செய்து விற்பனை நிலையம் ஒன்றை அமைத்தல் அத்தோடு இத்திட்டத்தின் ஊடாக பெண்கள் மற்றும் விசேட தேவையுடையோர் உட்பட பிரதேசத்தில் உள்ள பொருளாதாரத்தில் பின் தங்கியோரின் அத்தியாவசியத் திறன்களை வளர்க்கும் நோக்கில் தலைமைத்துவம், கணக்குப் பதிவேடுகளைப் பேணுதல் மற்றும் சந்தைப்படுத்தல் ஆகிய பயிற்சிகளும் வழங்கப்படவுள்ளன.

மேலும் இவ்வுதவித் திட்டத்தின் ஊடாக 176 பெண் தலைமைத்துவ குடும்பங்களும் 47 விசேட தேவைக்குட்பட்டவர்களும் நன்மை அடையவுள்ளனர். இத்திட்டத்திற் கான ஒப்பந்தமானது கடந்த 11 ஆம் திகதி ஜப்பானிய உயர்ஸ்தானிக தூதுவருக்கும் மற்றும் சேவாலங்கா மன்றத்தின் தலைவர் கலாநிதி ஹர்சகுமார நவரத்னவிற்கும் இடையில் கைச்சாத்திடப்பட்டுள்ளது. (அ-2-15)

வன்னி வலம்







கிளிநொச்சி பூநகரி கிராஞ்சி அ.த.க.பாடசாலையின் இல்ல மெய்வல்லுநர் திறனாய்வு கடந்த 11ஆம் திகதி பாடசாலையின் முதல்வர் ஐ.கேசவன் தலைமையில் நடைபெற்ற போது...

## இ.போ.சவில் மாறுபட்ட கட்டணங்கள் அறவீடு; பாதிக்கப்பட்டோர் முறைப்பாடு

கிளிநொச்சி ஊடாக வவுனியாவிற்கு சேவையில் ஈடுபடும் இ.போ.சபைக்குச் சொந்தமான பேருந்துகளில் மாறுபட்ட கட்டணங்கள் அறவிடப்படுவதாக பயணிகள் விசனம் தெரிவிக்கின்றனர்.

கிளிநொச்சியிலிருந்து வவுனியாவிற்கான ஒரு வழிக்கட்டணமாக 99ரூபா பயணிகளிடமிருந்து அறவிடப்படும் கட்டணமாகும். இருப்பினும் யாழ்ப்பாணத்தில் இருந்து சேவையில் ஈடுபடும் காரைநகர் டிப்போவிற்கு சொந்தமான இ.போ.ச பேருந்துகளில் ஒருவழிக்கட்டணமாக 107 ரூபா அறவிடப்படுவதாக பயணிகளால் சுட்டிக் காடப்படுகின்றது. இது தொடர்பில் கிளிநொச்சி டிப்போவில் பாதிக்கப்பட்ட பயணிகள் சென்றுமுறையிட்ட போது, அவர்களின் முறைப்பாட்டை அதிகாரிகள் பதிவு செய்ததோடு, இது குறித்து தாம் சம்பந்தப்பட்டவர்களின் கவனத்திற்கு கொண்டு செல்வதாக உறுதியளித்தனர். (அ-2-272)

# கசிப்பு வைத்திருந்தோர் செலுத்தினர் அபராதம்

கிளிநொச்சி ஊரியான் மற்றும் கல்லாறு ஆகிய பகுதிகளில் கசிப்புடன் கைது செய்யப்பட்ட பெண் உட்பட இருவருக்கு சுமார் எண்பதாயிரம் ரூபாய் தண்டப்பணம் விதிக்கப்பட்டுள்ளது.

மதுவரி திணைக்கள அதிகாரிகள் கடந்த ஞாயிற்றுக்கிழமை கிளிநொச்சி ஊரியான் 2 ஆம் யுனிட் பகுதியில் மேற்கொண்ட சோதனை நடவடிக்கையின்போது கசிப்பு விற்பனையில் ஈடுபட்டுக்கொண்டிருந்த நபரை ஒரு போத்தல் கசிப்புடன் கைதுசெய்தனர்.

மேற்படி நபரை கிளிநொச்சி மாவட்ட நீதிமன்றில் நீதவான் எம்.ஐ.வகாப்தீன் முன்னிலையில் ஆஜர்படுத்திய போது குற்றவாளிக்கு நாற்பதாயிரம் ரூபாய் தண்டப் பணம் விதித்து நீதவான் தீர்ப்பளித்தார்.

அதேபோன்று, நேற்றுமுன்தினம் கல்லாறுப்பகுதியில் பெண்ணொருவரை 375 மில்லி லீற்றர் கசிப்புடன் கைதுசெய்த மதுவரித்திணைக்கள அதிகாரிகள், குறித்த பெண்ணை கிளிநொச்சி மாவட்ட நீதவான் நீதிமன்றில் ஆஜர்படுத்தினர். இப்பெண்ணுக்கு நாற்பதாயிரம் ரூபாய் தண்டப்பணம் விதித்து நீதவான் தீர்ப்பளித்தார்.

இதேவேளை, 375 மில்லிலீற்றர் கசிப்பை உடமையில் வைத்திருந்த ஒருவரை கைதுசெய்த கிளிநொச்சிப் பொலிஸார், மேற்படி நபரை நேற்று முன்தினம் நீதிமன்றில் ஆஜர்படுத்தியபோது குறித்த நபரை நாற்பதாயிரம் ரூபாய் காசுப்பிணையிலும் ஒரு இலட்சம் ரூபாய் சரீர பிணையிலும் செல்லுமாறு நீதவான் உத்தரவிட்டார். (அ-2)

## வீதி ஒழுங்குகளை மீறிய 3பேருக்கு தண்டம் விதிப்பு

கிளிநொச்சி நகரில் வீதி ஒழுங்குகளை மீறி வாகனம் செலுத்திய மூவருக்கு 8 ஆயிரம் ரூபாய் தண்டப்பணம் விதிக்கப்பட்டுள்ளது.

கிளிநொச்சிப் பகுதியில் காப்புறுதிப் பத்திர மின்றி மோட்டார் சைக்கிள் செலுத்திச் சென்ற ஒருவரை கைதுசெய்து அவருக்கு எதிராக வழக்குப்பதிவு செய்த கிளிநொச்சி பொலிஸார், அவரை நேற்று முன்தினம் கிளிநொச்சி மாவட்ட நீதிவான் நீதிமன்றில் ஆஜர்படுத்தினர். இதன்போது மேற்படி நபருக்கு 5ஆயிரம் ரூபாய் தண்டப்பணம் விதிக்கப்பட்டுள்ளது.

இதேபோன்று கவனயீனமான முறையில் வாகனம் செலுத்திய இருவருக்கு தலா ஆயிரத்து 500 ரூபாய் தண்டப் பணம் விதிக்கப்பட்டுள்ளது. (அ-2)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

யானையைக் கொன்று கைச்சுளகால் மூடினாளாம். - தமிழ்ப் பழமொழி

வலம்புரி
T.P : 021 567 1530
website : www.valampurii.lk

## கொன்றது குற்றமில்லை விசாரணைதான் அபகீர்த்தியா?

போர்க்குற்றம் தொடர்பில் சர்வதேச விசாரணை இடம்பெறுமாக இருந்தால் அது இலங்கைக்கு அபகீர்த்தியை ஏற்படுத்தும் என முன்னாள் ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்க கூறியுள்ளார். இலங்கையில் வாழும் எவரும் வெளிநாட்டு விசாரணையை விரும்பவில்லை என்று அவர் கூறியிருப்பது இங்கு நோக்குதற்குரியது.

முன்னாள் ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்க மேற்போந்த கருத்தைக் கூறியதன் மூலம் தமிழர்கள் அழிக்கப்படலாம்; ஆனால் அது பற்றி எவரும் எதுவும் கேட்க முடியாது என்ற போக்கை கொண்டுள்ளார் என்பது தெளிவாகின்றது.

1995 ஆம் ஆண்டு யாழ்ப்பாணத்தில் இடம்பெற்ற யுத்தம், அதனால் ஏற்பட்ட பாரிய இடப்பெயர்வு என்பவற்றின் பின்னர் 1996 ஆம் ஆண்டு ஏப்ரல் மாதம் யாழ்ப்பாணத்தில் பொது மக்கள் மீளக்குடியமர்ந்த போது, இளைஞர்கள் பலர் காணாமல்போன சம்பவங்கள் நடந்தன.

செம்மணி, உரும்பிராய் ஆகிய இடங்களில் இளம் பெண் பிள்ளைகள் கொலை செய்யப்பட்ட கொடூரம் உலகம் முழுவதையும் நடுங்க வைத்தது. இக்கொடூரச் செயல் சந்திரிகா குமாரதுங்க ஜனாதிபதியாக இருந்தபோது நடந்தவை. இதற்குப் பின்னர் மகிந்தவின் ஆட்சியில் வன்னிப் பெருநிலப்பரப்பில் நடத்தப்பட்ட பெரும்போரில் அப்பாவித் தமிழ் மக்கள் கொல்லப்பட்ட மிலேச்சத்தனமும் வடபுலத்தில் நடந்த இனந்தெரியாத படுகொலைகள், கடத்தல்கள், காணாமல் போதல்கள் என்ற ஈனச் செயல்களும் இந்த மண்ணில் நடந்த நிட்டூரம்.

பௌத்த சிங்களவர்களுக்கே இந்த நாடு சொந்தம் என்ற வெறித்தனத்தில் தமிழினத்தை அழித்தொழிக்கும் சங்காரத்தைச் செய்தபோது; இது இலங்கைக்கு அபகீர்த்தி என்று உணராத சந்திரிகா அம்மையார், வெளிநாட்டு விசாரணை நடந்தால் அது இலங்கைக்கு அபகீர்த்தி என்று சொல்வதன் பொருள்தான் என்ன?

இலங்கை மண்ணில் தமிழர்கள் எப்படியும் அழிக்கப்படலாம்; கொல்லப்படலாம் ஆனால் சர்வதேச விசாரணை என்பது நடக்கக் கூடாது. அவ்வாறு நடந்தால் அது இலங்கைக்கு அபகீர்த்தி என்று சொல்லும் சந்திரிகாவின் மேற்போந்த கருத்து மைத்திரி அரசு சர்வதேச விசாரணைக்கு அனுமதி வழங்கக் கூடாது என்பதாக அமைகிறது.

அவ்வாறு சர்வதேச விசாரணை நடந்தால், மைத்திரியின் ஆட்சியில் இலங்கைக்கு அபகீர்த்தி ஏற்பட்டு விடும் என்ற பொருள்பட சந்திரிகா எச்சரிக்கை செய்கிறார்.

வெளிநாட்டு விசாரணை இடம்பெற்றால் அது இலங்கைக்கு அபகீர்த்தியை ஏற்படுத்தும் என்று சந்திரிகா கூறுவது எங்ஙனம் பொருந்தும்? என்று நோக்கும் போது, போர்க்குற்றம் தொடர்பில் சர்வதேச விசாரணை நடந்தால்; அப்பாவித் தமிழ் மக்கள் கொல்லப்பட்டமை நிரூபணமாகும். கூடவே குழந்தைகள், முதியவர்கள், பெண்கள் என்ற வேறுபாடின்றி இன அழிப்பு நடந்துள்ளது. இன அழிப்பை படைத்தரப்பு ஊடாக இலங்கை ஆட்சியாளர்கள் அரங்கேற்றியுள்ளனர் என்ற உண்மை வெளிப்படும். இது நாட்டுக்கு அபகீர்த்தி தானே!

ஆகவே, வெளிநாட்டு விசாரணையைத் தடுத்து உள்நாட்டு விசாரணை என்ற பேரில்; இன அழிப்பு– தமிழ் மக்களின் உயிர் பறிப்பு என அனைத்தையும் குழி தோண்டிப் புதைத்து விட்டு, விடுதலைப் புலிகள் மட்டுமே போரில் கொல்லப்பட்டனர் என்று கதையை முடிக்கவேண்டும் என்பது சந்திரிகாவின் நோக்கம் என்பது வெளிப்படையாகியுள்ளது.

என்ன செய்வது? ஆட்சிப் பீடத்தில்; அதிகாரத்தில் இடம்கிடைத்துவிட்டால் போதும். தமிழரை தாரை வார்ப்பது என்று சிங்களப் பேரினவாதம் முடிவு எடுத்து விடும் என்பதற்கு முன்னாள் ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்கவும் நல்ல சாட்சியம்.

## நுண்கலை மாணவர்கள் வகுப்பு புறக்கணிப்பு

(யாழ்ப்பாணம்)

யாழ். பல்கலைக்கழக இராமநாதன் நுண்கலைப் பீடத்தின் சித்திரமும் வடிவமைத்தலும் கற்கை மாணவர்கள், தாம் எதிர்கொள்ளும் பிரச்சினைகளைத் தீர்க்கக்கோரி நேற்று செவ்வாய்க்கிழமையும் வகுப்பு புறக்கணிப்பில் ஈடுபட்டனர்.

கடந்த காலத்தில் தமக்கான பரீட்சைகள் சீராக நடைபெறவில்லையெனவும் ஏனைய பீடங்களுக்கு பரீட்சைகள் முடிவுற்றுள்ள போதிலும் நுண்கலைப் பீடத்தின் சித்திரமும் வடிவமைப்பும் கற்கைக்கான பரீட்சைகள் நடத்தப்படவில்லை என்றும் தெரிவித்து மூன்று அம்சக் கோரிக்கைகளை முன்வைத்து மாணவர்கள் வகுப்பு புறக்கணிப்பில் நேற்று முன்தினம் திங்கட்கிழமை ஈடுபட் டனர்.

இந்தநிலையில் எந்த தீர்வும் கிடைக்காததால், நேற்றைய தினமும் மாணவர்கள் வகுப்பு புறக்கணிப்பில் ஈடுபட்டனர். இந்த வகுப்பு புறக்கணிப்பு இன்றும் தொடரும் எனவும் நாளை (இன்று) பதில் எதுவும் தராத பட்சத்தில் யாழ்.பல் கலைக்கழக பிரதான வளாகத்தில் மாபெரும் போராட்டத்தில்ஈடுபடுவோம்என்றும்மாணவர்கள் தெரிவித்துள்ளனர். (செ-11)

## சரத்தின் மருமகனிடம் சி.ஐ.டியினர் வாக்குமூலம்

(கொழும்பு)

சரத் பொன்சேகாவின் மருமகனான தனுன திலகரத்தனவிடம் குற்றப்புலனாய்வுத் துறையினர் நேற்று காலை வாக்குமூலம் ஒன்றைப் பதிவு செய்துள்ளதாக தெரிவிக்கப்படுகின்றது.

இந்த விசாரணைகளின் பின்னர் கருத்து தெரிவித்த தனுன, நீதிமன்ற உத்தரவுக்கு அமைய தான் இவ்வாறு வாக்குமூலம் அளித்துள்ளதாக தெரிவித்தார்.

பொன்சேகா இராணுவத் தளபதியாக இருந்த காலத்தில், ஆயுதக் கொள்வனவு தொடர்பில் ஏற்பட்டதாக கூறப்படும் மோசடி தொடர்பில், தனுன திலகரத்னவுக்கு எதிராக வழக்குத் தாக்கல் செய்யப்பட்டிருந்தமை குறிப்பிடத்தக்கது. (செ-11)

## சிங்கள சான்றிதழ் கற்கைநெறி விண்ணப்பம்

(யாழ்ப்பாணம்)

இலங்கைத் திறந்த பல்கலைக்கழகத்தின் யாழ்.பிராந்திய நிலையத்தினால் சிங்கள சான்றிதழ் கற்கைநெறிக்கான விண்ணப்பங்கள் கோரப்பட்டுள்ளன.

இக் கற்கைநெறி ஒரு வருட காலப் பகுதியியைக் கொண்டதாகவும் ஆரம்பப் பாடநெறி மற்றும் அடிப்படைப் பாடநெறி என இரு பிரிவுகளைக் கொண்டதாகவும் உள்ளது.

18 வயதிற்கு மேற்பட்ட அனைவரும் இக் கற்கைநெறிக்கு விண்ணப்பிக்க முடியும். விண்ணப்பப் படிவங்களை 31.03.2015 வரை பிறவுண் வீதி, கொக்குவிலில் அமைந்துள்ள யாழ்.பிராந்திய நிலையத்திலும் 155-ம் மைல் கல், கண்டி வீதி, கிளிநொச்சியில் அமைந்துள்ள கிளிநொச்சி கற்கை நிலையத்திலும் இரணைப்பாலை வீதி, புதுக்குடியிருப்பு, முல்லைத்தீவில் அமைந்துள்ள முல்லைத்தீவு கற்கை நிலையத்திலும் பெற்றுக் கொள்ளலாம் என யாழ்.பிராந்திய நிலைய உதவிப் பணிப்பாளர் தெரிவித்துள்ளார். (செ-11)

## கோட்டமட்ட போட்டிகள்

கிளிநொச்சி கரைச்சி கல்விக் கோட்டத்திற்குட்பட்ட 42 பாடசாலை மாணவர்கள் பங்கேற்கும் கோட்ட மட்ட விளையாட்டுப் போட்டி நேற்றையதினம் காலை ஆரம்பமாகி நாளை வியாழக்கிழமை வரை கிளி/மத்திய கல்லூரி மைதானத்தில் தொடர்ந்து மூன்று தினங்கள் நடைபெற்று வருகின்றன. இப்போட்டிகளில் பாடசாலை மட்டத்தில் நடந்த போட்டிகளில் வெற்றி பெற்ற மாணவர்களே கோட்ட மட்ட [illegible]

## ஆலயங்களில் சேதம் விளைவிப்பதற்கு அமைச்சர் சுவாமிநாதன் கண்டனம்

(கொழும்பு)

இந்து ஆலயங்கள் உடைக்கப்பட்டு பெறுமதிமிக்க சிலைகள், நகைகள் மற்றும் ஆலயப் பொருட்களை திருடப்படும் சம்பவமானது இந்து மக்கள் அனைவரையும் சினமடையச் செய்திருப்பதாக மீள்குடியேற்றம், புனர்நிர்மாணம் மற்றும் இந்துமத அலுவல்கள் அமைச்சர் டி.எம். சுவாமிநாதன் ஊடகங்களுக்கு விடுத்துள்ள கண்டனச் செய்தியில் தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

அண்மைக் காலமாக மீண்டும் இந்து ஆலயங்கள் உடைக்கப்பட்டு அங்குள்ள விலை மதிப்புள்ள பொருட்கள் திருடப்படும் சம்பவங்கள் அதிகரித்துள்ளன.

தெனியாய நகரிலுள்ள முருகன் ஆலயம் உடைக்கப்பட்டு பெறுமதிமிக்க சிலைகள் திருடப்பட்டுள்ளதைப் போன்று அங்குள்ள தோட்டப்பகுதி ஆலயங்களும் உடைக்கப்பட்டு பொருட்கள், சிலைகள் திருடப்பட்டுள்ளன.

அதேபோல் ஆரையம்பதி கோவில் குளம் பழைய கல்முனை வீதியில் அமைக்கப்பட்டிருந்த கிழக்கின் முதல் பெண் சிற்றரசியின் சிலை கடந்த ஞாயிறு இரவு இனந்தெரியாதோரால் உடைத்து சேதமாக்கப்பட்டுள்ளது.

அவ்வாறே அந்த பிரதேசங்களில் உள்ள பல கோயில்கள் இதற்கு முன்னர் உடைக்கப்பட்டு திருடப்பட்டுள்ளது. இதேபோன்று நாட்டின் பல பிரதேசங்களிலும் இவ்வாறான ஈனச்செயல்கள் தொடர்ந்தும் நடைபெற்று வருவதை வன்மையாக கண்டிப்பதோடு எதிர் வரும் காலங்களில் இவ்வாறான செயற்பாடுகளுக்கு துணைபோகின்றவர்களுக்கு எதிராக கடுமையான சட்ட நடவடிக்கை எடுக்கப்படும்.

எனவே இந்து ஆலயங்களை மீண்டும் உடைத்துப் பொருட்களை திருடும் கலாசாரத்தை உடன் நிறுத்திக் கொள்ளுமாறு சம்மந்தப்பட்டவர்களை கேட்டுக் கொள்கிறேன் என்று அமைச்சர் விடுத்துள்ள செய்தியில் தெரிவிக்கப்பட்டுள்ளது. (செ-11)

## யாழ்.வந்த இந்திய பிரதமருக்கு மக்களின் வரவேற்பு போதாது!

### குற்றம் சாட்டுகிறார் தவராசா

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணத்திற்கு வருகை தந்திருந்த இந்திய பிரதமர் நரேந்திர மோடிக்கு மக்களின் வரவேற்பு மிகவும் குறைந்தளவிலேயே இருந்தது . இதற்கு ஏற்பாடு செய்த நிர்வாகத்தில் பிழை இருப்பதாக வடக்கு மாகாண சபை யின் எதிர்க்கட்சித்தலைவர் தவராசா குற்றஞ் சாட்டியிருந்தார். வடக்கு மாகாண சபையின் 26ஆவது அமர்வு நேற்று கைதடியில் உள்ள வடக்கு மாகாண சபையின் கட்டடதொகுதியில் இடம் பெற்றது.

இதன்போதே அவர் மேற்கண்டவாறு குற்றச்சாட்டினை முன்வைத்தார். அவர் மேலும் தெரிவிக்கையில், நீண்ட கால இடைவெளிக்குப் பின்னர் இலங்கைக்கு வந்திருந்த இந்திய பிரதமர் ஒருவர் முதன் முதலாக யாழ்ப்பாணத்திற்கு வந்திருந்தார். இந்த வேளையில் மக்களது வரவேற்பு அமோகமாக இருக்க வேண்டும்.

ஆனால் அவ்வாறு இருக்கவில்லை. மிகவும் குறைந்த வரவேற்பே வழங்கப்பட்டு இருந்தது. மேலும் கீரிமலையில் நடைபெற இருந்த வீடுகளைக்கையளிக்கும் நிகழ்வில் மோடி கலந்து கொள்வதற்காக சென்ற காங்கேசன்துறை வீதியில் தோரணங்கள் கட்டப்பட்டிருந்தன.

இருப்பினும் தோரணத்திற்கு கீழ் வீதியில் குப்பைகள் காணப்பட்டன. அதனை அகற்ற வேண்டும் என்ற எண்ணம் கூட யாழ். மாநகர சபைக்கோ அல்லது சம்பந்தப்பட்ட அதிகாரிகளுக்கோ வரவில்லை. நிர்வாகத்தில் பிழைகள் இருக்கின்றது.

இவ்வாறான சந்தர்ப்பங்களை மேற்கொள்வதற்கு நாம் தவறிவிட்டோம். எனவே, எதிர்காலத்தில் இவ்வாறான சம்பவங்கள் எதிர்காலத்தில் நடைபெறக் கூடாது என்றும் அவர் மேலும் தெரிவித்தார். (செ-11)

## தலைமைப் பதவியை வழங்கினால் அதனை செய்ய அனுமதியுங்கள்

### ஜனாதிபதி மைத்திரி சுட்டிக்காட்டு

தலைமைப் பதவியை வழங்கினால் அதனை செய்ய அனுமதிக்கப்பட வேண்டுமென ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன தெரிவித்துள்ளார்.

கடந்த காலங்களில் கட்சித் தலைவர்கள் பதவி விலகிய போது முன்னுதாரணமான முறையில் நடந்து கொண்டனர்.

1977-ம்ஆண்டு தோல்வியின் பின்னர் ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சிக்கு நேர்ந்த நிலைமை எனக்கு நன்றாகத் தெரியும். எதிர்காலத்தில் அவ்வாறான ஓர்சம்பவம்இடம்பெறுவதனை தடுக்க மனச்சாட்சிக்கு விரோதமின்றி அனைவரும் செயற்பட வேண்டும்.

நாடு எதிர்நோக்கி வரும் பிரச்சினைகளை எதிர்நோக்க சிங்கள, தமிழ், முஸ்லிம் மக்கள் இணைந்து செயற்பட வேண்டும். இனவாத கோசங்களினால் நாட்டை மீளவும் போரை நோக்கி நகர்த்தக் கூடாது. அவ்வாறு நடந்தால் அது பாரியளவிலான போராக மாறிவிடும்.

வரலாற்றில் முதல் தடவையாக வடக்கின் அனைத்து கட்சிகளையும் ஒரே மேடையில் இணைக்க என்னால் முடிந்தது என அவர் குறிப்பிட்டுள்ளார்.

ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் தொகுதி அமைப்பாளர்களை நேற்று சந்தித்த போது ஜனாதிபதி இதனைக் குறிப்பிட்டுள்ளார். (எ-11)

## பகவான் ஸ்ரீ இராமகிருஷ்ணரின் சிந்தனைச் செல்வம்

### சொன்னதைக் காப்பாற்று



✦ மனம் என்னும் பாத்திரத்தை பிரார்த்தனை மூலம் துலக்கினால் தூய்மையுடன் இருக்கும்.

✦ கடவுளின் திருநாமத்தை தினமும் ஓதினால், பாவம் அனைத்தும் ஓடி விடும்.

✦ ஒரு மனிதனின் மனநிலைக்கு ஏற்பவே அவனுடைய வாழ்வியல் சூழ்நிலையும் அமைகிறது.

✦ சொன்ன வார்த்தையை மனிதன் காப்பாற்ற வேண்டும். 'இல்லாவிட்டால் நம்பகத்தன்மை அற்றவனாகி விடுவான்.

✦ கடவுள் ஒருவரே நம்முடைய ஒரே பலம். அவரில்லாமல் நம்மால் எதுவும் செய்ய இயலாது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சச்சினை நெருங்கும் சங்கா



உலகக்கிண்ணத் தொடரில் இன்று நடக்கவுள்ள காலிறுதிப் போட்டியில் சச்சினின் சாதனையை சமன்செய்ய சங்கக்காரவுக்கு பிரகாசமான வாய்ப்பு உள்ளது.

நடப்பு உலகக்கிண்ணத் தொடரில் அசத்தி வரும் சங்கக்கார தொடர்ச்சியாக 4 சதங்கள் விளாசி வரலாறு படைத்தார்.

இவர் சிறந்த பார்மில் இருப்பதால், இன்று நடக்கவுள்ள தென்னாபிரிக்காவுக்கு எதிரான முதல் காலிறுதி ஆட்டத்திலும் சதம் விளாச வாய்ப்பிருக்கிறது.

சங்கக்கார இதுவரை 5 உலகக்கிண்ணத்தில் விளையாடி 5 சதங்களை குவித்துள்ளார். அவர் இன்றைய போட்டியிலும் சதம் அடிக்கும் பட்சத்தில் அவரது உலகக் கிண்ண சதங்களின் எண்ணிக்கை 6 ஆக உயரும்.


இதன் மூலம் இந்திய அணியின் முன்னாள் ஜாம்பவான் சச்சினுடைய உலகக்கிண்ண சாதனையை சமன் செய்ய அவருக்கு நல்ல தொரு வாய்ப்பு கிடைத்திருக்கிறது.

6 உலகக்கிண்ணத் தொடர்களில் விளையாடியுள்ள சச்சின், 6 சதங்களை எடுத்துள்ளார்.

இன்று நடக்கவுள்ள போட்டியில் சங்கக்காரவை விரைவில் வீழ்த்த தென்னாபிரிக்க அணித் தலைவர் டிவில்லியர்ஸ் சில வியூகங்களை செய்வார் என்பதில் சந்தேகம் இல்லை. (க)




## ரெய்னாவுக்கு
# டும் டும் டும்



இந்திய கிரிக்கெட் அணியின் நட்சத்திர வீரர் சுரேஷ் ரெய்னாவுக்கு எதிர்வரும் ஏப்ரல் மாதம் 3 ஆம் திகதி திருமணம் நடக்கவிருக்கிறது.

இந்திய அணியில் பட்டையை கிளப்பிவரும் சுரேஷ் ரெய்னா விறகு 2 ஆவது இன்னிங்ஸ்தொடங்கி விட்டது. அதாவது அவருக்கு திருமணம் நிச்சயிக்கப்பட்டுள்ளது.

மணமகள் பெயர் பிரியங்கா சவுத்திரி. உத்தர பிரதேச மாநிலம் மீரட் நகரை சேர்ந்த இவர், தற்போது ஆலந்து நாட்டில் பணிபுரிகிறார்.

இவர் சுரேஷ் ரெய்னா தாயின் நெருங்கிய தோழியின் மகள் ஆவார். குழந்தையாக இருக்கும் போதே இருவரது குடும்பத்துக்கும் நெருங்கிய பழக்கம் இருந்தது.

பின்னர் பிரியங்காவின் குடும்பத்தினர் பஞ்சாப் மாநிலத்துக்கு இடம் பெயர்ந்து விட்டனர். அதன்பிறகு இரு குடும்பத்துக்கும் இடையே தொடர்பு இல்லாமல் போனது.

இதைத் தொடர்ந்து சில வருடங்களுக்கு முன்பு இருவரது குடும்பத்தினரும் ஒரு விழாவில் சந்தித்துக் கொண்டனர்.

அப்போது பிரியங்காவை பெரிய பெண்ணாக பார்த்த ரெய்னாவின் தாய், தனது மகனுக்கு திருமணம் செய்து வைக்க முடிவு செய்தார். இதற்கு ரெய்னாவும் சம்மதித்து விட்டார்.


ரெய்னா-பிரியங்கா திருமணம் எதிர்வரும் ஏப்ரல் மாதம் 3 ஆம் திகதி டில்லியில் உள்ள ஒரு பிரபல ஹொட்டலில் நடக்கிறது.

உலகக்கிண்ண இறுதிப்போட்டி எதிர்வரும் 29 ஆம் திகதி நடக்கிறது. மறுநாள் இந்திய அணி டில்லி திரும்புகிறது.

3 ஆம் திகதி நடைபெறும் திருமணத்தில் கிரிக்கெட் பிரபலங்கள் மற்றும் உறவினர்கள் கலந்து கொள்கிறார்கள்.

சுரேஷ் ரெய்னா ஏற்கனவே நடிகை சுஷ்தி ஹாசன், அனுஷ்கா சர்மா ஆகியோருடன் கிசுகிசுக்கப்பட்டார் என்பது குறிப்பிடத்தக்கது. (க)

## என்னை திருமணம் செய்யுங்கள்
## காத்துக் கிடக்கும் இந்திய ரசிகை




இந்திய ரசிகை ஒருவர் ரெய்னாவை திருமணம் செய்து கொள்ள வேண்டுமென, இந்திய வீரர்கள் தங்கியிருக்கும் ஹொட்டலுக்கு வெளியே காத்துக் கொண்டுள்ளார்.

உலகக்கிண்ணத் தொடரில் சிம்பாவே அணிக்கு எதிரான கடைசி லீக் ஆட்டத்தில் அதிரடியில் மிரட்டிய ரெய்னா சதம் அடித்து இந்திய அணியை வெற்றி பெறச் செய்தார்.

இவரது ஆட்டத்தை பார்த்து அசந்து போன வைஷ்ணவி என்ற ரசிகை அவர் தங்கி இருக்கும் ஹொட்டலுக்கே கிளம்பி சென்று விட்டார்.


கையில் 'Raina, make me your dulhaniya' (என்னை உங்களுடைய மணப் பெண்ணாக ஏற்றுக் கொள்ளுங்கள்) என்று எழுதிய ஒரு பனருடன் இந்திய வீரர்கள் தங்கி இருக்கும் ஹொட்டலுக்கு வெளியே ரெய்னாவின் வருகைக்காக காத்துக் கொண்டிருக்கிறார்.

இது குறித்து வைஷ்ணவி கூறுகையில், நான் 2 மணி நேரமாக இங்கு ரெய்னாவின் வருகைக்காக காத்துக் கிடக்கிறேன்.

காவலாளியிடம் அவர் எப்போது வருவார் என்று கேட்டுப்பார்தேன். அவர் என்னை உள்ளே விட மறுத்து விட்டார் என்று கூறியுள்ளார்.

மேலும் எனது ஆதரவு எப்போதும் ரெய்னாவிற்கு உண்டு என்றும், இந்தியா கண்டிப்பாக இறுதிப் போட்டியில் விளையாடும் எனவும் தெரிவித்துள்ளார். (க)

# முகமது இர்பான் விலகல்



அவுஸ்திரேலியா-பாகிஸ்தானுக்கு இடையேயான காலிறுதி போட்டி எதிர்வரும் 20 ஆம் திகதி அடிலெய்டில் நடைபெறவுள்ளது.

இதில் பாகிஸ் தானின் முன்னணி வேகப்பந்து வீச்சாளர் முகமது இர்பான் காயம் காரணமாக பங்கேற்றவில்லை என அறிவிக்கப்பட்டுள்ளது.

முகமது இர்பானுக்கு இடுப்பு பகுதியில் ஏற்பட்டுள்ள காயத்தால் அவதிப்பட்டு வருகிறார். இந்த காயம் காரணமாக அயர்லாந்துக்கு எதிரான போட்டியில் அவர் விளையாடவில்லை.

இதுபற்றி பாகிஸ்தான் கிரிக்கெட் அமைப்பு வெளியிட்டுள்ள அறிக்கையில், முகமது இர்பானுக்கு மருத்துவ பரிசோதனை மேற்கொள்ளப்பட்டுள்ளது.

அப்போது அவரது ஸ்கேன் ரிப்போர்ட்டில் பாதிப்பு இருந்தது தெரிய வந்தது. இதனால் அவர் எஞ்சிய போட்டியில் இருந்து விலகினார்.

ஏற்கனவே பாகிஸ்தான் அணி அதன் முக்கிய பந்து வீச்சாளர்களான அஜ்மல், உமர் குல், முகமது ஹபீஸ போன்றவர்களை இழந்து தடுமாறி வருவது குறிப்பிடத்தக்கது. (க)

## அதிர்ஷ்டம் இல்லாத
## வரலாற்றை மாற்றியமைப்போம்
## டிவில்லியர்ஸ்



தென்னாபிரிக்க அணி 'நாக் அவுட்' ஆட்டங்களில் அதிர்ஷ்டம் இன்றி தோற்றுவிடுகிறது. இதனால் இன்றைய ஆட்டத்தில் தென்னாபிரிக்கா வெற்றி பெற வேண்டும் என்று அந்நாட்டு ரசிகர்கள் எதிர்பார்க்கிறார்கள். கால்இறுதி ஆட்டம் குறித்து தெனனாபிரிக்கா அணி கப்டன் டிவில்லியர்ஸ் கூறியதாவது,

கால்இறுதி ஆட்டத்தில் முழு திறமையை வெளிப்படுத்துவோம். அதில் தான் எங்களது முழு கவனமும் இருக்கிறது. கடந்த கால தோல்விகளை (நாக்அவுட் சுற்றில்) மறந்து விடவேண்டும்.

ஏனென்றால் அது முடிந்து போனது. 'லீக்' ஆட்டங்களில் சிறப்பாகவே ஆடினோம். பாகிஸ்தானுக்கு எதிராக பந்துவீச்சு நன்றாக இருந்தது. பட்டிங்கில் சொதப்பிவிட்டோம். இம்முறை வரலாற்றை மாற்றி சாதிப்போம். இவ்வாறு அவர் கூறினார். (க)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## கூட்டமைப்பை பிளவு படுத்த...

வடமாகாண சபையின் 26-வது அமர்வு நேற்றைய தினம் நடைபெற்றிருந்த நிலையில் குறித்த அமர்வில் உரையாற்றும் போதே முதலமைச்சர் மேற்கண்டவாறு தெரிவித்திருக்கின்றார்.

அவர் சபையில் பிரதமர் ரணிலை சுட்டிக் கருத்து தெரிவிக்கையில்,

ஜனவரி 10-ம் திகதி கொழும்பில் பிரதமர் ரணிலை சந்தித்தபோது அவர் என்னிடம் கூறியிருந்தார். வடமாகாணத்திலிருந்து படையினரை வெளியேற்றமாட்டேன் என மஹாநாயக்க தேரர்களிடம் கூறப்போவதாக என்னிடம் கூறினார்.

இது 100வீதம் உண்மையான விடயம். ஆனால் அண்மையில் இந்திய ஊடகம் ஒன்றுக்கு வழங்கிய செவ்வியில் என்னை, பொய்க்காரன் என்றவாறாக சுட்டிக்காட்டியிருக்கின்றார்.

அதில் உண்மையில்லை. படையினர் வெளியேற்றம் தொடர்பில் அவருடைய நிலைப்பாடு தற்போது மாறியிருப்பதாகவே நான் கருதுகின்றேன்.

மேலும் முதலமைச்சருடன் நான் பேசப் போவதில்லை. நான் நாடாளுமன்ற உறுப்பினர்களுடன் பேசிக்கொள்கிறேன் என அவர் கூறியிருக்கின்றார்.

அது உண்மையில், தமிழ்த் தேசிய கூட்டமைப்பை பிளவுபடுத்தும் முயற்சியாக அல்லது உபாயமாகவே நான் பார்க்கிறேன்.

தமிழ்த் தேசிய கூட்டமைப்பு என்பது ஒரு பாரிய விருட்சமாகும். அதன் கிளைகள் நாங்கள். எங்களுக்குள் பிரிவினைகள் இல்லை. இந்த விருட்சத்தின் கிளைகளை வெட்டி மரத்தை அழிக்க நினைக்கின்றார்கள்.

எம்மை வளப்படுத்துவது, செழுமைப்படுத்துவது, வடகிழக்கு மாகாண மக்களின் தற்கால, எதிர்கால நலன்சார்ந்த சிந்தனைப் பாற்பட்ட உரமேயாகும் என முதலமைச்சர் சுட்டிக்காட்டியிருக்கின்றார். (செ-11)

## தேசிய கீதத்தை...

கணேசனிடம், ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன நேற்று உறுதியளித்துள்ளார்.

இந்த உறுதிமொழி நேற்றைய தேசிய நிறைவேற்று சபை கூட்டத்தின்போது, மனோ கணேசன் எழுப்பிய கேள்விக்கு பதிலாக ஜனாதிபதியால் வழங்கப்பட்டது. இது தொடர்பில் மனோ கணேசன் ஊடகங்களுக்கு தெரிவித்ததாவது,

தேசிய கீதம் சிங்கள, தமிழ் மொழிகளில் ஒரே மெட்டில், ஒரே அர்த்தம் தொனிக்கும் வண்ணம் நீண்ட காலமாக பாடப்பட்டு வந்தது. கடந்த ஆட்சியின் போது இது தொடர்பில் எதிர்ப்பு தெரிவித்து அதை இனவாத நோக்கில் தடை செய்ய வேண்டும் என்ற கருத்தை விமல் வீரவன்ச மற்றும் அப்போது ஹெல உறுமய கட்சியில் இருந்த உதய கம்மன்பில போன்றவர்கள் முன்னெடுத்தார்கள்.

அந்நேரம் மொழி அமுலாக்கல் துறைக்கு பொறுப்பாக இருந்த அமைச்சர் வாசுதேவ நாணயக்காரவினால் இது தொடர்பில் காத்திரமாக நடவடிக்கை எடுக்க முடியாத நிலைமை ஏற்பட்டது.


இது தொடர்பில் எவ்வளவு எடுத்து கூறியும், முன்னாள் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ உறுதியான நிலைபாட்டை எடுக்காமல், இனவாதிகளின் கருத்துக்கு இடம் கொடுத்து வந்தார். இந்த குழப்ப நிலைமை காரணமாக ஒரு பிரிவு தமிழ், முஸ்லிம் சிவில் மற்றும் கல்வி அதிகாரிகளும் தன்னிச்சையாக இந்த தமிழ் மொழியிலான தேசியகீதம் பாடப்படுவதை தவிர்த்து அல்லது தடுத்து வந்தனர்.

இதனால் தமிழ் பேசும் பிரதேச நிர்வாக நிகழ்வுகளிலும், நாடு முழுக்க தமிழ், முஸ்லிம் பள்ளிக்கூட நிகழ்வுகளிலும் பெரும்பாலான சந்தர்ப்பங்களில் தமிழ் மொழியிலான தேசிய கீதம் பாட முடியாத நிலைமை ஏற்பட்டது.

இந்த குழப்ப நிலைமை இப்போது முடிவுக்கு வந்துள்ளது. இனி நாட்டில் எந்த ஒரு பகுதியிலும் தமிழ் மொழியிலான தேசிய கீதம், நிகழ்வை நடத்துபவர்களின் விருப்பத்தின்படி பாடப்பட முடியும். இதை தடுக்க முயல்பவர்கள் சட்டத்தை மீறுபவர்கள் ஆவர் என தெரிவித்தார். (செ-11)



வலிகாமம் வலய மட்ட பெண்களிற்கான பூப்பந்தாட்ட போட்டியில் பண்டத்தரிப்பு பெண்கள் உயர்தர பாடசாலையின் 19 வயதுப் பிரிவு மற்றும் 15 வயது பிரிவினர் சம்பியன் பட்டத்தினை பெற்றுள்ளனர். அவ்விரு அணிகளையும் படத்தில் காணலாம்.



அமரர் சச்சிதானந்தம் ஞாபகார்த்தமாக இ.ச.பேரம்பலம் சக நிறுவனத்தின் அனுசரணையுடன் கொக்குவில் ஐக்கிய விளையாடு கழகத்தால் நடத்தப்பட்ட மென்பந்து கிரிக்கெட் சுற்று போட்டியில் இணுவில் கலை ஒளி மற்றும் கொக்குவில் பொற்பதி இந்து விளையாட்டு கழகங்களுக்கிடையிலான மோதலில் இணுவில் கலை ஒளி வெற்றி பெற்று சம்பியனாகியது. அவ்விரு அணிகளையும் படத்தில் காணலாம்.

## எதிர்தரப்பில் ராஜீவ விஜயசிங்க

அரசமைப்பின் 19 ஆவது திருத்தத்திற்கு எதிர்ப்புத் தெரிவித்து நாடாளுமன்ற உறுப்பினர் ராஜீவ விஜயசிங்க பாராளுமன்றத்தில் நேற்று எதிர்த்தரப்பு ஆசனத்தில் அமர்ந்துள்ளார்.

பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவின் முன்னாள் தலைவர் பதவி நீக்கம் செய்யப்பட்டமை, 19-ம் திருத்தச் சட்டம் உள்ளிட்ட விடயங்கள் தொடர்பிலேயே இவர் இந்த நடவடிக்கையினை மேற்கொண்டதாக தெரியவந்துள்ளது.

கடந்த ஆட்சிக்காலத்தில் தேசியப் பட்டியலில் பாராளுமன்றத்துக்கு தெரிவான ராஜீவ விஜேசிங்க, கடந்த ஜனாதிபதித் தேர்தலின் போது மைத்திரிபால சிறிசேனவுக்கு ஆதரவளித்தார்.

பின்னர், மைத்திரிபால சிறிசேன தேர்தலில் வெற்றி பெற்று அமைந்த இலங்கையின் தற்போதைய புதிய அரசாங்கத்தில் உயர்கல்வி இராஜாங்க அமைச்சராகவும் ராஜீவ விஜேசிங்க நியமிக்கப்பட்டார்.

பின்னர் இவர் கடந்த மாதம் தனது பதவியை இராஜினாமா செய்தார் என்பது குறிப்பிடத்தக்கது. (செ-11)

## நெடியகாடு இளைஞர் வி.கழக உதைபந்தாட்ட சுற்றுத் தொடர்



நெடியகாடு இளைஞர் விளையாட்டு கழகம் யாழ் மாவட்ட ரீதியில் நடத்தும் jaffna challengers cup உதைபந்தாட்ட சுற்று தொடரில் 16.03-ல் நடைபெற்ற சூப்பர் 8 ஆட்டத்தில் வெற்றிலைக்கேணி சென் செபஸ்தியன் விளையாட்டு கழகத்தை எதிர்த்து விளையாடிய ஊரெழு றோயல் விளையாட்டு கழகம் 4:0 என்ற கோல்கணக்கில் வெற்றிபெற்றது. றோயல் அணி சார்பாக கஜகோபன் 2 கோல்களையும், சசிகரன், சயந்தன் தலா ஒவ்வொரு கோலினையும், பெற்றுக் கொண்டனர். நடைபெற்ற மற்றொரு சூப்பர் 8 ஆட்டத்தில் பாசையூர் சென் அன்ரனிஸ் விளையாட்டு கழகத்தை எதிர்த்து விளையாடிய நாவாந்துறை சென்மேரிஸ் விளையாட்டு கழகம் 1:0 என்ற கோல்கணக்கில் வெற்றி பெற்றது. மேரிஸ் அணி சார்பாக யூட் ஒரு கோலினை பெற்றுக்கொண்டார். நடைபெற்ற அடுத்த சுப்பர் 8 ஆட்டத்தில் அதிசக்தி விளையாட்டு கழகத்தை எதிர்த்து உடற்கல்வி ஐக்கியம் விளையாடியது. போட்டி எந்த கோல்களும் போடப்படாது சமநிலையில் முடிந்தது. (க)

## 23-ம் திகதி வலி. வடக்கில்...

தமிழ்ச் சங்க மண்டபத்தில் நடைபெற்றது. இந்த நிகழ்வில் கலந்துகொண்டு கருத்துத் தெரிவிக்கும் போதே அவர் இவ்வாறு தெரிவித்தார். அங்கு அவர் மேலும் தெரிவிக்கையில்,

வலி.வடக்குப் பகுதியில் படையினர் வசமுள்ள காணிகளில் ஆயிரம் ஏக்கரை நிலச் சொந்தக்காரர்களிடமே கையளிக்க 3 கிழமைகளில் நடவடிக்கை எடுக்கப்படும் என்று கடந்த பெப்ரவரி மாதம் 27 ஆம் திகதி மீள் குடியேற்ற அமைச்சர் டி.எம்.சுவாமிநாதன் தெரிவித்திருந்தார்.

இதன் முதற்கட்டமாக உயர் பாதுகாப்பு வலயத்துக்குள் அமைந்திருந்த வலி.கிழக்கு பிரதேச செயலகத்துக்குட்பட்ட வளலாய் கிராமத்துக்கு மக்கள் அழைத்துச் செல்லப்பட்டு தமது காணிகளை பார்வையிட அனுமதிக்கப்பட்டனர்.

குறிப்பாக கோப்பாய் பிரதேச செயலாளர் பிரிவுக்கு உட்பட்ட வளலாய் ஜே/284 கிராம அலுவலர் பிரிவில் உள்ள 236 ஏக்கர் காணியில் மக்களை மீளக்குடியமர்த்தத் திட்டமிடப்பட்டுள்ளது.

இவற்றைவிட, குறித்த பகுதியை அண்டிய மேலுமொரு கிராமத்தையும் சேர்த்து 400 ஏக்கர் நிலப்பரப்பில் மக்களை மீளக் குடியமர்த்த அரசு திட்டமிட்டுள்ளது. இந்த நிகழ்வு எதிர்வரும் 23 ஆம் திகதி நடைபெறும்.

இந்த நிகழ்வுக்கு ஜனாதிபதியும், பிரதமரும் வருகைதருவர். ஏனைய 600 ஏக்கர் காணிகளும் அடுத்த இரு மாதங்களுக்குள் விடுவிக்க நடவடிக்கை எடுக்கப்படும் என்று அரசு எம்மிடம் உறுதியளித்துள்ளது.

இதேவேளை பயங்கரவாத புலனாய்வுப் பிரிவு மற்றும், குற்றப் புலனாய்வுத் திணைக்களத்தினால் சமர்ப்பிக்கப்பட்டுள்ள, ஆவணங்களின் படி, சிறிலங்காவில் 275 அரசியல் கைதிகள் தடுத்து வைக்கப்பட்டுள்ளனர் என்ற விவரமும் எம்மிடம் கிடைத்துள்ளன.

அரசியல் கைதிகளின் விடுதலை தொடர்பாக, சொலிசிற்றர் ஜெனரல் சுகந்த கம்லத்தினால் அமைக்கப்பட்ட குழுவின் முதலாவது கூட்டம் நேற்று (நேற்றுமுன்தினம்) சட்டமா அதிபர் திணைக்களத்தில் நடந்தது.

இந்தக் கூட்டத்திலேயே, பயங்கரவாத புலனாய்வுப் பிரிவு மற்றும், குற்றப் புலனாய்வுத் திணைக்களம் என்பன, தம்மிடம் உள்ள அரசியல் கைதிகள் பற்றிய ஆவணங்களைச் சமர்ப்பித்தன. அவற்றில் உள்ள தரவுகளை நாம் பரிசீலித்த போது, 275 அரசியல் கைதிகள் பற்றிய பதிவுகள் உள்ளமை தெரியவந்தது. இவர்களில் மூன்று வகைப்பட்ட கைதிகள் இருக்கின்றனர்.

நீதிமன்றம் ஊடாகத் தண்டனை பெற்ற கைதிகளுக்கு ஜனாதிபதி பொது மன்னிப்பு குறித்தும், ஏனைய கைதிகளை விடுவிப்பது குறித்தும் மேலதிக நடவடிக்கைகள் குறித்தும் அரசுடன் நாம் தொடர்ந்து பேசி வருகிறோம் என்றார் சுமந்திரன் (செ-11)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## மோடிக்கு பரிசுப் பொருள்...

இந்திய தூதரகமே எமக்கு அறிவித்திருந்தது.

எனினும் பிரதமரின் நிகழ்ச்சி நிரல் குறித்து டெல்லியே தீர்மானிக்கின்றது என்றும் அங்கிருந்தே ஏற்பாடுகள் நடைபெறுகின்றது என்றும் எமக்கு அறிவிக்கப்பட்டிருந்தது. இதனால் பிரதமரின் நிகழ்ச்சி நிரல் குறித்து எமக்கு அறிவிக்கப்படவில்லை.

இறுதி நேரத்திலேயே நிகழ்ச்சி நிரல் வெளியிடப்பட்டது. அதற்கமைய யாழ். பொது நூலகத்தில் இடம்பெற்ற நிகழ்வில் நாங்கள் கலந்து கொண்டிருந்தோம்.

எனினும் அங்கு பிரதமரை வரவேற்கும் உரை கூட ஏற்பாடு செய்யப்படவில்லை.

அந்தநேரத்தில் யாழ். இந்திய துணைத்தூதரக தூதுவரை அணுகி இங்குவந்துள்ள பிரதமருக்கு வரவேற்பு உரை கூட எங்களால் கூற முடியாதா என கேட்டோம். டெல்லியிடம் கேட்டே பதில் கூற வேண்டும் என அவர் எங்களிடம் தெரிவித்திருந்தார்.

இறுதிநேரத்திலேயே வரவேற்பு உரை வழங்க அனுமதிக்கப்பட்டோம். அத்துடன் பிரதமருக்கு வழங்கவென நாங்கள் பரிசுப்பொருள் ஒன்றும் கொண்டு சென்றோம். ஆனால் அதனைக் கூட உள்ளே கொண்டு செல்ல எமக்கு அனுமதி வழங்கப்படவில்லை.

நாங்களும் கட்டுப்படுத்தப்பட்டோம். அவர்களே கூட்டி வந்து அவர்களே அழைத்துச் செல்வது போல இருந்ததே தவிர இங்கு வந்த பிரதமரை நாங்கள் அழைத்துச் சென்றோம் என்று இருக்கவில்லை.

அனைத்தையும் டெல்லியே ஏற்பாடு செய்திருந்தது. பிரதமர் வருகிறார் வரவேற்பதற்கான நடவடிக்கைகளை எடுங்கள் என்று எம்மிடம் அறிவிக்கப்பட்டிருந்தால் நாங்கள் சரியாக செயற்பட்டிருப்போம்.

எங்களுடைய உண்மையான மனோநிலையினை கூட அவருக்கு எங்களால் எடுத்துக்காட்ட முடியவில்லை என்றும் அவர் கவலை வெளியிட்டுள்ளார். (செ-11)


WORLD MOVIES - JAFFNA
Alliance Française de Jaffna
cordially invites you to the screening of
THE LAST DAYS OF POMPEII
Roman Naples and the eruption of Mt. Vesuvius.
(1959, 103 min.)
on
Thursday 19 March 2015 at 4:00 p.m.
at
Alliance Française de Jaffna.
61, Kachcheri-Nallur Road, Jaffna.
Phone: 021 222 8093
(9795)
English Language. English subtitles Free entrance


## ஆயுள் முழுவதும் விடுதலைப்...

காலப்பகுதியில் நேர்மையான முறையிலேயே எனது சேவையை முன்னெடுத்தேன். நான் எந்தவொரு ஊழல் மோசடிகளிலும் ஈடுபடவில்லை. எனவே தற்போது என்மீதான குற்றச்சாட்டுக்கள் தொடர்பில் நான் ஒருபோதும் அஞ்சப் போவதில்லை.

இதுகுறித்து நீதியான விசாரணை நடத்தப்பட்டால் உண்மை வெளிவரும். எனினும் தற்போது என்னுடைய நற்பெயருக்கு பாதிப்பை ஏற்படுத்தும் இலக்குடனேயே போலியான குற்றச்சாட்டுக்களை என்மீது சுமத்துகின்றனர். நீதியான விசாரணையின் பிற்பாடு என்னை கைது செய்தால் நான் சிறைவாசம் செல்லவும் தயாராகவுள்ளேன்.

முப்பது வருடகாலமாக இடம்பெற்ற யுத்தத்தின்போது எனக்கு அச்சுறுத்தல் இருந்தமையை எவராலும் மறுக்க முடியாத ஒன்றாகும்.

எனினும் புலம்பெயர்ந்துள்ள விடுதலைப்புலிகளின் சார்பானவர்களால் தற்போதும் எனக்கு அச்சுறுத்தல் இருக்கின்றது. யுத்தத்தை முடிவுக்குக் கொண்டு வந்தவர்கள் என்ற வகையில் முன்னாள் ஜனாதிபதியும் எனது சகோதரருமான மகிந்த ராஜபக்ஷவிற்கும் எனக்கும் வாழ்நாள் முடியும் வரையும் விடுதலைப்புலிகளின் அச்சுறுத்தல் தொடரும்.

முஸ்லிம்களுக்கு எதிராகச் செயற்பட்ட பொது பல சேனாவுக்கும் எனக்கும் எந்தவொரு தொடர்பும் இல்லை. நான் முஸ்லிம்களுக்கு எதிரானவனல்ல. அத்தோடு எந்தவொரு கும்பலுக்கும் நான் தலைமைத்துவம் வழங்கவில்லை.

ரத்னா லங்கா நிறுவனம் தொடர்பில் என்மீது பல்வேறு குற்றச்சாட்டுக்கள் சுமத்தப்படுகின்றன. 2010 ஆம் ஆண்டு அமைச்சரவையின் ஊடாக சட்ட ரீதியாக ஏற்றுக்கொள்ளப்பட்ட நிறுவனமே ரத்னா லங்கா நிறுவனமாகும்.

கடற்கொள்ளையர்களிடமிருந்து பாதுகாப்பைப் பெறும் நோக்குடனேயே இந்த நிறுவனத்தின் உதவியை நாம் பெற்றோம். ஐக்கிய நாடுகள் அமைப்புக் கூட கடற்பரப்பின் பாதுகாப்பிற்கு அனைத்து நாடுகளின் உதவியைக் கோரியிருந்த நிலையிலேயே நாம் இவ்வாறான செயற்பாட்டை முன்னெடுத்தோம்.

இதற்கு ஆயுதம் அவசியம். ஆயுதத்தை பாதுகாப்பதற்கு ஆயுதக் களஞ்சியசாலை அவசியம். எனினும் இந்த ஆயுதங்களை வைத்து என்மீது குற்றச்சாட்டுக்கள் சுமத்தப்படுகின்றன.

குறித்த பாதுகாப்புச் சேவைக்கு நாம் ஓய்வுபெற்ற எமது இராணுவ வீரர்களையே உபயோகித்தோம். எனவே இது தவறு என்பதையே என் மீதான குற்றச்சாட்டுக்கள் புலப்படுத்துகின்றன.

யுத்த காலத்தின்போது பாதுகாப்புச் செயலாளர் என்ற வகையில் அனைத்துத் தீர்மானங்களையும் நானே முன்னெடுத்தேன். இந்த விடயத்தில் நான் பொறுப்புடன் செயற்பட்டேன் என்றார் கோத்தபாய. (செ-11)


மோசடிக்காரரிடம் இனிமேலும் ஏமாறத் தேவையில்லை
இப்போது நேரடியாகவே கனேடிய முகவர் மூலம் தொழில்வாய்ப்புடன் நிரந்தர குடியுரிமை பெறுங்கள்
Doctors, Engineers முதல் => மேசன், தச்சுத் தொழிலாளர் வரை
பட்டம் பெற்றவர்கள் முதல் => கல்வித்தகைமை இல்லாதவர்கள் வரை
150க்கு மேற்பட்ட தொழில் நிலைகளுக்கு
180,000*க்கு மேற்பட்ட வெற்றிடங்கள்
கனேடிய அரசாங்கத்தின் உத்தியோகபூர்வ இணையத்தளத்தில் விபரங்களை முழுமையாக பார்வையிட்டு, குடிவரவு விதிமுறைகளின் பிரகாரம் உங்கள் விண்ணப்பத் தகுதியை நீங்களே அறிந்துகொண்டு சரியான முடிவை எடுங்கள்!
ஒவ்வொரு விண்ணப்ப படிநிலைகளுக்கும் கட்டம் கட்டமாக கட்டணம் செலுத்தலாம்!
தொழில் அனுபவம் இல்லாதவர்களுக்கு
O/L or A/L உடன் ஒரு வருட டிப்ளோமாவுடன் வேலைவாய்ப்பு
ஏற்கனவே விண்ணப்பித்தவர்கள்,
எமது சேவை மூலம் பயனடைந்தவர்கள் பற்றிய
மேலதிக விபரங்களை அறிந்தகொள்ள
www.sikaram.lk
(C-387)
* நிபந்தனைகளுக்கு உட்பட்டது
FREE Assessment
info@sikaram.lk என்ற மின்னஞ்சலுக்கு சுயவிபரக்கோவையை அனுப்பி உங்களுக்குப் பொருத்தமான வாய்ப்பு எது என அறிந்துகொள்ளுங்கள்
SIKARAM
Education Abroad
Work, Migration & Visa Solutions
Sikaram (Pvt) Ltd.,
275-2/1 & 2/2, மணிக்கூட்டுக்கோபுர வீதி.
யாழ்ப்பாணம் (வைத்தியசாலை பின்புறம்)
Tel: 0773 616 798 / 021 222 00 11


## 857 பேருக்கு...

காலங்களில் குறிப்பாக நாட்டில் ஏற்பட்ட நெருக்கடியான காலகட்டத்தில், பாதிக்கப்பட்ட மக்களுக்கு தரமான சுகாதார சேவையை வழங்கும் நோக்கில் ஒப்பந்த அடிப்படையில் பலர் சேர்த்துக் கொள்ளப்பட்டிருந்தனர்.

எனினும்கடந்த அரசில் அங்கம்வகித்த சில அரசியல்வாதிகளின் தலையீட்டினால் உரியவர்களுக்கு நிரந்தர நியமனம் வழங்கப்படாது வேறு மாவட்டங்களிலிருந்து அழைக்கப்பட்டவர்களுக்கு நியமனங்கள் வழங்கப்பட்டிருந்தன.

எனினும் தற்போதைய புதிய அரசியல் சூழ்நிலையில் உரியவர்களுக்கு நியமனம்வழங்க மாகாண சுகாதார அமைச்சினால் நடவடிக்கைகள் எடுக்கப்பட்டுள்ளது. இதன் முதற்கட்டமாக 857 பேருக்கு எதிர்வரும் நாட்களில் நிரந்தர நியமனம் வழங்கப்படவுள்ளது.

இதன்படி, யாழ்ப்பாண மாவட்டத்தில் 270 பேருக்கும், கிளிநொச்சி மாவட்டத்தில் 132 பேருக்கும், வவுனியா மாவட்டத்தில் 186 பேருக்கும், முல்லைத்தீவு மாவட்டத்தில் 106 பேருக்கும், மன்னார் மாவட்டத்தில்163 பேருக்குமாக மொத்தம்857 பேருக்குநியமனம் வழங்கப்படவுள்ளது.

இந்த நியமனங்கள், யாழ்ப்பாணம், கிளிநொச்சி மாவட்டங்களைச் சேர்ந்தவர்களுக்கு எதிர்வரும் 19 ஆம் திகதி கிளிநொச்சியிலும் வவுனியா, முல்லைத்தீவு, மன்னார் மாவட்டங்களைச் சேர்ந்தவர்களுக்கு எதிர்வரும் 21 ஆம் திகதி வவுனியாவிலும் வழங்கிவைக்கப்படவுள்ளதாக அந்த செய்திக் குறிப்பில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (செ-11)

## இந்தியாவின் செயற்...

பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் உரையாற்றிய போதே அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

13வது அரசியலமைப்பு திருத்தத்திற்கு அப்பாலான தீர்வுத்திட்டமொன்று வழங்கப்பட வேண்டும் என வடமாகாண முதலமைச்சர் சி.வி.விக்னேஸ்வரன் கோரிக்கை விடுத்துள்ளார்.

13வது அரசியலமைப்பு அமுல்படுத்தப்பட்டு வருவதாக இந்திய நரேந்திர மோடி தெரிவித்துள்ளார்.

ஈழம் வேண்டும் என வடமாகாண சபை உறுப்பினர் சிவாஜிலிங்கம் கோரி வருகிறார் என அவர் இங்கு சுட்டிக்காட்டியுள்ளார்.

ஆனால் இலங்கையில் ஈழம் உருவாகும் பட்சத்தில் அது இந்தியாவுக்கு பாரியளவில் அச்சுறுத்தலை ஏற்படுத்த கூடும் எனவும், இதனை புரிந்து கொள்ளாமல் இந்தியா முட்டாள்தனமாக செயற்பட்டு வருகின்றது எனவும் தேரர் தெரிவித்துள்ளார்.

மேலும் தற்போதைய அரசாங்கம் ஆட்சியமைக்க இந்திய உளவு பிரிவான றோ விசேட வேலைத்திட்டங்களை செய்துள்ளதாக அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.

இந்நாடு ஐக்கியமான நாடு எனவும், அதிகாரப்பகிர்வு எனும் பேரில் நாட்டை பிளவுபடுத்த அனுமதிக்க முடியாது எனவும் பெங்கமுவே நாலக்க தேரர் தெரிவித்துள்ளார். (செ-11)


வேலையாட்கள் தேவை
எமது நிறுவனத்திற்கு பின்வரும் இடங்களுக்கு பின்வரும் வெற்றிடங்களுக்கு வேலையாட்கள் தேவை.
விற்பனைப் பிரதிநிதி சாரதி அனுமதிப்பத்திரத்துடன். முகாமையாளர் கணனி அறிவுடையவர் (தங்கி வேலை செய்வோரும் விரும்பத்தக்கது.)
யாழ்ப்பாணம், கிளிநொச்சி, தொடர்புகளுக்கு :
0773867696, 0212240514 (C-388)


## சுகாதார அமைச்...

திருத்தங்களுடன் நியதிச்சட்டம் சபையில் அமைச்சர் சத்தியலிங்கத்தினால் முன் வைக்கப்பட்டது. அதனை உறுப்பினர் பரஞ்சோதி வழிமொழிந்தார். நியதிச்சட்டம் ஏகமனதாக சபையில் ஏற்றுக் கொள்ளப்பட்டுள்ளது.

மேலும் அனுமதிக்காக வடக்கு மாகாண ஆளுநருக்கு குறித்த சட்டம் அனுப்பி வைக்கப்படவுள்ளது.

அவர் அதை ஏற்றுக்கொண்ட பின்னர் சட்டம் நடைமுறைக்கு கொண்டு வரப்படவுள்ளது. (செ)


BRITISH COLLEGE OF HIGHER STUDIES
சர்வதேச பாடத்திட்டத்தின் தராதரத்திற்கு அமைய நவீன தொழில் நுட்பத்துடன் வழங்கும் கற்கை நெறிகள்
Spoken English with Grammar - Quick Learning Course 1½ Months
ஆங்கிலத்தில் சரளமாகக் கதைக்க விரும்புவர்களுக்காகவே நடாத்தப்படுகிறது. நீங்கள் ஆங்கிலத்தில் உரையாட 100% உத்தரவாதம் தரப்படும். மாணவர்கள், உத்தியோகத்தர்கள், மற்றும் ஆங்கிலம் கற்க விரும்பும் அனைவருக்காகவும் நடைபெறுகிறது.
இக் கற்கை நெறிகள் பரீட்சை எழுதிய மாணவர்கள், தொழில் தேடுவோர், தொழில் புரிவோர் மற்றும் ஆங்கிலம் கற்க விரும்பும் அனைவருக்கும் ஏற்றது.
Diploma In English 2 Months
ஒரு தொழில் தேடுவதாயினும் சரி, உயர் கல்வியினைத் தொடருவதாயினும் சரி ஆங்கிலத்தின் தேவையும், அதிலே உங்களின் புலமையும் இன்றியமையாதது. இவை யாவையும் கருத்திலே கொண்டு இக் கற்கைநெறி வடிவமைக்கப்பட்டுள்ளது. Spoken English course முடித்த அனைவரும் பயில வேண்டிய பாட நெறி.
★ வகுப்புகள் யாவும் புதிய தொழில் நுட்பத்திற்கமைவாக(Audio & Video visuals) கூடுதல் பயிற்சிகளுடன் நடாத்தப்படும்
★ எமது கற்கை நெறிகள் Reading,Writing, Speaking, Listening என வகைப்படுத்தப்பட்டு ஒவ்வொரு பிரிவும் மிகச் சிறந்த ஆசிரியர்களினால் கற்பிக்கப்படுகின்றது
★ Excellent Teacher's Panel & Individual Attention
★ கிழமை, வார இறுதி நாட்களில் காலை, மாலை நேர வகுப்புகள் உண்டு. குழுக்களாக அல்லது நிறுவனங்களைச் சேர்ந்தோர் குழுவாக வரின் அவர்களுக்கு விசேட வகுப்புகள் ஆரம்பிக்கப்படும்.
(C-385)
Batches Starts On
21.03.2015@ 9.00am
23.03.2015@ 9.00am
25.03.2015@ 9.00am
27.03.2015@ 9.00am
28.03.2015@ 9.00am
எமது கல்லூரியினால் நடாத்தப்படும் சர்வதேச கற்கை நெறி
IELTS 2½ Months (Academic & General)
International English Language Testing System
Student/Settlement Visa மூலமாக வெளி நாடு செல்பவர்களுக்கானது
WE GURANTEE BAND 6.0 AND ABOVE
Approved centre for Registering IELTS candidates in Jaffna
ஆரம்பத்தில் பயில சிரமப்படுபவர்களுக்கு கிழமை, வார இறுதி நாட்களில் பிரத்தியேக வகுப்புகள் நடைபெறும்
Free Free Free Free
British College of Higher Studies
No.15, Sirambiyady Lane (Off Stanley Road), Above Sathosa SM, Jaffna. Tel :021-2224550
HotLine(S) 0777585913, 0777222422, 0714299935



ALLIANCE FRANÇAISE DE JAFFNA
பிரெஞ்சு மொழியை பிரெஞ்சு முறையில் கற்றுக்கொள்ளுங்கள்
வடமாகாணத்தில் FRENCH EMBASSY யின்கீழ் இயங்கும் ஒரே சர்வதேச நிறுவனம்.
உலகம் முழுவதும் 1040+ கிளைகள்.
INTERNATIONAL DIPLOMAS.
ஆசிரியர்கள்: யாழ்.பல்கலைக்கழக பிரெஞ் விரிவுரையாளர்கள் (பிரான்ஸ் நாட்டவரும்)

(9794)
விபரங்களுக்கு உடன் அழையுங்கள்
021 222 8093 61, கச்சேரி-நல்லூர் வீதி, யாழ்ப்பாணம்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இப்பத்திரிகை வலம்புரி அன்.கோ ஸ்தாபனத்தாரால் இல.3,2 ஆம் ஒழுங்கை, பிறவுண் றோட், யாழ்ப்பாணம் என்னும் முகவரியிலுள்ள அவர்களது அச்சகத்தில் 18.03.2015 இல் அச்சிட்டு வெளியிடப்பட்டது.